விலை ரூபா: 14.00 பக்கங்கள்:- (16+8) **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 20 புதன்கிழமை (03.04.2002) தொலைபேசி 3378 ஒலி 105

O/L DAY CLASS
ஏப்ரல் 10இல்
ஆரம்பம்
பெயர் பதிவுகள்
ஏற்கப்படுகின்றன.

## அமெரிக்கா- பிரிட்டன்- பிரான்ஸ்
# 3நாட்டு யுத்தக் கப்பல்கள் கொழும்பு நோக்கி வருகை

## பா. விமானப்படைத்தளபதியும் வருகை
## மக்கள் மத்தியில் பரபரப்பு

(நமது நிருபர்)

**இம்மாதம் நடுப்பகுதியில் அமெரிக்கா, பிருத்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கடற்படைக்கப்பல்கள் கடற்படைத் தளபதிகள் மற்றும் உயரதிகாரிகள் சகிதம் கொழும்புத் துறை முகத்தை வந்தடையவுள்ளது. அதே நேரம் பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயர் மாஷல் அபி பீரும் ஒருவார உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வருகிறார்.**

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான் பின்பு அமெரிக்கா, பிரான்ஸ் பிருத்தானியா ஆகிய மூன்று நாடுகளனின் கடற்படைக் கப்பல்கள் கடற்படைத்தளபதிகள் உயர் அதிகாரிகள் சகிதம் கொழும்புத் துறை முகத்திற்கு வரவிருப்பது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விஜயமாக இருக்குமெனத் தெரி விக்கப்படுகிறது. இம் மூன்று நாடுகளின் கடற்படைக் கப்பல்களினதும், தளபதிகளினதும் கொழும்பு வருகை நல்லெண்ண அடிப்படையிலானது. என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எதிர்வரும் 15ம் திகதி பிரித்தானியாவின் கடற்படைக் கப்பல் சகிதம் கடற்படைத் தளபதி கடற்படை உயரதிகாரிகள் முதல் தடவையாக கொழும்பு வந்து

(8ம் பக்கம் பார்க்க)

## நோர்வே சமாதானக் குழு புலிகளுடன் பேச்சு

(வவுனியா)

நோர்வேயின் சமாதானக் குழு ஒன்று நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தியது. இவர்கள் விசேட ஹெலி மூலம் நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும் சமாதானக் குழுவிருக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்குப் புலிகள் தரப்பில் நியமிக்கப்பட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இம் மாதம் 6ந் திகதி சந்தித்துப் பேசவுள்ளார். (வ)

## வவுனியா சென்று
## புலிப் போராளிகளை வவு. தேரர் வரவேற்றார்

(வவுனியா)

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் கொடிய இன யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தைக் காண்பதற்கு முயற்சிக்கும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்

விடுதலைப் புலி உறுப்பினர்கள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்காக வவுனியாவுக்குள் பிரவேசித்த போது அவர்களை நேரில் சென்று வரவேற்ற வடக்குக் கிழக்கு மாகாண சங்கநாயக்கரும் வவுனியா போதிதக்ஸண விகாரதிபதியுமான சியம்பல கஸ்புவ விமலசார தேரர் மேற்கண்

## ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படும்
## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார் அவர் தொடர்ந்து

# அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருக்கக் கூடிய அதிகாரங்களை மாற்றி அமைக்கும் பொருட்டு அடுத்த மாத்திற்குள் அரசியல் யாப்புக்கான சீர்திருத்தம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் பாராளுமன்றில் நடைபெற்ற அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழு விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தப் புதிய யாப்பு சீர்திருத்தம் அமைந்திருக்கும்

(8ம் பக்கம் பார்க்க)

# 8ந் திகதி யாழ் கண்டி வீதியை அமைச்சர் ராஜித திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 8ந் திகதி திறக்கப்படும் ஏ-9 யாழ் கண்டி வீதியை காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கவுள்ளார்.

அரசின் சார்பில் இவ் வீதியை திறந்து வைப்பதற்காக மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக எதிர்வரும் 6ந் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் 7ந் திகதி காலை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் யாழ் நாகவிகாரை ஆகியவற்றுக்குச் சென்று ஆலய தரிசனம் செய்து கொண்டு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

# நோர்வேத் தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நேற்று மாலை இரண்டு மணி நேரம் சந்தித்துப் பேசவுள்ளார். ஜனாதபதி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போது நோர்வேத் தூதுவர் அரசுக்கும் விடுதலைப் புலிகள் புரிந்துணரவு ஒபபநதம தொடரபாக விளக்கிக் கூறினார். ஒப்பந்தம் கைச்சாத்தான பின் நோர்வேத் தூதுவர் முதற்தடவையாக சந்தித்துப் பேசியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் உடனிருந்தார். (வ)

# மன்னாரில் புலிகளுக்கு வரவேற்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு விடுதலைப் புலிகளின் குழுவொன்று நேற்று மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றது.

உயிலங்குளம் சோதனைச் சாவடி

(8ம் பக்கம் பார்க்க)

தைக் காண்பதற்கு முயற்சிக்கும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாறு வவுனியா விகாராதிபதி கூறியுள்ளார்.

குக் கிழக்கு மாகாண சங்கநாயக்கரும் வவுனியா போதிதக்ஸண விகாரதிபதியுமான சியம்பல கஸ்பவ விமலசார தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

(8ம் பக்கம் பார்க்க)

# கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் நேற்று இரண்டாவது தடவையாகவும் சிரமதானப் பணி மூலம் பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8மணிக்கு துயிலும் இல்லப்பகுதிக்குச் சென்ற யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் இச் சிரமதானப் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டனர். இவர்களுடன் பொது மக்கள் மற்றும் சில போராளிகளும் இணைந்து அப்புனிதப் பிரதேசத்தைத் துப்புரவு செய்தனர். சிரமதானப் பணிகள் நிறைவு பெற்றதும் மாலை 3மணிக்கு தொழில் நுட்ப மாணவர் ஒன்றியத் தலைமையில் அஞ்சலி நிகழ்வு ஆரம்பமானது.

கல்லறைகளுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ''எங்கள் தலைவர் பிரபாகரன்'', ''எங்கள் நாடு தமிழீழம்'' எனும் கோஷங்களும் மாணவர்களால் எழுப்பப்பட்டது. (இ)

# ஜனாதிபதியின் பாதுகாப்புப்பிரிவு பணிப்பாளர் நேற்றுக் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரும் பிரதிப் பொலிஸ் அத்தியேட்சகருமான நிகால் கருணாரட்ணாவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுப் பிற்பகல் நவலோக ஆஸ்பத்திரியில் வைத்துக் கைது செய்தனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் எஸ். பி. திஸநாயக்காவின் ஆதரவாளர்களைத் தாக்கி விடுவதற்கு முயற்சி செய்த சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கண்டி மேலதிக நீதவான் முன்னிலையில் நேற்று ஆஜராக தவறியதை அடுத்தே இவர் கைது செய்யுப்பட்டுள்ளார்.

(2ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை

யாழ் நகருக்கு சமீபமாக கடற்கரையை அண்டிய பகுதியில் ஒரு ஏக்கர் காணி தேவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி விளம்பர இல. 242, மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம். (C-3790)

### தேவை

யாழ். நகரில் வர்த்தக நிலையம் (கடை) ஒன்றிற்கு சிறிய கட்டடம் (தளபாடங்களுடன்) உடன் வாடகைக்குத் தேவை. பிரதான வீதிகளை அண்டியிருப்பது விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும் மே/பா வலம்புரி விளம்பர இல: 243 யாழ்ப்பாணம். (4906)

### இலவச திருமண சேவை

உடுவூர், வெளியூர் மணமக்க ஜாதங்க திருமணத்திற்காக தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளுங்கள் இலவச சேவை ஜாதகம் கொடுப்பது என் கடமை. விசாரித்து செய்வது தங்க கடன். உங்க எதிர்காலம் பற்றி சிந்திக்கும் வேளையில் சந்தித்துப் பாருங்கள். சோதிடர் V. A சிவராசா 152 B, அரசடி றோட், சந்தர்படாம் யாழ்ப்பாணம். (4911)

### தமிழ்மூலம் ஆங்கிலம்

ஆங்கிலமொழியை மிக இலகுவில் கற்றிடலாம் எழுத, பேச (Fluently Speaking வாசிக்க சிறந்த தேர்ச்சி பெறுங்கள். இது இலகு நடை சுயமாக கற்றிடும் கற்கை நெறி, SELE STUDY COURSE மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்க K N R. 39 கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (4914)


# க.பொ.த. சாதாரண பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகின. யாழ்குடாநாட்டுப் பாடசாலைகளில் வெளியாகியது. யாழ் குடாநாட்டுப்பாடசாலைகளில் மாணவர்பெற்ற பெறுபேறுகள் பாடசாலை ரீதியாக பின்வருமாறு.

யாழ். இந்துக்கல்லூரி

சதானந்தசர்மா ரமணன் 10ஏ குமாரவடிவேல் குருபரன் 10ஏ இராமையா ஹேமபாலா 9ஏ, எஸ் கோபாலகிருஷ்ணன் நிசாந்தன் 9ஏ, பி சுந்தாலிங்கம் கோகுலராஜ் 9ஏ, சி மகாதேவா கலாரூபன் 9ஏ, பி அருட்பிரகாசம் சுஜீவன் 9ஏ, சி குலேந்திரன் அனுஷன் 8ஏ, பி, சி சூரியகுமார் பொன்னையா கோகுலசங்கர் 8ஏ, பி, சி அச்சுதன் கிரிதரன் 8ஏ, பி, எஸ் விமலேந்திரன் நஜன் 8ஏ, சி, எஸ் இராமநாதன் தனேசன் 8ஏ, 2பி சச்சிதானந்தம் மயூரன் 8ஏ, 2பி மகேஸ்வரன் விஷ்ணுகாந் 8ஏ, பி, சி வேலுப்பிள்ளை ஜனார்த்தனன் 8ஏ, பி, எஸ் துசாரா ஜா ரஜீவ் 8ஏ, பி, சி சிவலிங்கம் சனாதனன் 8ஏ, பி எஸ் வேலாயுதம் சாரங்கன் 8ஏ, 2பி கனகநாயகம் சுந்தன் 8ஏ, பி, சி பஞ்சாட்சரம் அருள்ரங்கன் 7ஏ, பி, சி, எஸ். இராஜகுலேந்திரன் இராஜ ஜீ 7ஏ, பி, 2எஸ் பத்மராசன் சதீஸ்குமார் 7ஏ, பி, சி, எஸ் துரைசிங்கம் துஸ்யந்தன் 7ஏ, பி, 2சி தர்மகுமார் அருண்சாந் 7ஏ, பி, 2 எஸ் இராஜரத்தினம் சுவீந்தன் 7ஏ, 2பி சி. செல்வராஜா துவாரகன் 7ஏ, 2சி, எஸ் சுந்தசாமி அர்சுதன் 7ஏ, பி, சி, எஸ் செல்வரத்தினம் கோகுலன் 7ஏ, பி, 2சி பரமானந்தம் சத்தியராகவன் 7ஏ, 2பி, சி விஸ்வலிங்கம் தனேஸ்குமார் 7ஏ, 2பி, சி, இராமலிங்கம் சுசந்திரன் 7ஏ, பி, சி, எஸ் சிவசுப்பிரமணியம் சுஜன் 7ஏ, பி, சி, எஸ் குமரகுருநாதன் தினேஸ்குமார் 7ஏ, பி, எஸ், டயி யூ சிவகுருநாதன் ஹரிகரன் 7ஏ பி, 2சி அருள்சோதிநாதன் கிருபாகரன் 7ஏ, 2பி, எஸ் சோமசுந்தரம் பிரிந்தாபன் 7ஏ, பி, 2சி உதயபாரதிலிங்கம் தமிழ்மாறன் 7ஏ, பி, சி, எஸ்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி

பூ அநிதா 9ஏ, பி, ச. ரஜிதா 9ஏ எஸ், ச. தனுஜா 8ஏ, பி, சி, ஜெ. ஜீவா 7ஏ, 2பி, எஸ், ந. மாதங்கி 7ஏ, 2பி, சி ச. நிசாயினி 7ஏ. 2பி, எஸ் தெ. தர்ஷிகா 7ஏ. 2பி, சி ந. வேணுகா 6ஏ, 3பி, 2சி செ கோபிகா 6ஏ, 2பி, 2சி மா. அனுஷானந்தி 6ஏ, 3பி, சி கி. பாரதி 6ஏ, 2பி, எஸ் செ. தர்சிகா 6ஏ, 2பி, சி, எஸ் ம, யசோநிதி 6ஏ, 2பி, 2சி ம. குமுதினி 5ஏ, 4பி. எஸ். சொ. குணசொர்ணர 5ஏ, 4பி, ம.மதுலா 5ஏ 3பி சி, உஸ் க, கார்த்திகா 5ஏ, 4பி. எஸ் க. கௌசலா 5ஏ 3சி, எஸ், ச. சுஜி 5ஏ, 3பி, 4சி சா. கோவர்த்தினி 4ஏ, 3பி, சி, 2எஸ் ர. மதிவதனி 4ஏ, 2பி, 3சி, எஸ் பா. மீன லோஜினி 4ஏ. 4பி, சி, எஸ் ஸ்ரீ வனஜா 4ஏ, பி, 3சி 2எஸ் இ. நிஷாலினி 4ஏ, 3பி, 2சி, எஸ ஜெ. ஜெயப்பிரபா 4ஏ, 2பி, 3சி எஸ் ப. சுவாதினி 4ஏ, 4பி 2சி ஜோ சர்மிலா 4ஏ, 2பி, 3சி ச. வாரணி 4ஏ, 4பி 2 எஸ்

மானிப்பாய் இந்துக்கல்லூரி

சி.ர ஜீவ் 7ஏ பி2சி ஏ செல்வராஜ 5ஏ 2பி 2சி வ.கிருஷ்ணராஜ் 4ஏ 4பி 2சி த தர்ஸன் 3ஏ 3பி 2சி 2எஸ் சி.விதுனன் 3ஏ 2பி 4சி எஸ் ந.செந்தூரன் 2ஏ 3பி 3சி எஸ் எஸ.திருக்குமரன் 2ஏ 3பி 2சி 2எஸ் மே.அனுந்தன் 2ஏ 5பி 2 எஸ் கு.எழிலன் 2ஏ 2பி 6சி இ சுதர்சன் 2ஏ 2சி 5எஸ் சு.கோபிநாத் 2ஏ 4பி சி எஸ் ப.கவாஸ்கர் 3ஏ 8சி 5எஸ் அ.கோகிலரஞ்சன் ஏ 4பி 3சி 2எஸ் ந.இரட்ணரா ஜா 3பி 5சி பா.அகிலன் ஏ 2பி 3சி 3எஸ்

மானிப்பாய் மகளிர் கல்லூரி

சங்கீதா சிவஞானம் 8ஏ-பி-சி கஜேந்தினி தனிகாசலம் 6ஏ-3பி-சி சகிலா சிறிதான் 5ஏ-2பி-3சி எ.பவானி 5ஏ-2பி-3சி ஜெ ஜீவிதா 4ஏ-3பி-2சி-எஸ் செ.பிறேமினி 4ஏ-2பி-4சி க.சங்கீதா 4ஏ-2பி-3எஸ் மு.அருந்தசா 4ஏ-பி-2சி-3எஸ்

இ.ரசிகா 3ஏ 2பி 3சி த.சசிதேவி 3ஏ 5பி சி எஸ் ஜே.சுதர்ஹினி 3ஏ பி 4சி எஸ் செ யாழ்ரா 2ஏ 2பி 2சி 4எஸ் லோ.நிஷாந்தி 2ஏ 2பி 3சி 3எஸ் ந.ரூபலக்கி 2ஏ 4பி 3சி எஸ் நா.சிவதர்ஹனி 2ஏ 2பி 4 சி 2எஸ் பு.நிஷானி 2ஏ 2பி 5ம எஸ்

கிளிநொச்சி வேம்பொடுகேணி சி.சி. த.க. பாடசாலை

சிவப்பிரகாசம் சிவனேந்திரா 6ஏ, பி, 2சி இராசலிங்கம் நகுலேஸ்வரன் பி, 2சி, 3எஸ் நவரத்தினம் நவநீதன் 4சி, 4எஸ் ராமு மனோகரன் 3சி, 3எஸ் பேரம்பலம் தர்சன் பி, 4சி, 3எஸ் கதிரன் ரூபகலா ஏ, பி, 2சி, 3எஸ் முத்தையா சசிதா 2ஏ, பி, 3சி, 3எஸ் ஜெயராசா சகாயமேரி 5சி, 2எஸ் நடராசா பத்மஜா ஏ, 3சி, 4எஸ், மயில்வாகனம் நித்தியா ஏ, பி, 4சி, எஸ் சின்னப்பிள்ளை சிலோசனா ஏ, 3சி 4எஸ், சிற்றம்பலம் பிறேமதீபா 3ஏ, 5பி, 2சி தங்கவேலு பிரியதர்சினி ஏ, 3பி, 2சி, 3எஸ் கே. ரஜந்தா ஏ, 4சி, 4எஸ் எஸ். அசோகரன் ஏ, பி, 2சி எஸ் எஸ் சங்கீதா ஏ, பி, 5சி, 2எஸ் எஸ்.சிவதர்மிளா 2பி சி, 4எஸ் வீ துஸ்யந்தி 2பி சி, 3எஸ் ஆர். தர்மேந்திரா 3சி, 5எஸ் ரீ.நித்தியதயாளன் 3சி, 4எஸ் வி.செந்தூரூபன் பி 2சி, 6எஸ்

ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை

வேதநாயகம் அகிலன் 5சி, 3எஸ் மகாலிங்கம் அனுசா ஏ, பி, 2சி, 4எஸ் சிவராசா சர்மிளா ஏ, 5சி, 3எஸ் பஞ்சலிங்கம் சுதர்சன் பி, 2சி, 4எஸ் கணேஸ் சயிதா 3சி, 4எஸ் அந்தோனிப்பிள்ளை சுயாத்தா பி-5சி-எஸ் பூபாலன் தனு சா4சி-3எஸ்

(தொடரும்)

## இளைஞர்களுக்கான கூட்டம் இன்று

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கான கூட்டம் இன்றுபி, ப4மணிக்கு பிரதேசஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சண்டிலிப்பாய் இளைஞர் சேவைமன்ற அதிகாரி அறிவித்துள்ளார். (த)

## ஜனாதிபதியின்

இச் சீர்திருத்தம் டொனமூர் அரசியல் யாப்பில்காணப்பட்ட நிறைவேற்று மன்ற அமைப்பு நடைமுறைக்கு கொண்டுவரவுள்ளது.

பாராளுமன்றத்துக்கு நிதி நிர்வாகம் தொடர்பான அதிகூடிய அதிகாரங்களை வழங்குதல் ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்தல் மற்றும் சட்டமாஅதிபர் பாராளுமன்றத்துக்கு மாத்திரம் பதில் சொல்லுதல் ஆகிய வகையில் இந்தத்திருத்தப்பிரேரணைகள் அமைந்துள்ளன.

பாராளுமன்ற தேர்தல் முறையினை மாற்றி அமைப்பது தொடர்பாக இணக்கப்பாடு காணப்பட்டுள்ள போதிலும் அதுதொடர்பான பிரேரணை இன்னமும் முற்றுப்பெறவில்லை எனக்கூறிய அமைச்சர் தேர்தல்முறையில் ஆகக்கூடுதலான வாக்குகளை பெறுபவர்பாராளுமன்றஉறுப்பினராகத் தெரிவுசெய்யப்படுவதுடன் விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பு முறையும் சேர்த்துக் கொள்ளப்படும் என்றார். இதே வேளைபொதுமக்களின் அபிலாசைகளை நிறைவுசெய்யும் வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட


# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)

## யாழ்ப்பாணம்

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2002 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை மு.ப பகல் 10.00 மணி வரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்) கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோரு

எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குக் தகுதியுடையோராவார்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தை செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப்பத்திரங்களை 2002 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விவைப்பு பணம் |
|---|---|---|---|
| 1. அரச பொறுப்பேற்கும் இல்லம்அமைத்தல் (கட்டம் 11) கைதடி | எம்-3 | ரூபா 13800/- | ரூ 500/- |
| 2. | | | |
| 3. ஸ்ரீ பரமானந்தா முதியோர் இல்லம் அமைத்தல் (கட்டம் 11) கரவெட்டி | எம்-9 | ரூபா 10,000/- | ரூ 500/- |
| 4. | | | |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம பொறியியலாளர்**
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-3790)

4எஸ், மயில்வாகனம் நித்தியா எ,பி,4சி,எஸ் சின்னப்பிள்ளை சிலோசனா எ,3சி 4எஸ், சிற்றம்பலம் பிறேமதீபா 3எ,5பி,2சி தங்கவேலு தயானந்தி பி,2சி,3எஸ் குலவீரசிங்கம் கவினா எ,2பி,5சி எஸ், முருகேசு சசிகலா 5எ, 4பி,சி மகேந்திரராசா மகிந்தன் 4சி,3எஸ் பஞ்சாச்சரம் மீனலோஜினி பி,2சி,5எஸ் கந்தசாமிஉதயதேவி3சி,3எஸ் சின்னையா லோகேஸ்வரன் பி-3சி 3எஸ்

**ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்**

ரீ.சுகாஜினி 4எ,3பி,சி, 2எஸ் வி.அஜந்தா 4எ,3பி2சி கே. மீனா 3எ,பி,5சி கே. சுகந்தா 2எ,பி,5சி,எஸ் கே. தாரணி 2எ,3சி,5சி,எஸ் எ. குகதாசன் 2எ,2சி,4எஸ் என்

வுராநாக கூறினார். இதே வேளைபொதுமக்களின் அபிலாசைகளை நிறைவுசெய்யும் வகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் சில அதிகாரங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் லொக்கு பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

இந்தத் திருத்தங்கள் தொடர்பான முதலாவது நகல் சட்டமூலம் அடுத்த மாதத்திற்குள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று கூறிய அவர் பிரதமர் ரணில்தலைமையிலான அரசுக்கு மக்கள் ஆட்சி அதிகாரத்தை வழங்கியுள்ளதால் ஜனாதிபதி மக்களின் தீர்ப்புக்கு பணிந்து நடக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார் (த)


# விசேட அன்னதானம்

அரியாலை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட S. T. அருளானந்தம் அவர்கள் லண்டன் மாநகரில் சிவபேறு எய்தியதை முன்னிட்டு அவர்களுடைய ஆத்ம சாந்திக்காக 4-4-2002 வியாழக்கிழமை நல்லூர் அறுபத்து மூன்று நாயனார் குருபூசை மடத்தில் மத்தியானம் 12-00 மகேஸ்வர பூசை நடைபெறும்.

**ந. நவரட்ணம்**
அறுபத்து மூன்று நாயனார் குருபூசை மடம்,
தேரடி நல்லூர்.

(4640)

# செய்தித் துளிகள்

‘உதயத்தைத் தேடி’

## கவிதை நூல்

### வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் கலை இலக்கிய வட்டத்தின் ‘உதயத்தைதேடி’ கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் கவிஞர் கிராமத்துக்குயில் ஓவியர் கே. ரஜீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை தேசிய இளைஞர் சேவை மன்றஉதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தியும் ஆய்வுரையை கவிஞர் எஸ். பத்மநாதன், ஆர். குமரன் ஆகியோரும் நயப்புரையை செல்வி ஆர். ஜெயரஞ்சினியும் ஆற்றவுள்ளனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரையையும், மேலதிக அரச அதிபர் ரி. வைத்திலிங்கம், திருமதி எஸ். அருள்நங்கை வி. மாணிக்கம், ஆகியோர் வாழ்த்துரைகளையும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடக்கவுரையை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ. சக்திவேலும் சிறப்புரையை யாழ் சேவை அறிவிப்பாளர் சுரேஸ் ஆனந்தும் ஆற்றவுள்ளனர்.

(உ-106)

## போரூட் உதவி

(தும்பளை)

போரூட் நிறுவனம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு 2வீடுகள், 2மலசல கூடங்கள், 2குழாய்க் கிணறுகள் என்பவற்றைக் கட்டிக் கொடுப்பதற்கான நிதி உதவியை தும்பளை தெற்கு சிக்கன கடனுதவிச் சங்கம் மூலம்வழங்கியுள்ளது.

அத்துடன் 4 ஆயிரம்ரூபா பெறுமதியான பாலர்பாடசாலை உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

(எ-245)

ஆதாரம் காட்டி

## நகைகளைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக்கிளையில், வாடிக்கையாளர் ஒருவர் தங்க நகைகளை தவறவிட்டுச் சென்றிருப்பதாகவும்,

## வருடாந்த மஹோற்சவம்

(மந்திகை)

துன்னாலை வல்லியானந்த பிள்ளையார்ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

(செ-23)

## புராணச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தாவடி அருள்மிகு வேகு விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தைமுன்னிட்டு தினமும் மாலை சேக்கிழார் புராணம் பற்றி இரா.செல்வவடிவேல் சொற்பொழிவு ஆற்றி வருகிறார்.

(செ-124)

## சூரபத்மன் வதைப்படலம்

(யாழ்ப்பாணம்)

வண்ணைசாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 8.00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை சூரபத்மன் வதைப்படலம் புராணபடனம் நடைபெற்று, முருகப்பெருமானுக்கு விசேட பூசையும் நடைபெறும்.

(செ)

## திறப்பு விழா

(மந்திகை)

புனரமைப்புச் செய்யப்பட்ட வல்வெட்டித்துறை ஆதிசக்தி சனசமூக நிலையத் திறப்பு விழா அண்மையில் நிலையத் தலைவர் க.சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது.

(உ-23)

## நெஞ்சுறுத்தும கானல்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் மிதிவெடி விழிப்புணர்வு‘ நெஞ்சுறுத்துப் கானல், நாடக ஆற்றுகை இன்று மு. ப 11. 00 மணிக்கு மட்டுவில் அமெரிக்கமிசன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

(உ-3)

## மத்திய கல்லூரியில் திரைப்பட சங்கம்

(யாழ்ப்பாணம்)

சலனசித்திரம் யாழ்பாணக் கிளையின் ஏற்பாட்டில்யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் திரைப்படச் சங்கமொன்று அண்மையில் ...

## விபத்தில் ஆசிரியர் படுகாயம்

(மந்திகை)

இராணுவ ..ாகனமும், மோட்டார் சைக்கிளும்ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஏற்பட்ட விபத்தில் ஆசிரியர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் துன்னாலைகிழக்கைச் சேர்ந்த தெ. புவனேந்திரன் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

(உ-23)

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது,

தலைவராக எஸ். செல்வகுமாரனும் செயலாளராக ஆர்.அசோகனும். பொருளாளராக ஆர். தேவராஜனும் நிர்வாக சபை உறுப்பினர்களாக கே.பிரசாந்தன் செல்வி எஸ். சின்னத்துரை ஆர். சுகந்தன் ஏ. றெஜினோல்ட் ஆகியோரும்தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-106)

## இராசி பலன்

03-04-2002
(பங்குனி 20, புதன்)
சஷ்டி பி. ப. 2.41 வரை
கேட்டை மு.ப. 11.44 வரை
ராகுகாலம்-12.10-1.40
நல்லநேரம்-4.40-6.10

**மேடம்**
பிரயாணம், புதிய திட்டமிடல், தொழில்முயற்சி, கௌரவக்குறைவு

**இடபம்**
முயற்சிதடங்கல் எதிர்பாராத பிரச்சினை, வியாதி, கடன்தொல்லை

**மிதுனம்**
சுவாரஸ்யம், நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம், தொழில்சிறப்பு

**கடகம்**
காரியநன்மை, தொழில் முன்னேற்றம், ஆரோக்கியம், குடும்பமகிழ்ச்சி

**சிங்கம்**
புத்திரரால் கவலை, செல்வாக்கு குறைவு, தொழில் கஷ்டம, அதிகாரிகள்

# சங்கே முழங்கு

## படமாளிகை ஒலிபெருக்கியால் மாணவர்கள் பாதிப்பு

பருத்தித்துறை தும்பளை வீதியில் அமைந்திருக்கும் மகாலட்சுமி படமாளிகையில் இரவுக் காட்சியாக 6.30 க்கு படம் காட்டும் போது கதை வசனம் பாடல்களை வெளியில் உள்ள ஒலிபெருக்கியில் அரை மைல் தூரத்துக்கு கேட்கும் படியாக அலறவிடுகிறார்கள்.

இதனால் பாடசாலை மாணவர்கள் படிக்க முடிவதில்லை. வயோதிபர்கள் அமைதியாக இருக்க முடியவில்லை. படம் பார்ப்பவர்கள் தியேட்டரின் உளளேதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் கேட்டால் போதாதா? வெளியில் அலறவிட்டு மாணவர்களின் படிப்பைக் குழப்புவதில் இவர்களுக்கு என்னலாபம்? இதற்கு யார் நடவடிக்கை எடுப்பார்கள்?

எஸ் கே லிங்கம்
சிவன் கோவிலடி- பருத்தித்துறை.

## க. பொ. த(உ/த) பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி மே மாதம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப்பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் இம் முறை வடக்கு கிழக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்ககள் உட்பட 12 மாவட்டங்களில் இடம் பெறும்என இலங்கைபரீட்சை ஆணையாளர் ஏ. எம். ஆர். பி. அமரக் கோன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில்மட்டக்களப்பு, அம்பாறை திருகோணமலை, வவுனியா, கல்முனை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி, பதுளை, குருநாகல், மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் அமைக்கப்படும் நிலையங்களில் விடைத்தாள்கள் திருத்தும் பணி இடம்பெறும் என்றும்,

இப்பணியின் முதலாம் கட்டமாக மே மாதம் 11ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையும் 2ஆம் கட்ட பணிகள் மே மாதம் 28 ஆம் திகதி முதல் ஜூன் 9 ஆம் திகதி வரையும் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-9,

சிறந்த எயர் லைன்ஸ் நிறுவனமாக

## ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் 2வதுதடவையாகவும்தெரிவு

(கொழும்பு)

மத்திய ஆசியாவில் இவ் வருட சிறந்த எயர் லைன்ஸ் நிறுவனமாக ஸ்ரீறிலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனின் உயர்தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், சுயேச்சையாக பிரயாணிகளின் மதிப்பீட்டை மேற்கொண்டதன் பிரகாரம் இவ் வருடத்துக்கான சிறந்த எயர் லைன்ஸ் நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் மத்திய ஆசியாவின் சிறந்த எயர் லைன்ஸ் நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது-

(உ-8)

ஆதாரம் காட்டி

## நகைகளைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில், வாடிக்கையாளர் ஒருவர் தங்க நகைகளை தவறவிட்டுச் சென்றிருப்பதாகவும்,

உரியவர் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெறலாம் எனவும் முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ)

## தீக்குளிப்பு உற்சவம்

(ஏழாலை)

ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய தீக்குளிப்பு உற்சவம் எதிர் வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும். (செ-206)

## பயிற்சி வகுப்புக்கள்

(மந்திகை)

சலன சித்திரம் அமைப்பின் தென்மராட்சிக் கிளை தொழில் நுட்ப பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புபவர்கள் உடுப்பிட்டி வீதியில் உள்ள வடமராட்சி கிளை அலுவலகத்தில் இயங்கும் தென்மராட்சி அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-23)

## மத்திய கல்லூரியில் திரைப்பட சங்கம்

(யாழ்ப்பாணம்)

சலனசித்திரம் யாழ்பாணக் கிளையின் ஏற்பாட்டில்யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் திரைப்படச் சங்கமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரி திரைப்படச் சங்கம் என்றபெயருடன் செயற்பட இருக்கும் இச்சங்கத்தின் காப்பாளராக கல்லூரி அதிபர் இராஜதுரையும் உத்தியோக பூர்வ ஆலோசகராக சலனசித்திரம் சம்மேளன பொதுச்செயலாளர் க.தேவதாசனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்தியகல்லூரி திரைப்படச் சங்க நிர்வாகக் குழுவுக்கு பின்வருவோர். தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர், ஏ. பாறூக், செயலாளர் எஸ். பார்த்தீபன், பொருளாளர். எஸ்.கிருஷ்ண குமார் உபதலைவர் ஆர். ராஜ்கரன், உபசெயலாளர் ஏ.சிவதர்சன், பத்திராதிபர். வி. சுஜீவன், நிர்வாக உறுப்பினர். நவநீதன், தர்ஷன், நிருசன். (உ-186)

### பிரிவுபசார விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறும் இறுதி வருட ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுபசார விழாஎதிர் வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ-19)

தொழில்சிறப்பு

**கடகம்**

காரியநன்மை, தொழில் முன்னேற்றம், ஆரோக்கியம், குடும்பமகிழ்ச்சி

**சிங்கம்**

புத்திரரால் கவலை, செல்வாக்கு குறைவு, தொழில் கஷ்டம, அதிகாரிகள் வெறுப்பு

**கன்னி**

உடல்நலக்குறைவு, உறவினர் சந்திப்பு, கல்விச்சிறப்பு, முயற்சி தாமதம்

**துலாம்**

காரியநன்மை, அன்னியர் சந்திப்பு, பொருள்சேர்க்கை, போசனசுகம்

**விருச்சிகம்**

காரிய விவாதம், பொருள் விரயம், மாதர்உதவி, உறவினர் வெறுப்பு

**தனுசு**

போசனசுகம், செல்வாக்கு, காரியநன்மை, தொழில் சிறப்பு

**மகரம்**

சகோதரர்உதவி, உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், பொருள் விரயம்

**கும்பம்**

நினைத்தகாரியம் கைகூடும், கௌரவம், பொருள்சேர்க்கை, குடும்ப சுகம்

**மீனம்**

அதிக பிரயாசை, பிறர் உதவி, முயற்சிகைகூடும், தொழில்விருத்தி

**வளவன்**

பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வருட சிறந்த எயர் லைன்ஸ் நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனின் உயர்தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், சுயேச்சையாக பிரயாணிகளின் மதிப்பீட்டை மேற்கொண்டதன் பிரகாரம் இவ் வருடத்துக்கான சிறந்த எயர் லைன்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் மத்திய ஆசியாவின் சிறந்த எயர் லைன்ஸ் நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது- (உ-8)

## கல்வி நடவடிக்கைகளுக்கு புலிகள் ஒத்துழைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வலயக்கல்விப்பணிமனைகளில் ஆசிரியர்கள் தமது தேவைகளை நிறைவேற்றி கொள்வதில் எதிர் கொள்ளும் அசௌகரியங்கள் குறித்து தனது நேரடி கவனத்திற்கு கொண்டுவருமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸ்வதின் அறிவித்துள்ளார்.

அலுவலகத்திற்கு வரும் அதிபர்கள் மற்றும்ஆசிரியரை மனிதாபிமானம், மற்றும் கௌரவத்துடன் ஊழியர்கள் அணுகுவதில்லை என பரவலான குற்றச் சாட்டுகள் வருவது குறித்து கவலை தெரிவித்ததுடன்,

சகலருடனும் கருணையுடன் நடந்துகொள்ளுமாறும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறை சார் நடவடிக்கைகளில் தற்போதைய சூழ் நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகுந்த ஒத்துழைப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (உ-9

## 7.5 தொன் ஹெரோயின் துருக்கியில் மீட்கப்பட்டது

துருக்கியில் பெருந்தொகையான ஹெரோயின் ரக மோர்ஹின் மயக்க மருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுவரை உலகில் கைப்பற்றப்பட்ட போதை மருந்தில் இதுவே மிகப் பெருந்தொகையானது எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இப்போதைப் பொருளின் நிறை ஏழரைத் தொன் ஆகும்.

இதன் சந்தைப் பெறுமதி இருபத் தொன்பது மில்லியன் டொலர்களாகும். (செ)

## வன்னித் தயாரிப்பான கண்ணிவெடி அகற்றும் கருவியைக் கண்டு நோர்வே குழு ஆச்சரியம்

### அதில் ஒன்றை வாங்கிச் செல்கை

(வவுனியா)

வன்னியில் கண்ணிவெடிகளை அகற்றப்பயன்படுத்தப்படும் கருவிகளைப் பார்வையிட்ட வெளிநாட்டு கண்ணிவெடி நிபுணர்கள் குழு அதனைப்பார்த்துஆச்சரியமடைந்ததுடன் அதில் ஒன்றைப்பெற்றும் சென்றுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்றதன்னார்வ மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அங்கு கண்ணிவெடிகளை அகற்ற பயன்படுத்தும் கருவிகள் வன்னியில் தயாரிக்கப்பட்டவை.

நோர்வேயைச் சேர்ந்த கண்ணிவெடி ஆலோசகரும் மத்திய கிழக்கு மத்திய ஆசிய இணைப்பாளருமான எரிக் டொலக்சன் நோர்வே மக்கள் உதவி நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்டைனர் எர்லோன் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்தகண்ணிவெடி செயற்பாட்டு மூலவள நிலையத்திட்ட ஆலோசகர் றிச்சட் மொய்ஸ் ஆகியோரே அண்மையில் வன்னி சென்ற போது,மேற்படி உள்ளூர் தயாரிப்பைக் கண்டு ஆச்சரியமுற்று அதிலொன்றை மாதிரிக்கெனப் பெற்றுச் சென்றுள்ளனர், (உ)

## முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து அமைப்பு உருவாக்கம்

(கொழும்பு)

பாதிப்புக்குள்ளாகி வரும், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் நல உரிமைகள் தொடர்பாகவும், அரசின் சமாதான முயற்சிகள் குறித்தும் கவனிப்பதற்கு சகலகட்சிகளிலும் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து சமாதானத்திற்கான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

பாராளுமன்றக் கட்டிடத்தில் நேற்று எம். எச். முகமட் தலைமையில் இடம்பெற்ற முஸ்லிம் எம். பிக்கள் கூட்டமொன்றிலேயேஇந்தஅமைப்பு உருவாக்கப்பட்டது.

இதில்ஐக்கியதேசியக் கட்சி, பொதுஜன ஐக்கியமுன்னணி, ஜே. வி. பி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தசுமார் 24 எம்.பிக்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஜே. வி. பியைச் சேர்ந்த அஞ்சானும் மா எம். பி. அமைச்சர் ரவூப் ஹக்கீம், பௌஸி உட்பட இதில்கலந்து கொண்டனர்.

இந்த அமைப்பு இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும், அதைத் தொடர்ந்து நோர்வே தூதுவரையும் சந்திக்கவுள்ளனர். (வ)ம்

## அடிக்கடி சுயிங்கம் மெல்வது பல்லுக்கு ஆகாது

(கொழும்பு)

சுயிங்கம் உட்கொள்வது கன்னத்து தசைகளுக்கும் பற்களுக்கும் நல்லது.

இந்தக் கண்டுபிடிப்பு மலையேறி விட்டது.

புதிய கண்டுபிடிப்பு என்னவென்றால்,

அடிக்கடி சுயிங்கம் உட்கொண்டால் அதிலுள்ள அமிலம் பற்களின் எனாமலை அரித்து எடுத்துவிடும்.

இதனால் பற்சிதைவு, பல்வலி ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்.

ஆகையால், அடிக்கடி சுயிங்கத்தைமென்று உங்களுக்குத் தீங்கை ஏற்படுத்துவதோடு, அயலில்உள்ளவருக்கும் எரிச்சலை ஏற்படுத்துவதை இனியாவது தவிர்த்துக் கொள்ளுங்கள். (உ)

### கொழும்பு பல்கலைக் கழகத்தினால்

## மாணவரிடையே கவிதை கட்டுரைப் போட்டிகள்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் இந்து மிழ் மாமன்றம், கொழும்பு மாவட்டம்தவிர்ந்த ஏனைய மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே இவ்வாண்டு கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இந்த வகையில்கீழ்ப்பிரிவில் அடங்கும் தரம் 7,8,9,10 மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டிகளும் மேற்பிரிவில் அடங்கும் தரம் 11,12,13 மாணவர்களுக்கு கட்டுரை கவிதைப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பு மாணவர்கள் இந்து மாமன்றம், இல. 93 தமர துங்க முனிதாஸ மாவத்தை, கொழும்பு- 3என்றமுகவரிக்கு மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய ஆண்டிற்கான நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடை பெற்றது.

அதன் பிரகாரம் நடப்பாண்டு நிர்வாகிகளாக,

தலைவராக செ குகதாசன், உப தலைவர்களாக சா. இராதாகிருஷ்ணன், சி. இலட்சுமிகாந்தன்,செயலாளராக. குகனேசம், உபசெயலாளராக இ. சந்திரகுமார், பொருளாளர் த. ஜெபகாந்தன்,

ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்கள் 9பேரும்தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ)

● ● ●

(யாழ்ப்பாணம்)

அரியாலை அருணோதய சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவார் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் இ. சேதுராசா, செயலாளர் ச. தனபாலசிங்கம், பொருளாளர் பூ. குகதாசன், உபதலைவர் க. சண்முகலிங்கம், உபசெயலாளர் பொ. ஆரா அமுதன் மற்றும்

நிர்வாகசபை உறுப்பினர்களாக க. சிவராசா, மு. தனபால சிங்கம், மு. சின்னத்துரை, சு. திலகேஸ்வரன், சு. சிவதர்சன், ம. கிருஷ்ணகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

● ● ●

(யாழ்ப்பாணம்)

மீசாலை கிராம அபிவிருத்தி மாதர் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றபோது,

## மணிக்கூடுகளை விரைவில் எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

புனரமைப்புச்செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மணிககூட்டுக் கோபுரத்தில் இன்னும் சில வாரங்களில் மணிக்கூடுகள் பொருத்தப்படலாம்எனஎதிர் பார்க்கப்படுகிறது.

மேற்படி கோபுரத்தின்புனரமைப்புப்பணிகளை அண்மையில் தென்பகுதியில் இருந்து வந்த விமலதர்மபிரதர்ஸ் கொம்பனியைச் சேர்ந்தவர்கள் பார்வையிட்டுச் சென்றதன் பிரகாரம்,

பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பாக வழங்கிய 4 மணிக்கூடுகளும் விரைவில் யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (உ-19)

### ஜனாதிபதிக்கான

## நிதி ஒதுக்கீடு குறைப்பு விளக்கம்கேட்கிறார்தினேஷ்

(கொழும்பு)

ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் யாவும் குறைக்கப்படாது இருந்த போதும் அவருக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டமையானது ஏற்க முடியாதது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு, செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் ... ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சில வேளைகளில் ஜனாதிபதியின் அறிவுரைகளைக் கேட்டு நடந்தாலும், அவரின் நிதி ஒதுக்கீடுகளில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் அவரை கட்டுப்படுத்தலாம் என நினைக்கிறது.

ஜனாதிபதி தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ள நிலையை விரைவில் வெளிப்

### இறக்குமதி செய்த உருளைக்கிழங்கின்

## விற்பனையை நிறுத்துமாறு அமைச்சர் ரவி உத்தரவு

(கொழும்பு)

பாகிஸ்தானில் இருந்து பழுதடைந்த உருளைக் கிழங்கை இறக்குமதி செய்தமைக்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய உயர் அதிகாரிகள் மீது வர்த்தக, பாவனையாளர் விவகார அமைச்சர் விசாரணைகளை மேற் கொண்டுள்ளார்.

இவ் வருடத்தின் எதிர்கால தேவையை பூர்த்தி செய்வதற்கு என 50 மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டது.

அந்தஉருளைக்கிழங்குகளில் 20 சதவீதமானவை பழுதடைந்துள்ளதால் அதன் விற்பனையை நிறுத்துமாறு அமைச்சர் ரவி கருணாநாயக்கா கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது பாவனைக்கு தேவையான உருளைக்கிழங்கு கையிருப்பில் இருப்பதுடன், உள்ளூர் உற்பத்தியிலிருந்தும் பெருமளவு சந்தைப்படுத்தப்பட்டு வருவதும் தெரிந்ததே. (உ-8)

### கலைஞானி அருங்காட்சியகத்துக்கு

## கனடாவில் இருந்து நிதியுதவி கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

கனடாவிலிருந்து வெளியாகும் 'தமிழன் வழிகாட்டி' யின் பிரதம ஆசிரியரும் மேற்படி நிறுவனத் தலைவருமான ... துறைகளில் காட்டிவரும் ஆர்வம் எமது மக்களிடம் மிகக் குறைவாக உள்ளதாகவும் அதனால் எமது வரலாறு மெல்ல மெல்ல அழிந்து

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு, செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனா இவ்வாறு வித்து ளார்.

படுத்தலாம் என நினைக்கிறது.

ஜனாதிபதி தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ள நிலையை விரைவில் வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

(யாழ்ப்பாணம்)

மீசாலை கிராம அபிவிருத்தி மாதர் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம் பெற்றபோது,

தலைவராக ஏ. திலகவதி, உபதலைவராகது. இந்திராணி செயலாளராக ந. றோகினி, பொருளாள ராசத. சறோஜா தேவி, போஷகராக பொ நல்லம்மா ஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர். (உ-12த)

(யாழ்ப்பாணம்)

கனடாவிலிருந்து வெளியாகும் 'தமிழன் வழிகாட்டி' யின் பிரதம ஆசிரியரும் மேற்படி நிறுவனத் தலைவருமான செந்தி செல்லையா அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

ஈழத்தமிழர்களின் வரலாற்றை படங்கள், குறிப்புகள் மூலமாக ஆவணப்படுத்தி வரும் அவர் குடாநாட்டில் பலரையும் சந்தித்து விபரங்களைச் சேகரித்தார்.

மாமனிதர் கலைஞானி அருங்காட்சியகத்திற்கு சென்ற அவர் அண்மையில் மறைந்த மாமனிதர் கலைஞானிக்கு அஞ்சலி செலுத்தியதுடன், அவரின் சேகரங்களில் சிலவற்றை பிரதி எடுத்துச் சென்றுள்ளார்.

வெளிநாட்டவர்கள் இத்துறைகளில் காட்டிவரும் ஆர்வம் எமது மக்களிடம் மிகக் குறைவாக உள்ளதாகவும் அதனால் எமது வரலாறு மெல்ல மெல்ல அழிந்து செல்வதாகவும் அவர் கவலை வெளியிட்டார்.

மேற்படி காட்சியகத்தின் இயக்குநர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தியுடன், காட்சியகத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடிய செந்தி செல்லையா தான் கனடா சென்றவுடன் அங்குள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அது நல்ல முறையில் இயங்குவதற்கு உதவிகள் பெற்றுக் கொடுக்கவும் உறுதியளித்தார். (உ-106)

## வன்முறைகளை தூண்டிவிடுவதாக மூன்று நாடுகள் மீது அமெ.சாடல்

(வாஷிங்டன்)

ஈரான், ஈராக் மற்றும்சிரியா ஆகிய நாடுகளே மத்தியகிழக்கில் வன்முறைகளைத்தூண்டிவிடுவதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால் றம்ஸ்மெல் குற்றம் சாட்டியுள்ளார்.

கொலைகாரர்கள் தியாகிகள் அல்ல, பொதுமக்களை இலக்காக கொல்வது முறையானதல்ல, தீவிரவாதிகள் மனிதசமூகத்தின் மீது யுத்தத்தை பிரகடனம் செய்கின்றனர்.

இந்நிலையில் அரசியல் கொலைகளையும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையும் தூண்டிவிடும் வகையில் இம்மூன்று நாடுகளும் நிதியுதவி வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## சிவில் நிர்வாக அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சிவில் நிர்வாக அலுவலகம், தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாகவுள்ள தனியார்வீடொன்றில் இயங்கி வருகின்றது. (உ-124)

## பாலம் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

போர் அனர்த்தங்களினால் சேதமான யாழ். கண்டி வீதியில் உள்ளநாவற்குழிப்பாலம் செப்பனிடப்பட்டுள்ளது. (உ-124)

## இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் புதிய நிர்வாக குழு தெரிவு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய இடைக்கால நிர்வாககுழுவை விளையாட்டு அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ நியமித்துள்ளார்.

இக்குழுவின் தலைவராக பேமக்க அமரசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம் இவ்வருடம் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சம்மேளன சம்பியன் கிண்ணத்திற்கான போட்டித் தொடர் மற்றும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ண போட்டி தொடர் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வழங்கப்பட்டுள்ளது. (உ-9)

## புத்தர் சிலைகள் மீள அமைப்பு

ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் தகர்க்கப்பட்ட புத்தர்சிலைகளை மீள அமைப்பதற்கு சுவிற்சர்லாந்து நாட்டவரான சைசி என்பவர் முன்வந்துள்ளார்.

இப்பணிக்கு 4 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-206)

## விபத்தில் 35 பேர் காயம்

(கொழும்பு)

புத்தளம் வெலிக்கந்தை பிரதேசத்தில் நேற்று முன் தினம் நடந்த வாகன விபத்துச்சம்பவம் ஒன்றில் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

இரு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதினாலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் காயமடைந்தவர்கள் புத்தளம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-5)

## இன்று ஒரு தகவல்

# மகாபாரதப் போர் நிகழ்ந்த இடம்

பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டு காலம் வனவாசமும் ஓராண்டு தாங்கள் இருக்குமிடம் யாருக்கும் தெரியாமலும் வாழ்ந்து முடித்தனர். இருந்தும் ஒப்பந்தப்படி கௌரவர்கள் அவர்களுக்கு உரிய நாட்டைத் தரவில்லை. போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது. பரம்பொருளான கண்ணன் பாண்டவர்கள் தங்கள் நாட்டைப் பெறப் போர் செய்தாக வேண்டும். கௌரவர்களும், பாண்டவர்களும் பங்காளிகள் நெருங்கிய உறவினர்களும் உடன்பிறந்தவர்களும் போர்க்களத்தில் ஒருவரையொருவர் எதிர்த்து எப்படிக் கொன்று குவிக்கப் போகின்றனர். உணர்ச்சிக்கே சிறிதும் இடம் தராத இடத்தில் தான் இந்தப்போர் நடக்கவேண்டும். இல்லையேல் எந்தச் சூழலிலும் போர் திடுமென நின்றுவிடும். அப்படிப்பட்ட இடம் ஏதேனும் உள்ளதா என்று தேடிப் பாரதநாடெங்கும் ஒவ்வொரு ஊராக அலைந்தார்.

இறுதியாகக் குருஷேத்திரம் என்ற ஊருக்கு வந்தார். அங்கே ஒரு உழவன் தன் வயலிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த நீரை அடைப்பதற்காக மண்வெட்டியால் மண்ணை வெட்டிக் கொட்டிக் கொண்டிருந்தான். பக்கத்தில் அவன் மகன் நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். எவ்வளவோ மண்ணை வெட்டிப்போட்டும் சிறு பகுதி வழியாக நீர் வெளியேறுவதைக் கண்டு அதை அடைப்பதற்கு ஏதேனும் கடினமானபொருள் கிடைக்குமா என்று அங்கும் இங்கும் தேடினான் உழவன். அவனுக்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை.

பக்கத்திலிருந்த தன்மகனை மண்வெட்டியால் ஓங்கி ஒரு போடு போட்டான். இரண்டு துண்டான அவன் உடம்பை நீர் வரும் பாதையில் போட்டு அடைத்தான். இப்பொழுது நீர் வெளியேறுவது நின்றுவிட்டது. இதைக் கண்டு அவன் மகிழ்ச்சி அடைந்தான். பிறகு தான் கொண்டு வந்த உணவை உண்ணத்தொடங்கினான் அவன்.

இதைப் பார்த்த கண்ணன் மனிதர்கள் உணர்ச்சிக்குச் சிறிதும் இடந்தராத இடம் இது தான். கேவலம் நீர் வெளியேறுவதைத் தடுக்கத் தன் மகனையே கொன்று அடைக்கின்ற இடமாக உள்ளது. கடமைக்கே முதன்மை ஆதலால் இங்கு தான் மகாபாரதப் போரை நடத்த வேண்டும் என்று முடிவு செய்தார். ●

பேராசிரியர் எ. சோதி

# இழைக்கப்படும் அநீதிகளைத் தட்டிக் கேட்க வேலையற்ற பட்டதாரிகள் இன்று செயலகம் முன் மறியற் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் கடந்தகாலங்களில் தொடர்ந்து கொண்டிருந்த யுத்தம் என்னும் கோரப்பிடியின் மத்தியில் சிக்கி பல இன்னல்களுக்கு மத்தியில் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெற்று வெளியேறினோம். நான்கு வருடங்களுக்கு மேலாக எவ்வித வேலைவாய்ப்பும் இன்றி பரிதவித்த இவ்வேளையில் அரசிற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல தடவைகள் எமது அவலங்களை எடுத்து கூறிய போதும். எவ்வித பலாபலன்களும் ஏற்படாத நிலையில் புதிய அரசிற்கு எமது பிரச்சினைகளை எடுத்துக் காட்டும் முகமாக நாம் இன்று புதன் கிழமை முதல் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்னால் தொடர்ச்சியாக மறியல் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்;

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் இன்னல்களை வெளியுலகிற்கு கொண்டுவரும் முகமாக யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்னால் தொடர்ச்சியான மறியல்போராட்டத்தை கீழ்வரும் கோரிக்கையை முன் வைத்து நடத்தவுள்ளோம்.

★ வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு இதுவரை வழங்கப்படாது இருக்கும் பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை உடனடியாக வழங்கல்.

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புமுகமாக நடத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை போட்டிப்பரீட்சை முடிவுகளை வெளியிட்டு உடனடியாக நியமனத்தை வழங்குதல்.

★ நிரப்பப்படாது இருக்கும் சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடங்களை நிரப்புதல்.

★ திணைக்கள, கூட்டுத்தாபனங்களில் உள்ளக பட்டதாரி வெற்றிடங்களை நிரப்புதல்.

★ இலங்கை தொழில்நுட்பக்கல்வி சேவையின் போதனாசிரியர் தரம் 111 க்கான ஆட் சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவை வெளியிட்டு நியமனத்தை வழங்குதல்.

★ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட உதவிப்பதிவாளர், உதவி நிதியாளர் போட்டிப் பரீட்சை முடிவை வெளியிடுமாறு கோரல்.

★ புனர்வாழ்வு அமைச்சினால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி பரிசோதகர்களை நிரந்தரமாக்குமாறு கோரல்.

எமது கோரிக்கைக்கு அரசின் சாதகமான பதில் கிடைக்கும் வரை தொடர்ந்து விஸ்தரிப்பு மறியல் போராட்டத்தை செய்யவுள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# ஊனமுற்றோர் மத்தியில் பல்வேறு போட்டிகள்

(சுண்டுக்குளி)

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு ஆடிய பாதம் வீதிதிருநெல்வேலியில் இயங்கும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் யாழ். கிளையினர், ஊனமுற்றோரிடையே பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக எதிர் வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை முச்சக்கரவண்டிப் போட்டி, துவிச்சக்கர வண்டிப்போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

(உ-110)

# வறிய மாணவர்களுக்கு இலவசமாக மழைஅங்கிகள்

(காரைநகர்)

காரைநகர் பகுதி பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களிற்கு ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஒரு தொகுதி சப்பாத்துகளும் மழை அங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, இந்துக் கல்லூரி, வியாவில் சைவவித்தியாசாலை, சடையாளிதமிழ் கலவன் பாடசாலை, மெய்கண்டான் வித்தியாசாலை, சுந்தரமூர்த்திவித்தியாலயம், சுப்பிரமணிய வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களிற்கு இவை வழங்கப்பட்டுள்ளது.

(உ-246)

# உரமானியத்திற்கு பதில் விசேட கூப்பன் அறிமுகம்

(கொழும்பு)

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உரமானியங்களுக்குப் பதிலாக விசேட கூப்பன் ஒன்றை வழங்க அரசாங் இரசாயனப் பொருட்கள் என்பவற்றை கொள்வனவு செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (உ-5)

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுத் தலைவரை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு தலைவர்நிகால்கருணாரத்தினாவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி கண்டி மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்தவருடம்நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தல் தினத்தன்று சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவையும் அவரது ஆதரவாளர்களையும் தாக்கியதுடன், அவர்கள்மீது துப்பாக்கி பிரயோகமும் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

நீதிமன்றத்துக்கு தான் சுகவீனம் காரணமாக வரமுடியாது உள்ளது என பொய் மருத்துவ அறிக்கை ஒன்றை நேற்றுமுன் தினமே சமர்ப்பித்த காரணத்தால் இவரை கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-8)

# நிவாரணம் நாளை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் இருந்து

# பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவழுவுரைப் பிரேரணை விரைவில் சமர்ப்பிப்பு

பன் ஒன்றை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சிறிய நடுத்தர விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குவதால் உரிய பலன் கிடைக்காததால் இத்திட்டம் வகுத்ததாக விவசாய மற்றும் கால்நடை வள அமைச்சர் எஸ். பி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கூப்பன்களை பயன்படுத்தி விவசாயிகள் தமக்கு தேவையானஉரம், விதைகள்,

## வீதித்தடை அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். கண்டி வீதியில் அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகே இருந்த வீதித் தடையை படையினர் அகற்றியுள்ளனர்.

இவ்வீதியூடாக தற்போது கனரக வாகனங்கள் உட்பட பொதுமக்கள் பயணம் செய்து வருகின்றனர். (உ-124)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி கிழக்கில் தங்கியிருக்கும் மக்களுக்கான மார்ச் மாத நிவாரணம் நாளையும் நாளை மறுதினமும் காலை 9.00 மணிமுதல் பி.ப.4.00 மணிவரை வழங்கப்படவுள்ளதாகவும்,

நிவாரணம் பெறுபவர்களை குடும்ப அட்டை, முத்திரையின் அடிக்கட்டை என்பவற்றுடன் வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கெதிராக குற்ற வழுவுரைப்பிரேரணையொன்று வரவு செலவுத் திட்ட விவாதங்கள் முடிவுற்றதும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரபல சட்டத்தரணிகள் குழுவொன்று இப் பிரேரணையைத் தயாரித்துள்ளது.

கடந்த ஆண்டில் அப்போதுத எதிர்க்கட்சியாகவிரு

ஐ.தே.க.வும், ஜே.வி.பி. யும் குற்றவழுவுரைப் பிரேரணையொன்றை அப்போதைய சபாநாயகர் அனுராபண்டாரநாயக்கவிடம் சமர்ப்பித்திருந்தது.

ஆனால், பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன், அந்தப் பிரேரணை காலாவதியாகிவிட்டிருந்தது. இந் நிலையில் வரவு செலவுத்திட்டம் நிறைவேறிய பின் இப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட விருப்பதாக தெரியவருகிறது. (உ)

ஜனாதிபதி-சண்டே ரைம்ஸ் பத்திரிகையிடையிலான

# சர்ச்சையை முடிவுக்கு கொண்டுவர 13ஆம் திகதிவரை காலக்கெடு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் சண்டே ரைம்ஸ் பத்திகைக்கு மிடையிலான சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உயர் நீதிமன்றம் இருதரப்பினருக்கும் அடுத்தமாதம் 13ஆம் திகதிவரை காலக்கெடு விதித்துள்ளது.

இருதரப்பினரும் இந்தச் சர்ச்சை குறித்து முடிவு செய்து அடுத்தமாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மீதான அவதூறு சம்பந்தமாக வருத்தம் தெரிவித்ததுடன் குற்றவியல் வழக்குச் சட்டத்தின் 301 வது பிரிவின் கீழ் சண்டே ரைம்ஸ் செய்தி ஆசிரியர் மீது விதிக்கப்பட்டுள்ள தண்டனையை நீக்க முடியுமென முன்னர் அறிவித்திருந்தது.

அதன் அடிப்படையில் இருதரப்பினரும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வருமாறு நீதிமன்றம் காலக்கெடு விதித்துள்ளது. (த)

## சிந்தனைக்கு விருந்து

### சின்னையாவின் தியாகம்

கூலியாள் சின்னையாவின் குடும்பத்தின் தொகைஐந்
தாகும்
காலையில் வெறுந்தே நீரும் கடுவெயில் மதியம்
பாணும்
மாலையில் பற்றும் பற்றாச் சோறதும் உண்டே பிள்ளை
சீலனின் கல்விக் காகச் செலவிடத் தயங்க மாட்டான்

'பழையவன்'

# இஸ்லாமிய நாடுகள் இஸ்ரேலுக்கு அழுத்தம்

(றமழா)

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமைப் பணிமனை அமைந்துள்ள நகரமான றம்ழாவை முற்றுகையிட்டுள்ள இஸ்ரேலிய படையினர் தொடர்ந்து முனனேறி தல்கீலியா என்ற நகரையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

தொடர்ந்து முன்னேறிக் கொண்டு செல்லும் இஸ்ரேலிய படையினர் வீடுவீடாக சோதனையில் ஈடுபடுவதாகவும் இளைஞர்களை கைது செய்து கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேலிய இராணுவத்தினது அடாவடித்தனங்களை ஆராயும் பொருட்டு,

இஸ்லாமிய நாடுகளின் விசேட கூட்டம் மலேசியத் தலை நகர் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இஸ்ரேல், பலஸ்தீன பகுதிகளில் இருந்து உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் அதன் விளைவுகளை இஸ்ரேல் எதிர் கொள்ள நேரிடும்மெனவும் இஸ்லாமிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# உலக தரிசனம்

## ஆக்கிரமிக்கப்பட்ட றமழா நகரிலிருந்து செய்தியாளர்களை வெளியேறுமாறு இஸ்ரேல் படை அதிரடி அறிவிப்பு

(றமழா)

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமைப் பணிமனை அமைந்துள்ள இடமான றமழா நகரில் இருந்து செய்தியாளர்கள் அனைவரும் வெளியேறி விடவேண்டுமென இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

அரபாத்தின் பணிமனை வளாகத்தை சூழ இஸ்ரேலிய இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் அரபாத் மீது எடுக்கவுள்ள நடவடிக்கைகள் செய்தியாளர்களினால் அம்பலப்படுத்தப்படும். இதனால் சர்வதேச ரீதியாக பலத்த நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டிவரும்என்ற காரணத்தினாலே றமழா நகரிலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்களை உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேலிய படையினர் உத்தரவிட்டுள்ளனர். (த)

# போடோ சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட அமைப்புகள் 27 ஆகஉயர்வு

(புதுடில்லி)

பாகிஸ்தானில் இருந்து இயங்கி வரும் இரு பயங்கரவாத அமைப்புக்களை போடோ தடைச்சட்டத்தின் கீழ் இந்திய மத்திய அரசு தடை செய்துள்ளது.

அல்பதா, ஜமலத் ஒல் முஜாதிங் ஆகிய இரு அமைப்புக்களையுமே நேற்று முதல் இந்தியாவில் இயங்குவதற்கு மத்தியஅரசு தடைசெய்துள்ளது.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத தீவிரவாத அமைப்புக்களின் எண்ணிக்கை இவற்றோடு 27 ஆக உயர்ந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது (உ-8)

# பயங்கரவாதத்திற்தஎதிராக மலேசியப் பிரதமர் தலைநகரில் உரை

(கோலாலம்பூர்)

பொதுமக்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் அனைத்து வன் செயல்களும் பயங்கரவாதம் என்று மலேசிய பிரதமர் மகதீர்முகமது தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நடந்த 57 இஸ்லாமிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

உலக வர்த்தக மையத்தின் மீதான தாக்குதல், பலஸ்தீனர்களது தற்கொலைப் போராட்டம், மற்றும் இஸ்ரேலின் மேற்குக்கரைத்தாக்குதல் ஆகியவற்றை பயங்கரவாதத்திற்கு உதாரணமாக சுட்டிக் காட்டியுள்ளார்.

மத்திய கிழக்கின் மேற்குக் கரை மீதான தாக்குதல்களை இஸ்ரேலியப் படைகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் பயங்கரவாதத்தை பரப்பும் குற்றத்தை இஸ்ரேலிய துருப்பினர் மட்டுமின்றி பலஸ்தீன ஆயுத பாணிகளும் சம நீதியில் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் கூறினார். (உ-9)

# இஸ்ரேலுடன் இணைந்து செயற்பட்ட பலஸ்தீனர் சுட்டுக்கொலை

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதாக கூறப்படும் 11 பலஸ்தீன படையினரை பலஸ்தீனர்கள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

ஜெருசலேமிலுள்ள சோதனைச் சாவடியொன்றினுள் பலஸ்தீனத் தற்கொலை குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்க வைத்ததில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

பலஸ்தீன லக்ஷர் மாவீரர் படையை சேர்ந்த இந்நபர் பயணம்செய்த காரைப் பொலிஸார் சோதனையிட முயற்சித்தபோதே இக்குண்டை வெடிக்க வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

# எலிசபெத் மகாராணியார் சமாதான முயற்சி பற்றி மகிழ்ச்சி தெரிவிப்பு

(லண்டன்)

பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பின் பொன் விழா அண்மையில் லண்டனில் நடைபெற்றது. இந்த அமைப்பின் தலைவியான இங்கிலாந்தின் மகாராணி இரண்டாம் எலிசபெத்தும் தனது பொன்விழாவை பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர் மத்தியில் விருந்துண்டு மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்.

பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்புமகாராணியின் பொன்விழாவின் நினைவுச் சின்னமாக தங்கத்தாலான கடித உறை பிரிக்கும் ஒரு கருவியை அவருக்கு வழங்கியது.

அதற்கு நன்றி தெரிவித்துப் பேசிய மகாராணி கடந்த 50 ஆண்டுகளில் உலகத்தில் எத்தனையோ பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்னும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்படவுள்ளன என்று குறிப்பிட்டார்.

மேற்படி பொன்விழாவில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற விவ என்பவற்றால் இன்னல்களை அனுபவித்து வந்த வடபகுதி மக்களின் அவல வாழ்வு குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கையினை எடுப்பது பற்றிகூறினார் அத்துடன் நாட்டில் சமாதானம் மலர அவர் உறுதியாக அடியெடுத்து வைக்கின்றார். அதனால் நாட்டின் அனைத்துப் பகுதி மக்களும் இப்போது மகிழ்ச்சி அடைகின்றார்கள் என்றார்.

உடனே மகாராணியார் அந்த மகிழ்ச்சி நிலைபெறச் செய்ய வேண்டும் என்றார். (எ)

# இஸ்ரேல் தாக்குதலில் 30 பலஸ்தீனர் பலி

(றமழா)

இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதல்களில் 30 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்தும் பலஸ்தீன பகுதிகளை ஆக்கிரமித்து, பலஸ்தீனர்களை கண்டபாட்டில் சுட்டுக்கொன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கியநாட்டு மீறி இஸ்ரேல் தொடர்ந்து றமழாநகரில் யஸீர் அரபாத்தை முற்றுகையிட்டு வைத்திருப்பது குறித்தும்,

எதிர்காலத்தில் ஐ. நா பாதுகாப்புச்சபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நேற்று முன்தினமிரவு அவசர அவசரமாக ஐ.நா. பாதுகாப்புச்சபையின் விசேட கூட்டம் கூடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஐ. நா. செயலருடன் முரண்படும் அமெரிக்கா

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கின் மேற்கு கரை நகரான றமழாவில் இருந்து தமது துருப்புகளையும் டாங்கிகளையும் வாபஸ் பெற முன், இஸ்ரேல் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக வெள்ளை மாளிகைக்கும் ஐ. நா. செய தனித்தும், இணைந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என கோபி அனான் கேட்ட போதே இக்கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து யுத்த நிறுத்தத்துடன் இஸ்ரேலிய துருப்பினர் றமழாவிலிருந்து வாபஸ் பெற வேண்டும் என்

சுட்டுக்கொன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கியநாட்டு சபையின் தீர்மானத்தையும்

ஐ.நா. பாதுகாப்புச்சபையின் விசேட கூட்டம் கூட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(த)

மேற்படி பொன்விழாவில் இலங்கையின் சார்பில் கலந்து கொண்ட பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் மகாராணியிடம் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த காலங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றியும் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்தும் விளங்கினார்.

மிகவும் அக்கறையோடு அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த மகாராணியிடம் அத்தியாவசிய உணவுத் தட்டுப்பாடு, மருத்துவ வசதியின்மை

பெற முன், இஸ்ரேல் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக வெள்ளை மாளிகைக்கும் ஐ. நா. செயலாளர் கோபி அனானிற்குமிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

அனைத்து பேரவை நாடுகளின் கூட்டத் தொடரில், மத்திய கிழக்கின் நிலைமை மேலும் மோசமடையலாம் என்ற அச்சத்தில் நிலைமையை கட்டுப்படுத்தும் நோக்கில் அனைத்து தரப்பு பேரவையின் உறுப்பு நாடுகள்

இதனையடுத்து யுத்த நிறுத்தத்துடன் இஸ்ரேலிய துருப்பினர் ரமழா விலிருந்து வாபஸ் பெற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும்,

யுத்த நிறுத்தம் முதலில் வருவதால் யுத்த பிரதேசத்திலிருந்து துருப்பினர் டாங்கிகள் என்பன வாபஸ் பெற முன் யுத்த நிறுத்தப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளதாகவும் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

(உ-9)

# மதக்கலவரத்தை அடக்க மாநில அரசு தவறிவிட்டது

## மனித உரிமை அமைபபு கண்டனம்

(புதுடில்லி)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட மதக் கலவரங்களை அடக்க மாநில அரசு தவறிவிட்டது என இந்தியாவின் மனித உரிமை ஆணைக்குழு பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இரண்டாவது அதிக கைத் தொழில் வளத்தை கொண்ட குஜராத் மாநிலத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட மதக்கலவரங்களில் 803பேர் கொல்லப்பட்டதாக உத்தியோக பூர்வ அறிக்கை தெரிவித்த போதும்,

2ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக அரசசார்பற்ற அமைப்புகள் கூறியுள்ளன.

எதிர்வரும் நான்காம் திகதி இந்தியப் பிரதமர் குஜராத் மாநிலத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். இவ்விஜயத்தின் போது மாநில அரசின் அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்க வழிவகுக்கும்வகையில் ஆணைக்குழுவின் அறிக்கை ஒன்று உடனடியாக பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-9)

### மரதனோட்ட வீரனுக்கு

# விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு முயற்சி

(சிட்னி)

போதைப் பொருள் பாவனைகாரணமாக 2 வருடகால போட்டித்தடை விதிக்கப்பட்டிருக்கும் அவுஸ்திரேலிய மரதனோட்ட வீரரான கில்வானாட்ராம்பஸ் மீதனா தண்டனையைக் குறைப்பதற்கான முயற்சிகளில்அந்நாட்டு மெய்வல்லுநர் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாகசர்வதேச ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது.

மரதனோட்டப் போட்டியில் அனபோலிக்ஸ்டீ ரொய்ட் எனப்படும் தடைசெய்யப்பட்ட மருந்தை உட்கொண்ட நிலையில் இவர் போட்டியில் கலந்து கொண்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதும்

அதனைத் தொடர்ந்து அவருக்கு2வருடகாலப்போட்டித் தடை விதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(உ)

### விரக்தியடைந்த இளைஞர்

# ஜெயாவின் காரின் முன்னால் பாய்ந்தார்

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின்கவனத்தைக் கவருவதற்காக இளைஞர் ஒருவர் ஜெயலலிதாவின் காரின் முன்னால் பாய்ந்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

வேலையற்று இருந்த இளைஞர் ஒருவர் தனக்குவேலை பெற்றுத் தருமாறுகோரிமனுவொன்றைச் சமர்ப்பிப்பதற்காகவே இவ்வாறுகாரின்முன்னால் பாய்ந்துள்ளார்.

இவ்வாறான மனுக்களை ஜெயலலிதா நேரில் வாங்குவதில்லை. இதனாலேயே பொரும்பாலானோர் இவ்வாறான மூடச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

கடந்தவாரத்திற்கு முன்பும் ஜெயலலிதாவிடம் நேரில் மனுச் சமர்ப்பிக்கமுடியாத தமபதியர் விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(செ)

---

### சங்கத்தின் புதியகிளை

கட்டைவேலி நெல்லியடி ப.நோ. கூ.சங்கம் அல்வாய் தெற்கிலுள்ள விநாயகர் வீதியில புதிய கிளையொன்றினை அண்மையில் திறந்துள்ளது.

(எ-23)

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் வீடில்லை நட்பாள்பவர்க்கு
- குறள்

வலம்புரி

## 8 ம் இலக்கம் நன்மையா?

எதிர்வரும் 8 ந் திகதி யாழ் கண்டி வீதி திறப்பதென முடிவாகியுள்ளது. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் பல தடவைகள் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அத்தகைய முயற்சிகள் தோல்வியிலேயே முடிவுற்றுப் போனது. இதற்கு இருக்கக் கூடிய அரசியல் காரணங்கள் பலவாறாக இருந்த போதிலும் சோதிடர்களைப் பொறுத்த வரை பொருத்தமில்லாத தினத்தில், திகதியில் குறித்த சமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்டதே தோல்விக்குக் காரணம் எனக் கூறுவர்.

அவ்வகையில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் 8, 17, 26 ஆகிய திகதிகளிலேயே தொடங்கப்பட்டன.

இத்தகைய கணிப்பு சோதிடத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு வெறுப்பாகவும், மூடநம்பிக்கையாகவும் தோற்றமளிப்பினும் எட்டாம் இலக்கம் தீமையில்லாதது என நிரூபிக்கப்படும்வரை சோதிடத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அதிலிருந்து விலகப் போவதில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆங்கில நாட்டவர்களைப் பொறுத்த வரை அவர்கள் 13 ம் இலக்கத்தை புறக்கணித்து விடுவது வழக்கம் எந்த ஆங்கிலேயனும் 13 ம் இலக்கத்தில் அலுவலகத்தையோ, நிறுவனத்தையோ வைத்திருப்பது கிடையாது.

அதேபோல் 8 ம் இலக்கம் என்பது பொதுவாக நல்ல நிகழ்வுளில் ஒதுக்கப்பட்டு வருகிறது. இதற்

# வருடக் கணிப்பினில் கைவிடப்பட்ட 1/4 நாளை

# ஈடுசெய்ய ஏற்படுத்தப்பட்டதே 'லீப்' வருடம்

1988 ஆம் ஆண்டு இந்த எண்ணை நாலால் வகுத்துப் பாருங்கள், மீதிவராது. ஆம் இது லீப் வருடம் எனவே, இவ்வாண்டு பெப்ரவரி மாதத்துக்கு ஒரு நாள் அதிகம். அதாவது 29 நாட்கள், ஏன் இப்படிச் செய்கிறோம்? இதற்குப் பின்னணியில் ஒரு வரலாறே இருக்கிறது.

பண்டைக் காலத்தில் சந்திரனை வைத்துத்தான் வருடம், மாதம் ஆகியவற்றைக் கணக்கிட்டனர். இரண்டு பௌர்ணமிகளுக்கு இடையில் உள்ள காலம் தான் ஒரு மாதம். அதாவது ஒரு சந்திர மாதம். நமது நாட்டுப் பஞ்சாங்கத்திலும் இந்த முறை உண்டு. பௌர்ணமி என்பது முழுச் சந்திரன் தோன்றும் நாள், பிறகு தினசரி தேயத் தொடங்கி 15 ஆம் நாள் சந்திரன் மறைந்துவிடும். அன்று தான் அமாவாசை, மறு நாள் முதல் தினசரி துளித் துளியாக வளர்ந்து கொண்டு வந்து, அடுத்த 15 ஆம் நாள் மீண்டும் முழுச்சந்திரனாகத் தோன்றும். அது அடுத்த பௌர்ணமி. இந்த இருபௌர்ணமிகளுக்கும் இடையில் சந்திரனில் ஏற்படும் இந்த மாற்றத்தை வளர்பிறை, தேய் பிறை என்போம். இந்த இரண்டும் சேர்ந்தது தான் ஒரு சந்திரமாதம் என்பது. இதற்கு $29\frac{1}{2}$ நாட்கள். அதாவது சந்திரன் நம் பூமியை ஒரு தடவை சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலம். இதைப் போன்று 12 மாதங்கள் சேர்ந்தது தான் ஒரு சந்திர ஆண்டு. அதற்கு 354 நாட்கள்.

### சூரிய ஆண்டு

பிற்பாடு சூரியனை ஆதாரமாகக் கொண்டு மாதங்களைக் கணக்கிடத் தொடங்கினார்கள். அதற்குச் சூரிய மாதம் என்று பெயர். அதன்படி நம் பூமி ஒரு தடவை சூரியனைச் சுற்றி வருவதற்கு ஆகுங் காலம் ஒரு ஆண்டு. அதற்கு $365\frac{1}{4}$ நாள்கள் ஆகும். இந்தக் கணக்குகளின் படி சூரிய ஆண்டுக்கும் சந்திர ஆண்டுக்கும் $11\frac{1}{4}$ நாட்கள் வித்தியாசம் வந்தது. எனவே, இரண்டும் ஒத்துப் போகவில்லை. ஆகவே, அவ்வப்போது சந்திர ஆண்டில் அதி மாதம் என்று கூடுதலாக ஒருமாதத்தைச் சேர்த்துக் கணக்கைச் சரி செய்து கொண்டனர். பிற்பாடு நடந்ததைப் பார்ப்போம்.

பண்டைக்காலத்தில்ஐரோப்பாவில் ஒரு பேரரசுஇருந்தது. ரோமப்பேரரசு என்று பெயர் ஜூலியஸ்சீஸர் அதன் பேரரசராக இருந்தார். அவர்பெயரால் தான் கலண்டரில் ஜூலை மாதம் அமைக்கப்பட்டுள்ளது. அவர் காலத்தில் வானியல் ஆராய்ச்சியாளர் ஒருவர் இருந்தார். சோஸிஜினிஸ் என்று பெயர். அவர் சீஸருக்கு ஒரு யோசனை சொன்னார். அதை அரசர்ஏற்றுக்கொண்டார். அதன் படி புதிய கலண்டர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்தக் கலண்டர் தான், ஒரு சில மாற்றங்களுடன் இன்று நடைமுறையிலுள்ளது. இது நடந்தது கி.மு. 45 ஆம்ஆண்டு.

**ஜானகி மணாளன்**

### நான்காண்டுகளுக்கொரு தடவை

இக்கணக்குப்படி ஆண்டுக்கு 365 நாட்கள். ஆனால் பூமி ஒரு தடவை சூரியனைச்சுற்றி வர $365\frac{1}{4}$ நாள் என்று சொல்லப்பட்டது அல்லவா? அதைத் துல்லியமாகக் கணக்குப் பார்த்தால், பூமி சூரியனைச் சுற்றிவர 365 நாள், 5 மணி 48 நிமிடம், $47\frac{1}{2}$ நொடியாகிறது. அதில் 365 நாட்களை எடுத்துக்கொண்டு மீதியுள்ள 5 மணி 48 நிமிடம் $47\frac{1}{2}$ நொடியை அதாவது கிட்டத்தட்ட $\frac{1}{4}$ நாளை விட்டுவிடுகிறார்கள இவ்வாறு விடப்படும் 5 மணி 48 நிமிடம், $47\frac{1}{2}$ நொடி என்பது நான்கு ஆண்டுகளில் மொத்தம் எத்தனை ஆகும். கணக்கிட்டுப் பாருங்கள. 23 மணி 15 நிமிடம், 10 நொடி அதாவது ஒரு நாள் அல்லது 24 மணிக்கு 44 நிமிடம் 50 நொடி குறைவு. அதை 24 மணியென்று வைத்துக் கொண்டு, அந்த ஒரு நாளை நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை பெப்ரவரிமாதத்தில் சேர்த்து விடுகிறார்கள். 4 ஆல் மிச்சமின்றி வகுபடக் கூடிய ஆண்டில் முதன் முதல் அது சேர்க்கப்பட்டது. அது முதல் தொடர்ந்துஅத்தகைய ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் அந்த ஒரு நாள சேர்க்கப்படுகிறது. அதை ஏன் பெப்ரவரியில் சேர்த்தார்கள் தெரியுமா? அதில் தானே ஆகக் குறைவாக 28 நாட்கள் உள்ளன. அந்த ஆண்டுதான் லீப் வருடம் எனப்படுவது.

சரி அதை ஏன் லீப் வருடம் என்கிறார்க தெரியுமா? ஆங்கிலத்தில் LEAP (லீப்) என்றால் தாண்டிக் குதித்தல் என்றுபெயர். லீப் வருடத்தில் ஒரு தினம் தாண்டிக்குதிக்கிறது எப்படி?

### கிறிஸ்துமஸ்

உதாரணத்துக்கு உலகம் முழுதும் பிரபலமான ஒரு நாளை எடுத்துக்கொள்வோம கிறிஸ்துமஸ் தினம் தெரியுமல்லவா? டிசம்பர் 25 ஆம் நாள் அதை எடுத்துக்கொள்வோம். 1985 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் புதன்கிழமை வந்து 1986 ஆம் ஆண்டு வியாழக்கிழமை வந்தது, 1987 ஆம் ஆண்டு வெள்ளிக் கிழமை வந்தது, ஆனால் 1988 லீப் வருடத்தில் இந்த வரிசைப்படி கிறிஸ்துமஸ் வராது, ஒருதினத்தைத் தாண்டிக் குதித்து, சனிபோக ஞாயிற்றுக் கிழமை வரும். கலண்டரில் சரிபார்த்துக் கொள்ளுங்கள் இப்படிநான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை பெப்ரவரியில் ஒருநாள் சேர்க்கப்படும் போது, கிழமையில் ஒருநாள் தாண்டிக் குதித்து வருவதால்தான் இந்த ஆண்டைலீப்வருடம் என்கிறோம்.

சரி இப்போது இன்னொரு கணக்கையும் பார்ப்போம். லீப் வருடத்தில் சேர்க்கப்படும் ஒருநாள் 24 மணிக்கு குறைவு என்று பார்த்தோம் அல்லவா? எத்தனை குறைவு? 44 நிமிடம் 50 நொடி அல்லவா? இந்தக் குறைவு வருடங்கள் ஆக, ஆக அதிகரிக்குமே! அப்போது கலண்டர் கணக்குச் சரிவராதே! என்ன செய்வது? இப்போது நமக்கு வரும் ஐயம் முன்காலத்தில் அவர்களுக்கும் வந்தது. அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? நான்கு ஆண்டுகளில் அதிகமாகச் சேர்ப்பது 44நிமி. 50 நொடி நானூறு ஆண்டுகளில் இந்த அதிகம் எத்தனை ஆகும்? நானூறு ஆண்டுகளில் எத்தனைலீப்வருடம்வருமோ அத்தனை தடவை 44 நிமி, 50 நொடிஅல்லவா? அதாவது 3 நாள் 0 மணி 28 நிமிடம்,

செய்வது? எப்படி ஈடு செய்வது? அதற்கும் ஒரு நடைமுறையை வகுத்து வைத்து விட்டார் என்ன தெரியுமா?

சாதாரணமாக 4 ஆல் மிச்சமின்றி வகுபடும் ஆண்டு லீப் வருடம் என்று கருதப்பட்டு, பெப்ரவரியில் ஒரு நாள் கூட்டப்படும். ஆனால் 4 ஆல் வகுபட்டாலும் கூட 100 ஆல் மிச்சமின்றி வகுபடும் ஆண்டு லீப்வருடமாக கொள்ளப்படமாட்டாது. உதாரணத்துக்கு 1300 ஆம் ஆண்டு என்று வைத்துக் கொளளுங்கள். இது நாலால் மிச்சமின்றி வகுபடும் எனவே லீப் வருடம் என்பீர்கள் அதுதான்இல்லை. ஏன்தெரியுமா? இது100ஆலும் மிச்சமின்றி வகுபடுகிறது அல்லவா? எனவே, அது லீப் வருடம் அல்ல இந்த ஆண்டில் பெப்ரவரிக்கு 28 தேதிகள் தான். இதே போன்று மற்றொரு கணக்கையும் சரி செய்து வைத்துள்ளார்கள். என்ன தெரியுமா? 100 ஆல் மிச்சமின்றி வகுபட்டால் அது லீப் வருடம் அல்ல என்றோம் அல்லவா? மூன்று தடவை தொடர்ந்து100 ஆல் வகுபட்ட பிறகு நான்காவது தடவையாகஅதாவது400ஆல்மிச்சமின் றிவகுபட்டால்அது லீப் வருடம்என்று திட்டப் படுத்தி உளளனர். இந்த உதாரணத்தைப் பாருங்கள், நன்கு புரியும், 1200, 1600, 2000 ஆகிய ஆண்டுகள் 400 ஆல் மிச்சமின்றி வகுபடும் அல்லவா? எனவே உவை லீப் வருடம்.

### தவறுகளற்ற கணிப்பு

ஆனால், 1300, 1400, 1500, 1700, 1800, 1900, 2100 ஆகியவை 400ஆல் வகுபடாது 100ஆல் வகுபடும். எனவே 4ஆல் வகுபட்டாலும் கூட இவை லீப்வருடம்அல்ல. என்ன? புரிந்து கொண்டீர்களா? இப்போது இன்னொரு கணக்கைப் பார்ப்போம். கிரிகோரி மிகத் துல்லியமாக எல்லாவற்றையும் கணக்கிட்டு, தவறு ஏற்படா வண்ணம் கலண்டரை மாற்றி அமைத்து விட்டார்; என்றாலும் கூட, ஒவ்வொரு சூரிய ஆண்டிலும் அந்தக் கலண்டர் 26 நொடி முன்கூட்டிச் செல்கிறது என்பதைப் பிற்பாடு கணக்கிட்டுக் கணித்தார்கள். இதைச் சரிக்கட்ட என்ன ஏற்பாடுகள்செய்துள்ளார்கள் தெரியுமா? ஆண்டுக்கு 26 நொடி என்பது 3323ஆண்டுகளில் ஒரு நாள் ஆகிறது. எனவே, கிரிகோரிமுறை கலண்டரில் மாற்றம் செய்யப்

பட்டு வருகிறது. இதற்கான காரணங்களை சோதிடர்கள் பல்வேறு உதாரணங்கள் மூலம் காட்டவும் தயாராகவுள்ளனர்.

இத்தகையதோர் சூழ்நிலையில் கடந்த பலவருடங்களாக மூடப்பட்டிருந்த யாழ் - கண்டி வீதி மீண்டும் போக்குவரத்து பாவனைக்காக எதிர்வரும் 8 ந் திகதி திறந்து வைக்கப்படவிருக்கிறது.

நிரந்தர சமாதானம் ஏற்படுமா என்ற கேள்வியுடன் இருக்கும் மக்களுக்கு எட்டாம் இலக்கத்தில் (திகதியில்) பாதை திறப்பது எல்லாம் எத்தனை நாளைக்கு என்ற ஓர் சலிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. எனவே இது விடயங்களில் சோதிட முறைகளையும் அனுஷ்டிப்பது தேவையில்லாத சஞ்சலத்தை தவிர்க்க உதவும்.

## தினசரி தியானம்

### துன்பத்தின்அவசியம்

துன்ப மெனுந் திட்டனைத்துஞ்
சூறையிட ஐயாவே
இன்பவெள்ளம் வந்திங்கு
எதிர்ப்படவும் காண்பேனோ?

- தாயுமானவர்

அண்ணலே, உனது அமைப்பில் அனாவசியமானது ஒன்றுமில்லை, மக்களால் வேண்டப்படாதது துன்பம். என்னைப் பண்படுத்துதற்குத் துன்பம் எவ்வளவு அவசியமானது என்பதை நீயே அறிவாய்.

தீங்கும், துயரமும், தௌர்ப்பாக்கியமும் ஓ மானுடா, உன்னை வந்தடைய வேண்டிய தேவையொன்றுண்டு. அவைகளின் மூலம் நீபண்படுகின்றாய். துன்பத்தைச் சகித்தல் மூலம் நீ வலிவு பெறுகிறாய். துன்பத்தை விசாரித்துப் பார்த்ததனால் உனக்கு விவேகம் உண்டாகிறது. வலிவும் விவேகமும் உடையவன் எதையும் சமாளிக்கத் தெரிந்து கொள்கிறான். அவனுக்கு ஆகாத காரியம் ஒன்றுமில்லை.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

50 நொடி அல்லவா? அதாவது 3 நாள் 0 மணி 28 நிமிடம், 50 நொடி அதிகமாகச் சேர்த்திருப்பார்கள். ஒவ்வொரு நானூறு ஆண்டிலும் இந்த வீதத்தில் சேர்த்திருப்பார்கள் அல்லவா? இதை ஈடுசெய்ய ஒருஏற்பாடுசெய்தார். 13 ஆம் கிரிகோரி என்ற ஒரு போப்பாண்டவர். ஜூலியஸ் சீஸர் கொண்டு வந்த கலண்டரில் அவர் இந்தமாற்றத்தைச் செய்ததார், அதன் பின்னர் ஏற்பட்ட கலண்டர் முறைக்குக் கிரிகோரியின் கலண்டர் என்று அவர் பெயரேவைக்கப்பட்டுவிட்டது.

பத்து நாட்கள் விடப்பட்டன. அவர் 1582 அக்டோபர் வரையில் அதிகமாகச் சேர்த்திருந்த நாட்களைக் கணக்கிட்டார். பத்து நாட்கள் ஆகியிருந்தன. அதை என்ன செய்தார் தெரியுமா? பழைய கலண்டரைப் புதுப்பிக்கும் போது, அந்தப் பத்து நாட்களை விட்டுவிட்டுப் புதுப்பித்து விட்டார். சரி பழைய கணக்குச் சரியாகப் போய் விட்டது. அதன் பிறகு வரும் ஒவ்வொரு லீப் வருடத்திலும் 44 நிமிடம் 50 நொடி வீதம் அதிகம் சேர்க்கப் படப் போகும் நாட்களை என்ன

எனவே, கிரிகோரிமுறை கலண்டரில் மாற்றம் செய்யப்படுவதற்காக 4000ஆல் மிச்சமின்றி வகுபடும் ஆண்டு, 400ஆல் வகுபட்ட லும்கூட, அது லீப் வருடம் ஆகாது. சாதாரண வருடந்தான்!

இது பற்றி நாம் கவலைப்படவேண்டும். ஏன் தெரியுமா? கி. பி. 4000 த்துக்கு இன்னும் எவ்வளவோ ஆண்டுகள் உள்ளன. இப்போது லீப் வருடத்தின் கதையைத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? லீப் வருடம் என்று சொன்னாலேபோதும்! பெப்ரவரிக்கு 29 தேதி என்ற நினைவு உங்கள் மனதில் பளிச்சிடும். இதே போன்று இந்த லீப் வருடத்தில் இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் வழக்கமாக நடைபெறுகின்றன. அவை இரண்டும் உலகின்கவனத்தைக் கவரக் கூடியவை,

ஒன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (U.S.A.) குடியரசுத் தலைவரின், தேர்தல் மன்றொன்று ஒலிம்பிக்விளையாட்டுப் போட்டிகள். இவை இரண்டும் நான்கு ஆண்டுகளுக்குஒரு தடவைஒவ்வொரு லீப் வருடத்திலும் தான் நடைபெறும்.

நன்றி கோகுலம்

# YOUR PATHWAY TO A SUCCESSFUL CAREE IN FINANCIAL SERVICES

True to our commitment to the people,Peoples Bank is currently repositioning it self as a dynamic and vibrant commercial bank. Towards this end, we are recruiting talented youth with a passion for high performance If you are this person, and you are willing to work in any part of the country, especially in the undermentioned districts,join our team today.

## REGIONAL BANKING ASSISTANS - TRAINEES

We need to immediately strengthen our Team with a few members preficient in **Tamil** Language for Branches in the undermentioned Districts

## Districts

**Ampara, Batticaloa, Badulla**
**Jaffna, Nuwara-eliya, Trincomalee,**
**Mannar, Vavuniya, Mullaithivu, Kilinochchi.**

**your qualifications shoulld include**

- 4passes with 3credits in one sitting at the GCE[A/L] examinations (3 passes with 2 Credits in one sitting under the new syllabus)
- A minimum of 6 Credit Passes at the GCE(O/L) Examination in one sitting(Credit passes in English Language, Math ematics and Tamil Language is compulsore)
- Candidate should be a permanent resident for more than 3 years in the relevant district
- Proferencce will be given to candidates with exnerience in customer oriented Service.
- You should be below 22 years of age as at the closing date of applications and possess a high degree of responsibility and willingness to work hard, excellent team spirit and the will to achieve are essential characteristics,along with an outgoing and plesing personalite and impressive communication skills
- Applications of candidates awaitingresults would not be entertained
- Incompleteapplications and applications withoutcopies of certificates will be rejecte
- Selected candidates will be eligible for comprehensive on and off the job training covering the desired aspects of banking including Branch Banking and be compensated with an allowance during this period. Successful completion of training may result in contractual/permanent position. Subsequent remuneration packages are designed to be very attractive and the selected candidates would be afforded other benefits and the chance to develop their skills and work in a very diverse and competitive sector if absorbed to the pearmanent cadre on satisfactory pertormance as trainee Banking Assistants.

If you want to step in to the pathway of a succese ful career in Banking Sector then send in a detailed Curriculum Vitae, copies of certificates and exam scores to augment your qualifications, certificate from the relevant Grama Niladhari authenticated by the Divisional Secretary as proof of permanent residency of the relevant District for a period of 3 years, along with the contact details of 3 non-related referees to the address below, The post applied for and the relevant District shouldbe staed on the top left hand corner of the envelope and should reach us on or before 10th April,2002

Any form of canvassing will lead to immediate disqalification Only those who are qualified in terms of this advertisement need to apply Only short listed candidates will be contacted

CHIEF MANAGER(HUMAN RESOURCES)
PEOPLE'S BANK
HEAD OFFICE
75, SIR CHITTALAMPALAM A.GARDINER MAWATHA
COLOMBO 2.


# ஜனாதிபதியின்..

சீ.ஐ.டிபொலிஸ் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் கருணாரட்ண தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்திற்கு வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்திருந் ததாகவும் கண்டி மேலதிக நீதிவான் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை நிராகரித்த அவரை கைது செய்யு மாறு பிடிவிறாந்து பிறப்பித்திருந்தார் என்றும் கூறினார். கைது செய்யப் பட்ட நிகால் கருணாரட்ண இன்று நீதிமன்றத்தில் ஆஜயர் செய்யப்பட வுள்ளார். (வ)

*(மற்றொரு செய்தி 5ம் பக்கத்தில்)*

### 3நாட்டு...

சேரவுள்ளனர்.

இதனை அடுத்து பிரான்ஸ், அமெரிக்கக் கடற்படைக் கப்பல் களில் தளபதிகளும் படை அதிகாரி களும் கொழும்புத் துறை முகத்தை வந்தடையவுள்ளனர்.

இதேவேளை இம்மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தான் விமா னப்படைத்தளபதி எயர் மாஷல் அவிீரும் கொழும்பு வரவுள்ளார்.

கொழும்பு வரவள்ள பாகிஸ்தான் விமானப்படைத்தளபதி சுமார் ஒரு வாரகாலம் கொழும்பில் தங்கியி ருந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பாது-காப்பு அமைச்சர் திலக் மாரப்பன, மற்றும் முப்படைத் தளபதிகளை யும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் முக்கிய விமானத் தளங்களுக்குச் சென்று அவற்றை யும் பார்வையிடவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமா தானப் பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர் வைக் காண்பதற்கு ஆர்வமாகச் செயற்பட்டு வரும் இவ்வேளையில் அமெரிக்காவினதும், அமெரிக்க சார்பு நாடுகளினதும் கடற்படைக் கப்பல்கள் கொழும்புக்கு வரவிருப் பது மக்கள் மத்தியில் அச்ச உணர் வையும்- சந்தேகத்தையும் ஏற்படுத் துவதாக உள்ளதென. அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட் -டுள்ளனர். (வ)

### 8ந் திகதி...

முற்பகல் 10மணிக்கு யாழ் பத் திரிகையாளர்களை ரான் பங்களா வில் சந்திக்கம் அமைச்சர் பிற்பகல் 2மணிக்க யாழ் அரச அதிபர், செயலக உயரதிகாரிகள், யாழ் மாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், அரசசார் பற்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாலை 4மணிக்கு தென்மா ராட்சி, வடமராட்சிப் பகுதிகளை அமைச்சர் பார்வையிட திட்டமிட்டுள் ளார். இதேவேளை 8ந் திகதி காலை 6.30மணிக்கு முகமாலைக்கு செல் லும் அமைச்சர் அங்கு சம்பிரதாய பூர்வமாக ஏ-9 பாதையை திறந்து வைப்பார் (இ43)

### புலிப் போராளிகளை..

வவுனியாவுக்குள் புலிகளை வர வேற்றுப் பேசிய தேரர் மேலும் கூறுகையில் விடுதலைப்புலிகள் சமாதானத்துக்கு வந்ததை நான் வர வேற்கின்றேன் நாட்டில் சமாதா னம் மலரவேண்டும் என்பதற்காக இரு சாராரும் எடுத்துவரும் நடவடிக்கை ளுக்கு எனது பூரண ஆசியும் ஆத ரவும் உண்டு என்றும் கூறினார்(வ)

### மன்னாரில்...

ஊடாக நேற்றுப் பிற்பகல் 12.40 மணியளவில் வருகைதந்த புலி உறுப்பினர்களை ஐயாயிரத்திற் கும் மேற்பட்ட மக்கள் வரவேற் றதுடன் பவனியாக மன்னார் நக ருக்கு அழைத்துச் சென்றனர். அங்கு நடைபெற்ற பொதுக் கூட் டத்தில் புலிகள் உறுப்பினர்கள் உரையாற்றியதுடன் கூட்டத்தில் 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக் கள் கலந்து கொண்டனர். (த)


பிரபல உயிரியல் ஆசான்
**S.P. நாகநாதன்**
அவர்களால் தொகுக்கப்பட்ட
**2002 A/L பரீட்சையில் எதிர்**
பார்க்ககூடிய
**MCQ, Structure Essay**
வினாக்களுக்கான
**வழிகாட்டல் கருத்தரங்கு**
வழங்குபவர்: K.சுகந்தன் B.sc
இடம்:- அறிவொளி, நல்லூர்
காலம்:- April,06,07.2002
நேரம்:3.00-5.00Pm (SLT)
கட்டணம்:- 50/-
குறிப்பு:-சென்றவருடமும் ஆசிரியரால் தொகுக்கப்பட்ட வினாக்களில் பெரும் பாலானவை பரீட்சையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4907)



தடை மருந்தூட்டலால் தடுத்திடும் ஆறு
நோய்களையும் நாங்கள் அறிந்திடுவோம்
அத்தனை மருந்தையும் உரிய முறைப்படி
எங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்திடுவோம்.

COLOMBO 2.

தடை மருந்தூட்டலால் தடுத்திடும் ஆறு
நோய்களையும் நாங்கள் அறிந்திடுவோம்
அத்தனை மருந்தையும் உரிய முறைப்படி
எங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்திடுவோம்.

(C/3794)

# கிளை ஸ்தாபன திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்:~

நிகழும் விஷீ வருடம் பங்குனித் திங்கள் 20ம் நாள் இன்று (03.04.2002)
புதன்கிழமை காலை 9.45மணி முதல் 10.45வரையுள்ள சுபநேரத்தில்
எமது கிளைஸ்தாபனமான

## நாதன் ஆடையகம், அழகு மாடம்,

எனும் வியாபாரஸ்தாபனத்தை 35,நவீன சந்தை ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் திறப்புவிழா செய்வதற்கு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் சமூகந்தந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாதன் ஆடையகம், அழகுமாடம்
சேர் பொன், இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச்சந்தி
திருநெல்வேலி

உரிமையாளரும்,
ஊழியர்களும்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# இலவசக்கணனிப்பயிற்சி

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கான
விடுமுறைகால வகுப்புக்கள்.
பதிவுகள் 06-04-2002இற்கு முன்

MOBILE NET MCS COMPUTER SERVICES
MCS

முக்கிய குறிப்பு : நேரில்வந்து பதிவுகளை மேற்கொள்ளவும்

கட்டிடப்பொருள் விநியோகிப்பதற்கான

## கேள்வி அறிவித்தல்

ஜிரிஇசற் - யாழ் புனரமைப்புத்திட்டம்

23.03.2002 வலம்புரி, உதயன் பத்திரிகைகளில் வெளியான மேற்படி கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கேள்விகள் முடிவுத்திகதி 19.04.2002 வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

GTZ-JRP
11, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

இணைப்பாளர்
03.04.2002

(C/3795)

# கண்ணீர் அஞ்சலி



## திரு. சுந்தையா இராசலிங்கம்

(லிங்கம் ஸ்ரோர்ஸ் - நாச்சிமார் கோயிலடி)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப.3.00மணியளவில் நடைபெறும்

காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை

கே. யோகரத்தினம்
(இ.போ.சபை)

(4917)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 16

# சங்கு நாதம்


Sankunatham

சங்கு:~ 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி:~ 20 புதன்கிழமை (03.04.2002) தொலை பேசி 3378 நாதம்:~ 06

# இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம்!

## படையினர் முடங்கும் காலம் வெகுவிரைவில்





நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# சிறீ மாரி நகை மாடத்தின்
## இவரைத் தெரியுமா -பரிசுப் போட்டி இல:-05

**படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?**

(வாசகர்களுக்கான குறிப்பு -)
இவர் உலகில் உள்ள ஓர் பெரும் தீவிரவாத அமைப்பை வழி நடத்திச் செல்பவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 07ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய தாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

இவரைத்தெரியுமா?
போட்டி இல:-05,
சிறிமாரி நகைமாடம்,
49, (187). கே.கே.எஸ் வீதி,
(சத்திரச்சந்தி அருகாமை) யாழ்ப்பாணம்.



**குறிப்பு:-**
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்


**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:- 05**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..........................................

அனுப்புபவரின் முகவரி :-..........................................
..........................................
..........................................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 04இற்கான சரியான விடை**

**இளைய தளபதி விஜய்**

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 04 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

**முதற்பரிசு: –** அ.பிரதீபா
258/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம்பரிசு: –** பா.வத்சலா
41/2, யமுனாரிலேன்,
நல்லூர்.

**மூன்றாம்பரிசு: –** கு.சுஜீவன்
K.K.S றோட்
அம்மன் கோவில் வீதி,
வல்வெட்டித்துறை.

**சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**
*ம.அன்ரலா, தும்பளை, யோ.நித்தியா, நல்லூர், ச.நந்துஜா, வண்ணார்பண்ணை, க.கபில்ஜா, பருத்தித்துறை, க.விஜிதா, வதிரி, க.கஜேந்தினி, யாழ்ப்பாணம், யோ.மதன்பீரசன்னா, நல்லூர், க.ரதீக்கா, கரவெட்டி, இ.விபுலன், ஆனைக்கோட்டை, கு.ராஜினி, திருநெல்வேலி.*






**க.முகுந்தன்**
வயது: 19
சுழிபுரம் மேற்கு
சுழிபுரம்
கவிதை எழுதுதல், பாடல் கேட்டல்



**ப.சுதர்சன்**
வயது: 19
இத்தாவில் பளை.
சினிமா, வானொலி
பத்திரிகை.



**த.பிரதீபன்**
வயது : 21
பொன்னாலை வீதி,
கட்டுடை மானிப்பாய்
பேனாநட்பு
வழமையானவை.




**யோ.நிமலராஜன்**
327/7 கதீற்றல் லேன்
யாழ்ப்பாணம்
கவிதை எழுதுவது
கிரிக்கெட், ரீ.வீ
பார்ப்பது



**மு.சிவதாசன்**
வயது: 40
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
பத்திரிகை வானொலி

# குறுக்கெழுத்துப் போட்டி
## இல 06



அனுப்ப வேண்டிய முகவரி:-

**ஸ்ரீ வாணி நகை மாடம்,**
**குறுக்கெழுத்துப் போட்டி இல 06**
**இல. 173, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

பெயர் :- ..........................................
விலாசம் :- ..........................................
..........................................
..........................................

.......... இங்கே வெட்டுக..........................................

**இடமிருந்து வலம்.**
(1) வஞ்சனை (4) தஞ்சமளிக்கின்ற (6) கடைசி நட்சத்திரம் (7) வாழைஇனம் (8) (வலம்மாறி) தலைமுடி (9) தொடர்ந்து செல்லுதல் (10) ஒன்று சேர்த்தல் (11) இயற்கைத் தோட்டி (13) வெற்றிலை (14) ஆந்தை (17) (வலம்மாறி) மாறுபாடான (18) தன் இடத்தை விட்டு விலகி (19) (வலம்மாறி) தெரு (20) இது பிடித்தல் உடல் நலக்கேடு.

**மேலிருந்து கீழ்.**
(1) ரேகை பார்த்து பலன் சொல்லுதல் (2) தவம் புரிபவர் (3) வாழ் (4) தரும அல்ல (5) கைகூடல் (7) ஒரு இராசி (9) மாலை (10) மலிவு விலை (12) அம்மன் (14) சேர (15) ஒரு தானியம் (16) (கீழிருந்து மேல்) ஒரு மரம்

**குறுக்கெழுத்துப் போட்டி இல 05இற்கான விடைகள்.**

**இடமிருந்து வலம்**
1) அசாத்தியம் 5) சக 6) தசம 8) காடி 9) நாளிகேரம் 11) தமது 13) சூடகம் 16) பாடகம் 18) புலவன் 19) தரும 20) அன்னை 21) திடம்

**மேலிருந்து கீழ்**
1) அசகாயசூரன் 2) சாகடி 3) திருநாமம் 4) தூமம் 7) சரண் 10)கேதம் 11) தகவிலன் 12) துளி 14) ஔடதம் 15) சம்மதி 17) கருட 18) புனை 20) அவ

பல வாசகர்கள் இக் குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விபரம்:-

**முதற் பரிசு:-** கே.தர்ஷனன்
7/3 ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:-** த.சுந்தரமூர்த்தி
பூமகள் வாசம்
புலோலி தெற்கு, புலோலி.

**மூன்றாம் பரிசு:-** ப.தெய்வேந்திரன்
இல 7, பேக்கரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம்**
*கே.அரசேஸ்வரன், கலைமகள் வீதி, சி.சிவரஞ்சனி, அச்சுவேலி ந.சஞ்சயன், யாழ்ப்பாணம், சபா.பாரதி, அல்வாய், கண.ஜீவகாருண்யம், காரைநகர், சி.மதியழகன், அல்வாய், வி.செல்வநாயகம், திருநெல்வேலி, ப.தனஞ்செயன், யாழ்ப்பாணம், ச.சகிலா, ஆனைக்கோட்டை, ப.கனகசிங்கம் யாழ்ப்பாணம்.*

**குறிப்பு:~**
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல 06" அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி:- 07.04.2002.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |

## மரண விளை....

ஒரு டாக்ஸியை கூப்பிட்டு அதிலேறி நகரத்தை நோட்டமிட்டபடி நகரத்தின் ஒதுக்குப்புறமான பகுதியை அடைந்து, அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தமைப்பின் படி குறிப்பிட்ட இடத்தை அடைந்து டாக்ஸியை அனுப்பிவிட்டு நடக்க ஆரம்பித்தார்கள்.

குறிப்பிட்ட பங்களாவை அடைந்ததும் கோலில் பெல்லை அழுத்தினார்கள். கதவு திறக்கப்பட்டு உள்ளே நுழைந்தார்கள். பங்களாவின் ஒரு கோடியை அடைந்து சுவரில் உள்ள புரூஸ்லியின் படத்தை அகற்றி அதன்பின் தெரிந்த சுவிச்சை அழுத்தினார்கள். நிலத்தின் ஒருபகுதி விரிந்து உள்ளே படிகள் ஓடின. படிகள் வழியே இறங்கி உள்ளே உள்ள ஒரு சுவிச்சை அழுத்தினார்கள். விரிந்த நிலப்பகுதி மீண்டும் மூடியது. தொடர்ந்து நடந்தார்கள். "வெல்கம் வெல்கம் மிஸ்டர் ராம் அன்ற் பீற்றர்" என்ற குரல் கேட்டு திரும்பினார்கள்.

.. மங்கலான லைற் வெளிச்சத்தில் கறுப்பு நிற புல்சூட்டில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். "ஆர் யூ 099 ஆம் ஐ கரெக்ட்" என்றான் பீட்டர்.

"எஸ் யூ ஆர் கரெக்ட்". கம் வித் மீ என்று உள்ளே அழைத்துப் போனான். 099 உள்ளே இருந்த வட்டமேசையில் அமர்ந்தார்கள்.

நாம் முதலில் தலைமை அலுவலகத்திற்கு செய்தி அனுப்புவோம் என்று பீட்டர் தன் ப்றீப்கேசை திறந்தான். உள்ளே சாமர்த்தியமாக மறைத்து டிடெக்டர்களின் கண்களில் மண்ணைதூவும் விதமாக இருந்த ஒலிபரப்பும் சாதனங்களை எடுத்து பொருத்தி தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக கட்டளைகளை பெற்றான். அத்துடன் தொடர்பை துண்டித்து விட்டு 099இடம் இருந்து செல்போனை பெற்று நம்பர்களை எழுதினான்.

(தொடரும்)

# ஒரு தாயின் தாலாட்டு

கலைஞர் மு.கருணாநிதி

பகைவெல்லச் சென்றிருக்கும் கணவனது
பனைவரை நெஞ்சத்தின் வீரத்தை நினைத்தவாறு

பகல்முழுதும் குடும்பத்துப் பணிமுடித்துச் சற்றுப்
படுத்துறக்கம் கொள்வதற்குச் செல்லும் முன்னர்

பாசமுடன் மகனைக் கூவியழைத்துக் "கண்ணா!
பாலமுதம் இதோ பருகிட வாடா;" என்பேன்!

"வரமாட்டேன் போ" என்று நிலாவெள்ளி ஒளியினிலே
வட்டமிட்டு விளையாட ஓடுவான் எதிர்வீட்டுப் பிள்ளையுடன்!

வந்துவிடும் எனக்குக் கோபம் - கோலொன்றை எடுத்தோங்கி
"வரமாட்டேன் என்றா சொன்னாய்? இதோ வந்துவிட்டேன்" எனத்

துரத்திடுவேன்; அடிக்கமாட்டேன்! ஆனாலும் என்
தூயமகன் அஞ்சி நடுங்கிப் பதுங்கிடுவான்!

கோலுக்கே இந்தப் பயம் கொள்கின்ற பிள்ளாய்; நீ - நாளை
வேலுக்குப் போர்முனையில் என்ன பதில் சொல்வாய் என்பேன்!

இழுத்து வந்து செல்லமாய்க் கன்னம் கிள்ளிப்
பழுத்திருக்கும் கோவைக்கனியாம் அவன் இதழில்;

தேன்கலந்த பாலில் கிண்ணம் மெல்லக் கவிழ்ந்து
தெம்பாக இருப்பதற்கு முழுவதையும் அருந்தென்பேன்!

அழகுதமிழ் மழலைச்செல்வன் அதனை மறுக்காமல்
அச்சத்தின் காரணமாய் அனைத்தும் பருகிடுவான்!

பிறைபோல இருந்த பிள்ளை முழுநிலவாக உருவெடுத்து
குறையில்லாத் தோற்றமுடன் குன்றம் போல் வளர்ந்து விட்டான்!

தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;

தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்!

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குமகனாய்ப் பிள்ளைதனை வளர்த்தேன்!

கட்டியணைத்துக் களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;

எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி யென்றும்,
எதிரிகளின் கோட்டையில் நம் முரசு முழங்கட்டுமென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, "சென்றுவா மகனே" என அனுப்பி வைத்தேன்

அவனோ;
கொடுவாளால் களிறுகளைக் கொன்று போட்டுக்
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டிவிட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும்,
நெடுமரம் போல பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே
அடக்கவொண்ணா ஆவலுடன் அது காணக் களம் புகுந்தேன்!

ஜயத்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான்...
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான் காணவில்லை!

குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் முளைக்கும் தலைகள்!

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்துவிட்ட
படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி மிதக்கின்ற
துடுப்புக்களாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்,
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றரங்கே!

குரல் வந்த திசைநோக்கிப் பறந்துபோனேன்! - "உள்ள
உரம் வாய்ந்த மகனே! நீ எங்கே?" என்றேன்.

"இங்கே" என்றான்; கண்டு கொண்டேன்; "வலம்புரிச்
சங்கே!" என்றவாறு தழுவிக் கொண்டேன்! கையில்;

தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க; அதில்,
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்!



"வெற்றியம்மா வெற்றி" என்றான் - அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, "என் நித்திலமே!

போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!" என்றேன்!

"ஊடுருவியிருக்கின்றதே மார்பில் . அம்பு - வலி
உனக்கு தாங்காதே மகனே!" என்றேன்; அழுதுவிட்டேன்!

"உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ எனக்கு;
உரைக்கும் வரை நான் உணரவில்லையம்மா!" என்றான்!

உயிர்விட்டான் மடிமீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது - நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா; மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரை! என் மகனே நீ வாழ்க! என வாழ்த்துகின்றேன்!

## இலக்கிய நயம்

"பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சி,
உணவொடு வருந்தும்மனனே! இனியே
புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்,
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே!
உன்னிலல என்னும் புண்ஒன்று அம்பு
மான் உளை அன்ன குடுமித்
தோல் மிசைக் கிடந்த புல் அண லோனே"

தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;

தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்!

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனாய்ப் பிள்ளைதனை வளர்த்தேன்!

கட்டியணைத்துக் களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;

எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி யென்றும்,
எதிரிகளின் கோட்டையில் நம் முரசு முழங்கட்டுமென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, ''சென்றுவா மகனே'' என அனுப்பி வைத்தேன்

அவனோ;
கொடுவாளால் களிறுகளைக் கொன்று போட்டுக்
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டிவிட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும்,
நெடுமரம் போல் பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே
அடக்கவொண்ணா ஆவலுடன் அது காணக் களம் புகுந்தேன்!

ஐயத்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான்...
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான் காணவில்லை!

குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் முளைக்கும் தலைகள்!

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்துவிட்ட
படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி மிதக்கின்ற
துடுப்புக்களாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்,
''ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே! நீ

போர்க்களத்துப் பிணமாகி வாழ்கின்றாயா? அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?'' எனக்கேட்டுத் துடித்திட்டேன்!

''வாழ்கின்றேனம்மா வீரனாக!'' என்றொரு குரல்



''வெற்றியம்மா வெற்றி'' என்றான் - அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, ''என் நித்திலமே!

போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!'' என்றேன்!

''ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு - வலி
உனக்கு தாங்காதே மகனே!'' என்றேன்; அழுதுவிட்டேன்!

''உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ எனக்கு;
உரைக்கும் வரை நான் உணரவில்லையம்மா!'' என்றான்!

உயிர்விட்டான் மடிமீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது - நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா; மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரை! என் மகனே நீ வாழ்க! என வாழ்த்துகின்றேன்!

**கலைஞர் மு.கருணாநிதி**

## இலக்கிய நயம்

''பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சி,
உணவொடு வருந்துமனனே! இனியே
புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்,
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே!
உன்னிலல என்னும் புண்ஒன்று அம்பு
மான் உளை அன்ன குடுமித்
தோல் மிசைக் கிடந்த புல் அண லோனே''

**பொருள் விளக்கம்**

மடுப்ப = உண்ணுமாறு செய்ய. செறாஅது= செல்லமாகக் கோபித்து. உயவொடு = கவலையுடன். மனனே = மனமே. களிறட்டு ஆனான் = களிறுகளைக் கொன்றவனானான். உரவோர் = மூத்தோர் (தந்தை). உன்னி = கவனித்தல். மான் உளை அன்ன குடுமி = குதிரை மயிர் போன்ற அடர்த்தியான குடுமி. தோல் = கேடயம். புல் = புல்லிய. அணலோன் = தாடியுடையவன்.

# காதல் என்னும் தீயினிலே



மனசுக்குள் உட்கார்ந்து மணிய டித்தாய் - என்
மௌனத்தை விழியாலே மொழிபெ யர்த்தாய்
கனவுக்குள் நின்று குரல்கொடுத்தாய் - என்
கவிதைக்கு உன்வார்த்தை வரம்கொ டுத்தாய்
கதவோரம் நீ வந்து மிகச்சிரித்தாய் - என்
கண்ணுக்குள் தூக்கத்தைச் சிறையெ டுத்தாய்
இதமாக என்னெஞ்சைக் கொளுத்தி விட்டாய் - அடி
எரியட்டும் ஏனின்று நிறுத்திவிட்டாய்?

ஓடியாத கிளையென்று நினைத்தி ருந்தேன் - கிளி
உட்கார்ந்து போனவுடன் வளைந்து போனேன்
வடியாத நதியென்று நினைத்திருந்தேன் - நீ
வந்தவுடன் உன்மடியில் வடிந்து போனேன்
ஒருகோடி மின்னல்கள் மனதுக் குள்ளே - தினம்
ஊர்வலங்கள் போகின்ற அனுப வங்கள்
இருந்தாலும் இது ஒன்றும் இதமாயில்லை - அட
என்றாலும் மனம்சொல்லும் பரவா யில்லை.

இறந்தகாலம் காதலுக்கு மட்டும், இல்லை - அது
இருந்தாலோ அதற்குப்பேர் காத லில்லை




பிறந்தபயன் காதலிலே பூர்த்தி யாகும் - காதல்
பிழம்பாலே நம்கண்கள் ஜோதி யாகும்;
வசந்தங்கள் புதுப்பிக்கும் மரத்தை எல்லாம் - வரும்
வைகைநதி புதுப்பிக்கும் கரையை எல்லாம்
நிசத்தைத்தான் சொல்லுகிறேன் மாற்றமில்லை - காதல்
நெருப்பொன்றே புதுப்பிக்கும் மானுடத்தை

உன்னைநான் பார்த்தவுடன் நெஞ்சுக் குள்ளே - அடி
உட்சிறகு ஒருலட்சம் முளைக்கக் கண்டேன்
விண்ணைப்போய் முட்டிவிடக் கூடாதென்றே - இன்று
விரிகின்ற சிறகுகளைச் சுருக்கிக் கொண்டேன்
எங்கேநான் பறந்தாலும் என்ன பெண்ணே - தினம்
இளைப்பாற உன்மடிதான் எனக்கு வேண்டும்
கங்கைநதி ஊரெல்லாம் திரிந்தால் என்ன? - அடி
கடலில்தான் அது சென்று சேர வேண்டும்

சிரிப்பதற்கு மட்டுமந்த உதடுபோலும் - பார்வை
சிந்திவிழ மட்டுமந்தக் கண்கள் போலும்
எரிப்பதற்கு மட்டுமந்த அழகுபோலும் - ஆணை
இடுவதற்கு மட்டுமந்த விரல்கள் போலும்
கறுப்புகளை மறந்துவிட்டு எரிந்து நிற்கும் - ஒரு
கனகமணி விளக்கைப் போல் நமக்கும் தோழி
உறுப்புகளை மறந்துவிட்ட காதல் வேண்டும் - அது
உண்மையிலே சாத்தியமா முயன்று
பார்ப்போம்.

வைரமுத்து


# கைரேகை சாஸ்திரம்



1. ஆயுள் ரேகை
2. புத்தி ரேகை
3. இருதய ரேகை
4. விதி ரேகை
5. திருமண ரேகை
6. ஆரோக்கிய ரேகை
7. செவ்வாய் ரேகை
8. சூரிய ரேகை

## சூரிய ரேகை
## (THE LINE OF SUCCESS) OR (THE LINE OF SUN)

சூரிய ரேகை, மணிக்கட்டிலிருந்து எழுந்து மோதிர விரலின் அடிப்பாகம் வரையில் அமைந்திருக்கும். இதுவே சூரிய ரேகையின் நல்ல அமைப்பாகும். இந்த ரேகை சிலருக்குப் பிறந்த நாளிலிருந்தும் சிலருக்கு ஆயுள் நடுவிலும் தோன்றலாம். (படம் - 30)



சூரிய ரேகையென்ற புண்ணிய ரேகை தன் ஸ்தானத்தில் சுத்தமாக அமைந்திருந்தால், புத்தியால் ஜீவனம் செய்பவராகவும், பணக்காரராகவும், நற்காரியங்களில் செலவு செய்பவராகவும், எல்லோராலும் போற்றப்படுபவராகவும் இருப்பார்.

சூரிய ரேகை இல்லாதவர்கள் விண்ணை வில்லாக வளைக்கக் கூடிய அளவுக்கு எவ்வளவுதான் கெட்டிக்காரர்களாக இருந்தாலும் அவர்களுடைய திறமைகள் பிறரைக் கவரமாட்டா.


சூரிய ரேகை இருதய ரேகையிலிருந்து எழுமாகில் செயற்கை

சூரிய ரேகை ஆயுள் ரேகையின் உட்புறத்தில், சுக்கிர மேட்டிலிருந்து எழுந்து மேலே செல்லுமாகில், ஒரு பணக்காரப் பெண்ணைக் காதலிப்பதாலோ, மணப்பதாலோ அதிக செல்வமும் வெற்றியும் கிடைக்கும். (படம் -32)





சூரிய ரேகை செவ்வாய் மேட்டிலிருந்து எழுமாகில் வாழ்க்கையில் வெற்றி கிட்டும். ஆனால் அத்தகைய வெற்றி அதிக முயற்சி செய்து கடினமாக உழைத்து பல விதமான போராட்டத்திற்குபின் கிடைப்பதாக இருக்கும்.

சூரிய ரேகையிலிருந்து ஒரு கிளை எழுந்து விரல்களின் அடியில் ஏதாவது ஒரு கிரகத்தின் மேட்டைக் குறித்துப் பாய்ந்து செல்லுமாகில், அத்தகைய வர்களுக்கு அந்தந்தக் கிரகத்துக்குரிய தொழில் மூலம் அல்லது பொருள்கள் மூலம் வெற்றி கிட்டும். (படம் -33)




அதாவது, அத்தகைய கிளை ரேகை சுண்டு விரலின் கீழே மேட்டிற்கு செல்லுமானால், வியாபாரத்துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் வெற்றி கிட்டும். (படம் -33)





சூரிய ரேகை சந்திர மேட்டிலிருந்து அதாவது உள்ளங்கையின் வெளிப்புறத்திலிருந்து எழுந்து, மேல் நோக்கி செல்லுமானால், அத்தகையவர்கள் பிறர் உதவியால் நாடக மேடையிலோசினிமாத் துறையிலோ புகழ் பெற்று நடிகர்களாகவும், பேசும் திறமையுள்ளவர்களாகவும், சங்கீத வித்துவான்களாகவும் திகழ்ந்து, புகழ்பெற்று, மக்களால் போற்றப்படுவார்கள். ஆனால் மணிக்கட்டில் இருந்தோ, உள்ளங்கையின் நடுவிலிருந்தோ எழும் சூரிய ரேகை, கொடுக்குமளவு நிலையான புகழை இந்த ரேகை அமைப்பு அழிக்காது. (படம் - 35)



பல சூரிய ரேகைகள் கை நடுவிலிருந்து எழுந்து மேலே சூரிய மேடுவரை செல்லுமாகில் அத்தகையவர்கள் நிலையான ஒரு குறிக்கோள் உள்ளவர்கள் அல்லவென்றும், எல்லாவற்றிற்கும் ஆசைப்பட்டு வகை தொகையறியாது ஈடுபடுபவர்கள் என்றும் கொள்ள வேண்டும். ஆயினும் ஒரே ரேகையாக அமைந்தவர்களுக்கு ஏற்படும் வெற்றிக்கும் அமைதிக்கும் இது ஈடாகாதென்பதை அறிய வேண்

வர்களுக்கு ஏற்படும் வாழ்க்கையின் வெற்றியே ஒரு தனித்தன்மை பொருந்தியதாகவும், மக்களின் மதிப்புக்குரியதாகவும் இருக்கு மென்பதை மறுக்க முடியாது.

### சூரிய ரேகையில் காணப்படும் மற்ற குறிகள்.

சூரிய ரேகையில் தீவுக்குறி காணப்பட்டால், அது சிறிது தோல்வியைக் குறிப்பிடும். ஆனால் மேற்கண்ட ரேகை துண்டிக்கப் பட்டிருப்பதால் ஏற்படும் தோல்வி போன்றதன்று. மற்றும் அந்த ஆயுளளவில் அவர்களுடைய தன்மானத்திற்கு தீங்கு ஏற்படும் வகையில் அவதூறுகளும் அபகீர்த்தியும் ஏற்படும். (படம் -37)




சூரிய ரேகையில் நட்சத்திரக் குறியிருக்குமாகில் மிகவும் வியப்பூட்டும் வகையில் பிரமாதமான வெற்றியும் லாபமும் ஏற்படும்.

### சூரிய ரேகை பற்றிய மேலும் சில குறிப்புக்கள்.

சூரிய ரேகை, ஆயுள் ரேகையிலிருந்து புத்திரேகையிலிருந்தோ, விதி ரேகையிலிருந்தோ, சந்திர மேட்டிலிருந்தோ, உள்ளங் கையின் நடுவிலிருந்தோ, (செவ்வாய் மேட்டிலிருந்தோ)


சூரிய ரேகை, நன்றாக அமை



| | |
|---|---|
| 1. ஆயுள் ரேகை | 2. புத்தி ரேகை |
| 3. இருதய ரேகை | 4. விதி ரேகை |
| 5. திருமண ரேகை | 6. ஆரோக்கிய ரேகை |
| 7. செவ்வாய் ரேகை | 8. சூரிய ரேகை |


# சூரிய ரேகை
## (THE LINE OF SUCCESS) OR (THE LINE OF SUN)

சூரிய ரேகை, மணிக்கட்டி விருந்து எழுந்து மோதிர விரலின் அடிப்பாகம் வரையில் அமைந்திருக்கும். இதுவே சூரிய ரேகையின் நல்ல அமைப்பாகும். இந்த ரேகை சிலருக்குப் பிறந்த நாளிலிருந்தும் சிலருக்கு ஆயுள் நடுவிலும் தோன்றலாம். (படம் - 30)



30

மேற்கண்டவாறு நன்கு அமைந்துள்ள சூரிய ரேகையை உடையவர்கள் மிக்க அதிர்ஷ்ட சாலிகளாகவும், புகழ் பெற்றவர்களாகவும், புத்திசாலிகளாகவும், வாழ்க்கையில் எத்துறையிலும் வெற்றியையே காண்பவர்களாகவும் திகழ்வார்கள். அவ்வாறு அமைந்த சூரிய ரேகை எவ்வித இடைவெளியும் இல்லாமல் தொடர்ச்சியாசு இருந்தால் வாழ்க்கையில் வெற்றியும் லாபமும் தொடர்ச்சியாகக் கிட்டும். (படம் -30)




30

சூரிய ரேகையென்ற புண்ணிய ரேகை தன் ஸ்தானத்தில் சுத்தமாக அமைந்திருந்தால், புத்தியால் ஜீவனம் செய்பவராகவும், பணக்காரராகவும், நற்காரியங்களில் செலவு செய்பவராகவும், எல்லோராலும் போற்றப்படுபவராகவும் இருப்பார்.

சூரிய ரேகை இல்லாதவர்கள் விண்ணை வில்லாக வளைக்கக் கூடிய அளவுக்கு எவ்வளவுதான் கெட்டிக்காரர்களாக இருந்தாலும் அவர்களுடைய திறமைகள் பிறரைக் கவரமாட்டா.

சூரிய ரேகை இருதய ரேகையிலிருந்து எழுமாகில் செயற்கையான பொருள் மீதும் கலைகள் மீதும் அதிகப் பற்றுதல் உள்ளவர்களாக இருப்பார்கள். அத்துடன் புத்திரேகையும் நன்கமைந்திருந்தால், மேற்கண்ட கலையுணர்ச்சிமட்டுமின்றி கலைகளை வளர்க்கும் ஆர்வமாகவும் வளர்ந்து அத்துறையில் முன்னேற்றமும் வெற்றியும் கிட்டுவதாக இருக்கும்.


சூரிய ரேகை, விதி ரேகையிலிருந்து எழுமாகில், அத்தகையவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைவது நிச்சயமென்பதை அது குறிப்பிடும். அவ்வாறு விதி ரேகையில் சூரிய ரேகை எழும் ஆயுள் அளவில் அத்தகைய வெற்றியும் லாபமும் கிடைக்குமென்பதை அறிய வேண்டும். (படம்- 31)



31


சூரிய ரேகை செவ்வாய் மேட்டிலிருந்து எழுமாகில் வாழ்க்கையில் வெற்றி கிட்டும். ஆனால் அத்தகைய வெற்றி அதிக முயற்சி செய்து கடினமாக உழைத்து பல விதமான போராட்டத்திற்குபின் கிடைப்பதாக இருக்கும்.

சூரிய ரேகையிலிருந்து ஒரு கிளை எழுந்து விரல்களின் அடியில் ஏதாவது ஒரு கிரகத்தின் மேட்டைக் குறித்துப் பாய்ந்து செல்லுமாகில்; அத்தகைய வர்களுக்கு அந்தந்தக் கிரகத்துக்குரிய தொழில் மூலம் அல்லது பொருள்கள் மூலம் வெற்றி கிட்டும். (படம் -33)



33

அதாவது, அத்தகைய கிளை ரேகை சுண்டு விரலின் கீழே மேட்டிற்கு செல்லுமானால், வியாபாரத்துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் வெற்றி கிட்டும். (படம் -33)



33

சூரிய மேட்டிலேயே சென்றால், மன அமைதியும் பிரகாசமான புகழும் வெற்றியும் சுக வாழ்வும் ஏற்படும்.

சனி மேட்டில் மேற்கண்ட கிளை பாயுமானால், அதிர்ஷ்ட யோகமுள்ள தலைவர்களாக இருப்பார்கள்.

குரு மேட்டிற்கு அந்தக் கிளை ரேகை செல்லுமாகில் பிறர் மீது அதிகாரம் செலுத்தும் உயர்ந்த பதவியை வகிப்பவர்களாகவும், எத்துறையிலும் வெற்றியைக் காண்பவர்களாகவும், புகழ்மிக்கவர்களாகவும் திகழ்வர்.

சூரிய ரேகை புத்தி ரேகையிலிருந்து எழுமானால், அத்தகையவர்களுக்கு எந்த முயற்சியிலும் அதிர்ஷ்டம் கிட்டும். ஆனால், அப்படிப்பட்ட அதிர்ஷ்டத்தை வெற்றியை அடைவதற்கு அவர்களுடைய புத்தியே காரணமாக இருக்கும். (படம் -34)

யிலோசினிமாத் துறையிலோ புகழ் பெற்று நடிகர்களாகவும், பேசும் திறமையுள்ளவர்களாகவும், சங்கீத வித்துவான்களாகவும் திகழ்ந்து, புகழ்பெற்று, மக்களால் போற்றப்படுவார்கள். ஆனால் மணிக்கட்டில் இருந்தோ, உள்ளங்கையின் நடுவிலிருந்தோ எழும் சூரிய ரேகை, கொடுக்குமளவு நிலையான புகழை இந்த ரேகை அமைப்பு அழிக்காது. (படம் - 35)



35

பல சூரிய ரேகைகள் கை நடுவிலிருந்து எழுந்து மேலே சூரிய மேடுவரை செல்லுமாகில் அத்தகையவர்கள் நிலையான ஒரு குறிக்கோள் உள்ளவர்கள் அல்லவென்றும், எல்லாவற்றிற்கும் ஆசைப்பட்டு வகை தொகையறியாது ஈடுபடுபவர்கள் என்றும் கொள்ள வேண்டும். ஆயினும் ஒரே ரேகையாக அமைந்தவர்களுக்கு ஏற்படும் வெற்றிக்கும் அமைதிக்கும் இது ஈடாகாதென்பதை அறிய வேண்டும்.

சூரிய ரேகை துண்டிக்கப்பட்டிருந்தால் அவ்வாறு துண்டிக்கப் பட்டுள்ள ஆயுளளவில் முயற்சியில் தோல்வியடைவது திண்ணம். அத்தகைய தோல்வி அந்த ரேகையின் இடைவெளியுள்ள வருஷங்கள் வரை தொடர்ந்து இருக்கும். (படம் -37)



36

சூரிய ரேகை பலர் கைகளில் இருக்காது. அத்தகையவர்கள் தம் முயற்சியில் லாபம் என்பதையோ, வெற்றி என்பதையோ காண்பதரிது. ஆனால் மற்ற ரேகைகளின் அமைப்புக்களால் சிறிதளவு லாபமும் மன அமைதியும் புகழும் பெற்றவர்களாக இருக்கலாம். ஆனால் சூரிய ரேகையைக் கையில் தாங்குப

அந்த ஆயுளளவில் அவர்களுடைய தன்மானத்திற்கு தீங்கு ஏற்படும் வகையில் அவதூறுகளும் அபகீர்த்தியும் ஏற்படும். (படம் -37)



37

சூரிய ரேகையில் நட்சத்திரக் குறியிருக்குமாகில் மிகவும் வியப்பூட்டும் வகையில் பிரமாதமான வெற்றியும் லாபமும் ஏற்படும்.

### சூரிய ரேகை பற்றிய மேலும் சில குறிப்புக்கள்.

சூரிய ரேகை, ஆயுள் ரேகையிலிருந்து புத்திரேகையிலிருந்தோ, விதி ரேகையிலிருந்தோ, சந்திர மேட்டிலிருந்தோ, உள்ளங் கையின் நடுவிலிருந்தோ, (செவ்வாய் மேட்டிலிருந்தோ)

சூரிய ரேகை, நன்றாக அமையப் பெற்று மோதிர விரலும் பாம்பு விரலும் (நடுவிரல்) நீளத்தில் சமமாக இருந்தாலும், அப்படிப்பட்ட ஜாதகங்கள் சூதாட்டங்களில் அதிக ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள். அடிக்கடி அப்படிப்பட்ட சூதாட்டங்களில் சிறந்த வெற்றியையும் அடைவார்கள்.

சூரிய மேட்டின் மீது மட்டுமே சூரிய ரேகை தென்பட்டால், அப்படிப்பட்டவர்களின் இறுதிக் காலம் நெருங்குகிறது என்றே பொருள். அவர்கள் அந்தக் குறுகிய காலத்தில் ஏதாவது சில வெற்றிகளை மட்டும் அடைவார்கள். அதனால் பலன் ஏதும் இல்லை.

பொதுவாகச் சூரிய ரேகை நன்றாக அமையப் பெற்று கையில் உள்ள கிரக மேடுகள் பள்ளம் தட்டிப் போய் உட்குழிந்திருந்தால், சூரிய ரேகைக்கான பலன் எதையும் எதிர் பார்க்க முடியாது.

ஆகவே கையின் அமைப்பு நன்றாக இருந்தால்தான் சூரிய ரேகைக்கான பலனை எதிர் பார்க்க முடியும் என்பதை உணர வேண்டும். *(தொடரும்)*

**ஸ்ரீனிவாசன்**

## என் தம்பி ஊர்சுற்றுகிறான். எப்படி வழிக்கு கொண்டு வருவது?

சுந்தர் மானிப்பாய்
★அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படுமா?
● **வாஜ்பாயின் பாரதிய ஜனதாக்கட்சி எதிரக் கட்சியாக மாறும்போது கட்டப்படும்.**

மதி பளை
★என் அப்பா துப்பாக்கியும் கையுமாக அலைகிறார். அவரிடமிருந்து என் காதலனை எப்படிக் காப்பாறுவது?
● **இன்னுமா ஆயுதம் ஒப்படைக்கவில்லை. கண்காணிப்புக் குழுவிடம் முறையிடும்.**

சூரியா சுழிபுரம்
★ பெண்களை எடைபோடுவது எப்படி?



● **நடை, உடை, பாவனையை வைத்து எடை போடலாம்.**

குமார் கந்தர்மடம்
★ ஆண்டவன் ஏன் ஆண்களைப் படைத்தான்?
● **செய்த பாவத்திற்குப் பெண்களிடம் தண்டனை பெறுவதற்காக.**

கற்பகவல்லி பருத்தித்துறை
★ அந்நிய நாடு சென்று வருபவர் தம்முடன் எதனைக்கொண்டு வருகின்றனர்?
● **அந்நிய செலாவணியை**

சி.திருச்செந்துரன் மிருசுவில்
★ மாண்புமிகு வியாசரே! குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சி கண்டு வரும் ஈழதேசத்தின் தனித்துவ வார இதழ் சங்குநாதத்தின் வளர்ச்சியின் இரகசியம் யாதோ....!!!
● **திருச்செந்தூரனின் திருவருளே!**

குணரத்தினம் நாவலர்வீதி
★காதல் ஒரு பொழுது போக்கு என்று என் நண்பன் கூறுகின்றார் இது சரியா?
● மனைக்கு விளையாட்டு

த.ராஜினி தும்பளை
★ 'உண்மையான நட்பு' என்றால் எப்படி இருக்கும் என்று நீங்க நினைக்கிறீங்க?
● **'நெஞ்சத்து அக நக நட்பது நட்பு' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறாரல்லவா?**

எஸ்.கவிதரன் சண்டிலிப்பாய்
★ வியாசரே! நண்பனுக்காக காதலியை இழக்கலாமா?
● **நண்பனுக்காக இழக்கலாம். ஆனால் நண்பனிடம் இழக்கக் கூடாது.**


செ. ரமேஷ் கரவெட்டி
★ வியாசரே! என் நண்பன் என்னை தன் மாமியார் வீட்டுக்கு வரும்படி அழைக்கிறானே! போகலாமா?
● **பயப்படுகிறார் போலும் சும்மா போய் வாரும்ன.**

தமிழின் தோழி உரும்பிராய்
★வியாசரே! ஆணும் பெண்ணும் தூய நட்புடன் பழகுவதை சமுதாயம் தீய நோக்கோடு பார்க்கிறது. என கடந்த இதழில் வாசகியொருவர்குறிப்பிட்டி

## நாட்கணக்கில் வந்து தங்கும் விருந்தாளிகளை எப்படி விரட்டுவது?


ருந்தார். ஏமாற்றாமல் மனதைத் திறந்து சொல்லுங்கள்..... காதலில்லாமல் தூய்மையான நட்புடன் ஆணும் பெண்ணும் பழக முடியுமா? (நான் இல்லை என்கிறேன்)
● **உங்கள் பக்கம் தான் நானும்.**

★ பெண்களுக்கு பின்னால் திரியும் ஆண்களைப் போல், ஆண்களுக்குப் பின்னால் திரியும் பெண்களும் உண்டா?



திருமாறன் கல்வியங்காடு
★ மாமனிதர் கலைஞானியின் கனவுகள் எப்போது நனவாகும்?
● **தமிழ் மக்களின் கனவுகள் என்று நனவாகிறதோ அன்றுதான் கலைஞானியின் கனவுகள் நனவாகும்.**

தர்ஷனன் கொக்குவில்
★ என் தம்பி ஊர்சுற்றுகிறான். எப்படி வழிக்கு கொண்டு வருவது.



● **வண்டிலில் பூட்டிவிடும் எல்லாம் சரியாகிவிடும்.**

## பெண்களை எடைபோடுவது எப்படி?

மகேந்திரலிங்கம் தென்கோப்பாய்
★ மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றால் கணவன் அமைவதெல்லாம்.........?
● **மனைவி செய்த மேலைத் தவம்**

அ.கஜன் நீர்வேலி
★ தம்மை காதலிக்காவிட்டால் பெண் மீது கட்டுக்கதை கட்டி பெண்ணின் மனதை நோக வைக்கும் ஆண்கள் எப்போது திருந்துவார்கள்?
● **ஆறடி நிலம் சொந்தமாகும் போது திருந்துவார்கள்.**

## வியாசரின் பதில்கள்

ந.பஞ்சசீலன் அச்சுவேலி
★ வியாசர் அவர்களே! நான் காதலிக்கும் பெண்ணிற்கு காதலர் தினத்தில் கற்கண்டு கொடுக்

## மாமியார் - மருமகள் சண்டையில் கணவன் என்ன செய்ய வேண்டும்?

கண்டு கொடுக்கலாம்.

கே.சுசந்திகா நல்லூர்
★ நேர்மையில்லாத கணவனிடம் ஓர் மனைவி எதுவரை அமைதியும் பொறுமையும் காக்க வேண்டும்?
● **கணவனிடம் நேர்மையை ஏற்படுத்தும் வரை.**

ஆ.டீன்ஸ் யாழ்ப்பாணம்
★ உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே. கட்சி பெற்ற வெற்றி சமாதானத்திற்கான வெற்றியல்ல என சில கட்சிகள் கூறுகின்றதே?
● **இன வெறியர்களின் வம்பு வார்த்தை அது.**

மருமகன் யாழ்ப்பாணம்
★ எங்கள் 'மாமாக்கள்' இங்கே வருவதால் ஆபாச உடைகளும், அடிதடிக் கும்பல்களும் அடங்குமா... ஒடுங்குமா?
● **அடங்கி ஒடுங்கி அற்றேபோகும்.**

எஸ்.ராம்சே சமரபாகு
★ நான் சொல்வதே சட்டம். நான் எது சொன்னாலும் ஆம் என்று தலையாட்ட வேண்டும். உங்கள் பின் நான் வரமாட்டேன். என்பின் நீங்கள் வர வேணும் எனத் தம்மைப் பெருமையாக நினைத்து மற்றவரை ஏமாற்றும் ஊர்ப் பேர்வழிகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?
● **சமூகத்தை அறியாத சாமானியர்கள்.**

வித்தியா குருநகர்
★ தோல்வியைக் கண்டு துவண்டு விடுகிறேன். என்ன செய்வது?
● **தோல்வி தான் வெற்றியின் முதற்படி என எண்ணிக் கொள்ளலாம்.**

ராகவன் சித்தங்கேணி
★ கணவன் மனைவி உறவு எப்படியிருக்க வேண்டும்?
● **மலரும் – மணமும் போல இருக்க வேண்டும்.**

சுரேஸ் சண்டிலிப்பாய்
★ மாமியார் - மருமகள் சண்டையில் கணவன் என்ன செய்ய வேண்டும்?



● **நடுவராக இருந்து தீர்ப்பளிக்க வேண்டும்.**

நிலா அரியாலை
★ என் காதலுக்காக வீட்டில் எதிர்ப்பு. காதலனுடன் ஓடலாமா?
● **சசிரேகையை அபிமன்யு கௌரவமாகக் கூட்டிச் சென்ற கதை தெரியாதா?**


விக்னேஸ் பொலிகண்டி
★ கோபத்தைக் குறைக்க ஒரு வழி சொல்லுங்களேன்?
● **கோபம் வரும்போதெல்லாம் மனைவியை நினைத்துக் கொள்ளும்.**

பரந்தாமன் யாழ்ப்பாணம்
★ நாட்கணக்கில் வந்து தங்கும் விருந்தாளிகளை எப்படி விரட்டுவது?



● **கூடையைக் கொடுத்து சந்தைக்கு ஆளை அனுப்பும். (காசை மட்டும் கொடுக்காமல்)**

மாலதி புத்தூர்
★ அடுத்த நூற்றாண்டில் தமிழனின் எதிர்காலம் எப்படியிருக்கும்?
● **உலகில் தமிழன் வாழ்ந்தானா? என்ற கேள்விக்குரியவனாக இருப்பான்.**



● நடை, உடை, பாவனையை வைத்து எடை போடலாம்.

குமார் கந்தர்மடம்
★ ஆண்டவன் ஏன் ஆண்களைப் படைத்தான்?
● செய்த பாவத்திற்குப் பெண்களிடம் தண்டனை பெறுவதற்காக.

கற்பகவல்லி பருத்தித்துறை
★ அந்நிய நாடு சென்று வருபவர் தம்முடன் எதனைக்கொண்டு வருகின்றனர்?
●அந்நிய செலாவணியை

சி.திருச்செந்துரன் மிருசுவில்
★ மாண்புமிகு வியாசரே! குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சி கண்டு வரும் ஈழதேசத்தின் தனித்துவ வார இதழ் சங்குநாதத்தின் வளர்ச்சியின் இரகசியம் யாதோ....!!!
● திருச்செந்துரனின் திருவருளே!

குணரத்தினம் நாவலர்வீதி
★காதல் ஒரு பொழுது போக்கு என்று என் நண்பன் கூறுகின்றார் இது சரியா?
● பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகும் கதையாகவல்லவா இருக்கிறது உம் நண்பனின் கதை.

தமிழின் தோழி உரும்பிராய்
★வியாசரே! ஆணும் பெண்ணும் தூய நட்புடன் பழகுவதை சமுதாயம் தீய நோக்கோடு பார்க்கிறது. என கடந்த இதழில் வாசகியொருவர் குறிப்பிட்டிருந்தார். ஏமாற்றாமல் மனதைத் திறந்து சொல்லுங்கள்..... காதலில்லாமல் தூய்மையான நட்புடன் ஆணும் பெண்ணும் பழக முடியுமா? (நான் இல்லை என்கிறேன்)
●உங்கள் பக்கம் தான் நானும்.

## நாட்கணக்கில் வந்து தங்கும் விருந்தாளிகளை எப்படி விரட்டுவது?

★ பெண்களுக்கு பின்னால் திரியும் ஆண்களைப் போல், ஆண்களுக்குப் பின்னால் திரியும் பெண்களும் உண்டா?



● உலகில் எதிலும் புழநடைகள் உண்டு.

மகேந்திரலிங்கம் தெங்கோப்பாய்
★ மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றால் கணவன் அமைவதெல்லாம்.........?
● மனைவி செய்த மேலைத் தவம்

அ.கஜன் நீர்வேலி
★ தம்மை காதலிக்காவிட்டால் பெண் மீது கட்டுக் கதை கட்டி பெண்ணின் மனதை நோக வைக்கும் ஆண்கள் எப்போது திருந்துவார்கள்?
● ஆறடி நிலம் சொந்தமாகும் போது திருந்துவார்கள்.

## வியாசரின் பதில்கள்

ந.பஞ்சசீலன் அச்சுவேலி
★ வியாசர் அவர்களே! நான் காதலிக்கும் பெண்ணிற்கு காதலர் தினத்தில் கற்கண்டு கொடுக்கலாமா?
● மகனே! பஞ்சசீலா, அவசரப் படாதே திருமணத்தின் போது கற்

மருமகன் யாழ்ப்பாணம்
★ எங்கள் 'மாமாக்கள்' இங்கே வருவதால் ஆபாச உடைகளும், அடிதடிக் கும்பல்களும் அடங்குமா... ஒடுங்குமா?
● அடங்கி ஒடுங்கி அற்றேபோகும்.

எஸ்.ராம்சே சமரபாகு
★ நான் சொல்வதே சட்டம். நான் எது சொன்னாலும் ஆம் என்று தலையாட்ட வேண்டும். உங்கள் பின் நான் வரமாட்டேன். என் பின் நீங்கள் வர வேணும் எனத் தம்மைப் பெருமையாக நினைத்து மற்றவரை ஏமாற்றும் ஊர்ப் பேர்வழிகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?
● சமூகத்தை அறியாத சாமானியர்கள்.

வித்தியா குருநகர்
★ தோல்வியைக் கண்டு துவண்டு விடுகிறேன். என்ன செய்வது?
● தோல்வி தான் வெற்றியின் முதற்படி என எண்ணிக் கொள்ளலாம்.

ராகவன் சித்தங்கேணி
★ கணவன் மனைவி உறவு எப்படியிருக்க வேண்டும்?
● மலரும் ~ மணமும் போல இருக்க வேண்டும்.

★ கோபத்தைக் குறைக்க ஒரு வழி சொல்லுங்களேன்?
● கோபம் வரும்போதெல்லாம் மனைவியை நினைத்துக் கொள்ளும்.

பரந்தாமன் யாழ்ப்பாணம்
★ நாட்கணக்கில் வந்து தங்கும் விருந்தாளிகளை எப்படி விரட்டுவது?



● கூடையைக் கொடுத்து சந்தைக்கு ஆளை அனுப்பும். (காசை மட்டும் கொடுக்காமல்)

மாலதி புத்தூர்
★ அடுத்த நூற்றாண்டில் தமிழனின் எதிர்காலம் எப்படியிருக்கும்?
● உலகில் தமிழன் வாழ்ந்தானா? என்ற கேள்விக்குரியவனாக இருப்பான்.

**பெண்களுக்கு பின்னால் திரியும் ஆண்களைப் போல், ஆண்களுக்குப் பின்னால் திரியும் பெண்களும் உண்டா?**

# வாசகர் இதயநாதம்

புதுமை மிகவும் உடையதுவாய்
போற்றும் அம்சம்
உடையதுவாய்
மனதைக் கவரும் மெருகுடனே
மாண்புடன் சங்குநாதம்
பொலிகின்றதே!

நாவல் சிறுகதை
உடையதுவாய்
நல்ல ஆக்கங்கள் உ
டையதுவாய்
யாவரும் போற்றும் சங்குநாதம்
வலம்புரி மலராய்
திகழ்கின்றதே!

இலக்கிய கட்டுரை பலவுண்டு
இனிக்கும் நகைச்சுவை
தானுண்டு
இனிய தமிழின் சுவை பரப்பி
இன்பம் தருவது சங்குநாதமே!

கா.கணேசதாசன்

வாசகர் உள்ளங்களுக்கு
ஊற்றான நாதம்
இளம் எழுத்தாளர்களுக்கும்
வழிகாட்டியாய் ஒலித்திடும் நாதம்.

வி.விஜேந்திரா,
யாழ்.பல்கலைக் கழகம்.

புதன்கிழமை விடியற் காலை தனில்
வான் பரப்பில் இருந்துவரும் காற்றலை
யொன்று
எம் கைகளிலே தவழ்ந்து நிற்குதுவாம்
துன்பம் எம்மண்ணிலே இருந்தபோதும்
போர் ஓய்ந்து சுமுதாயம் என்ற
வேளையிலே
மகிழ்ச்சியான நாதம் செவிகளில்
கேட்கும்வேளை
செய்திகள் பல சுமந்து தென்றல்
காற்றுப் போல
சென்று மாணவரின் மனதைக் கவர்ந்தே
பெண்களின் வாழ்வினிலே வகைகள்
பலசொல்லும்
சங்குநாதமே எப்பொழுதும் உன் புகழிலே
சிறந்து வர இறையருளை வேண்டி
நிற்கிறேன்.

ர. பிரவைா,
யா/அருணோதயாக் கல்லூரி

சங்குநாதமே!
எப்போது புதன்கிழமை வரும்
என்று எதிர்பார்த்து சங்குநாதத்தை
வாங்கி படித்து பரவசமடைவேன்
உன்னில் அடங்கி வரும் அனைத்து
அம்சங்களும் அருமையிலும் அருமை
அதிலும் மரணவிளையாட்டு மிகவும்
விறு விறுப்பாக தொடர்ந்து
கொண்டிருக்கிறது.

சி.ரட்னதாஸ்,
நவாலி.

நாள்தோறும் கண்ணுக்கு
விருந்து தரும் வலம்புரியே
எம் இனிய இதயம் நிரப்ப –
வாராந்தம்
வரும் சங்குநாதமே..................
சத்தம் சந்தடி இன்றி – உலகை
வியக்க வைத்த – நீ
தொடர்ந்தும் மாற்றத்திற்கு
ஏற்ப உன்னையும் மாற்றி
மக்கள் பக்கம் நின்று –
வளர்ந்திடு......... வாழ்க நின்
புகழ்!

ஜெ.ஜெயகணேஷ்,
ஒட்டுமடம்.

வலம்புரியின் வெளியீடான 'சங்குநாதம்' நிறைந்த தேடல்களை தன்னகத்தில் கொண்டிருப்பது எமக்கு வியப்பையே உண்டு பண்ணுகிறது. தொடர் நாவல், சிறுகதைகள், சினிமா, மகளிர், சிறுவர் பகுதி, குறுக்கெழுத்துப் போட்டி மற்றும் கவிதைப் பக்கம், மௌனத்தின் தேடல்கள் இப்படி இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களை சிறந்த திட்டமிடலுடன் வெளிக் கொணர்ந்திருப்பது. இங்கு அதிகமான வாசகர்களின் மனதில் சிறந்த ஒரு இடத்தை பிடித்திருக்கும் என்பதில் ஐயமிருக்காது.

A.M.கேதீஸ்வரன்,
நல்லூர்

வலம்புரியின் வாரமலரே சங்குநாதமே,
பல்சுவை ததும்பும் உன்பாங்கான செய்திகளோடு, படிப்பவர்க்கும்பயன் தரவல்ல அத்தனை அறிவுசால் விடயங்களையும் உன்னகத்தே கொண்டு வரும் நீ பரீட்சைக் காலங்களில்பயனுள்ள மாதிரி தொகுப்புக் களையும் தொகுத்தளித்து கற்றவர் உள்ளங்களில் கருணைக் கடலாக விளங்க வேண்டும் என உன்னை வாழ்த்தும் உன் அன்புசால் வாசகன்.

எஸ்.வி.பி,
கொழும்புத்துறை.

# அர்த்தமுள்ள இந்து மதம்



"இந்து மதத்தைப் பற்றி எழுதவந்து எங்கெங்கோ நடந்த சம்பவங்களை விரித்துக் கொண்டு போகிறாயே, ஏன்?" என்று நீ கேட்பது எனக்குப் புரிகிறது.

இந்து மதத்தைப் பற்றி ராம கிருஷ்ணரும், விவேகானந்தரும், காஞ்சி ஆசாரிய சுவாமிகளும், விரிவுரை நிகழ்த்தும் வாரியாரும் பிறரும் சொல்லாத விஷயங்கள் எதையும் நான் புதியதாக சொல்லப்போவதில்லை.

ஆனால் அவர்கள் சொன்ன படியே தான் உன் வாழ்க்கை நடக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவது தான் என் கடமை.

"ஒவ்வொரு ஒலிக்கும் எதிரொலி இருக்கிறது" என்பது அவர்கள் வாதம்.

அப்படி விவாதித்தபோது கண்ணெதிரே நடந்த சாட்சியங்களை அவர்கள் காட்டவில்லை. தத்துவார்த்த விளக்கமே கூறினார்கள்.

அந்தத் தத்துவார்த்தம் என்னைப் போன்றவர்களுக்கு.

அந்த தத்துவப் படி நடந்த சம்பவங்களை நான் எழுதுவது உன்னைப் போன்றவர்களுக்கு.

பாவம் - புண்ணியம் என்பதை எல்லாம், வெறும் தத்துவமாகவே கேட்டுக் கொண்டிருந்த மனிதனுக்கு சில நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டினால்

## மறுபடியும் பாவம் புண்ணியம்

விளங்கும் என்பதற்காகவே நான் எழுதுகிறேன்.

வழக்கு எனப் பிறந்தது இந்துக்களிடம் தான்.

சில சின்னங்களை மங்கலமாகவும், சிலவற்றை அமங்கலமாகவும் அவர்கள் காட்டினார்கள்.

மங்கல நிகழ்ச்சிகள் நடக்கும் வீட்டில், அமங்கல வார்த்தைகூடக் கேட்கக் கூடாது என்றார்கள்.

பெண்ணுக்கு மங்கலம் என்பது தாலி.

திருமணத்தில் கட்டப்படும் அந்தத் தாலியை மரணத்தின் போதுதான் கழற்ற வேண்டும்.

எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் போது கூடக் கழற்றக் கூடாது. அவ்வளவு புனிதமானது அது.

ஒரு உத்தமியின் கழுத்தில் உள்ள தாலியை யார் அபகரித்தாலும், அந்தத் தாலி அவர்கள் குடும்பத்தையே அழித்துவிடும் என்பது, இந்துக்கள் நம்பிக்கை.

எனக்கொரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நான் படம் எடுக்கத் தொடங்கியபோது, எனது பாட்டுத் திறமையை மட்டுமே வைத்து, ஒரு படமெடுக்க விரும்பினேன்.

நன்கு பாடக் கூடிய ஒரு நடி

## பாகம் 01

கரை அதற்கு ஏற்பாடு செய்தேன்.

ஒரு காலத்தில் ஓகோ என்று விளங்கிய அந்த நடிகர் நான் ஒப்பந்தம் செய்த போது வறுமையிலிருந்தார்.

அவருடைய மனைவியின் கழுத்தில் தங்க மாங்கல்யம் இல்லை.

அரக்கு மஞ்சளை மஞ்சள் நூலில் கோர்த்து அணிந்திருந்தார்.

தாலி ஓரிடத்தில் அடகு வைக்கப்பட்டிருப்பதாக நடிகர் கூறினார்.

உடனே நான், அதற்கு வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு அவரையும் கூட்டிக் கொண்டு, அடகு பிடித்தவர் வீட்டிற்கு போனேன்.

நடிகருடைய எல்லா நகைக

டிக்கு வரவு வைத்துக் கொள்கிறேன்; தாலியைத் தரமுடியாது" என்று சொல்லி விட்டார்.

பணம் கொடுத்தும் அந்தத் தாலி கிடைக்கவில்லை.

பிறகு நான் மேலும் கொஞ்சம் பணம் கொடுத்து, அவர் புதிய தாலியையே வாங்கி, தன் மனைவியின் கழுத்தில் கட்டினார்.

என் படம் நடந்து கொண்டிருந்தபோதே, அந்த நடிகர் 'இன்சால்வென்ட்' ஆனார்.

ஆனால் மூன்றாவது மாதமே படம் வெளிவந்ததும் பத்துப் படங்களுக்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுப் பணமும் வந்தது. 'இன்சால்வென்சி'யும் ரத்தாயிற்று. அவருடைய சொத்துக்கள் அவருக்கே திரும்பி வந்தன. இன்று அவர் சுகமாக நாடகங்களிலும் படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

அவருடைய மனைவி உத்தமி. புராணகாலத்துச் சீதை, வரலாற்றுக் காலத்துக் கண்ணகிக்கு நிகரான சத்தியவதி.

அந்தச் சத்தியவதியின் தாலியை வைத்திருந்தாரே அவரது குடும்பம் பட்ட பாடும், அதில் ஏற்பட்ட குழப்பமும், அவர் நோயில் இழுத்துக் கிடந்து மாண்டதும் விவரிக்க முடியாத பெருங்கதை.

அந்தத் 'தாலி' அவரது குடும்பத்தின் நிம்மதியையே அழித்துவிட்டது.

இந்துக்களின் மங்கல சூத்திரம் தன் சக்தியைக் காட்டி விட்டது.

பாவத்தின் விலை, அவரது வாழ்நாளிலேயே கிடைத்து விட்டது. நிற்க

'அன்னையும் பிதாவும் முதல் தெய்வம்' என்பது இந்துக்கள் சம்பிரதாயம்.

'தாயைப் பணிந்தவன் கோவிலுக்குப் போக வேண்டாம்' என்பார்கள்.

தாய் தந்தையை சுற்றி வந்த கணபதிக்குத்தான் சிவபெருமான் மாம்பழத்தை அளித்தார். 'உலகத்தை சுற்றி வந்த முருகனுக்கு அல்ல.

தாய் தந்தையருக்குத் தொண்டு செய்து கொண்டிருந்த ஒரு பக்தன், மாறு வேடத்தில் வந்த இறைவனைக் கவனிக்கவில்லை என்றும் இறைவன் ஆத்திரமுற்ற போது 'தன் முதற்

நான் கண்ணெதிரிலேயே பார்க்கிறேன், பலரை. ஆனால் தாயின் குரலைக் கேளாத ஒருவருடைய கதையை உனக்குச் சொல்ல வேண்டும்.

அவர் என்னுடைய சமூகத்தைச் சேர்ந்தவர். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்.

அவரது விதவைத் தாய் தனது வயிற்றைக் கட்டி வைத்து மகனுக்கு சோறூட்டுவாள்.

எங்கள் பக்கத்தில் பிள்ளைகள் இல்லாத பணக்காரர்கள் 'சுவிகாரம்' எடுக்கும் பழக்கம் பரவலாக உண்டு.

அந்தச் சுவிகாரத்தில் பிள்ளையைப் பெற்றத் தாய்க்கு விலையாக ஒரு தொகையையும் தருவார்கள்.

அந்தத் தொகைக்காகவும், தன் பிள்ளையாவது நல்ல இடத்தில் வாழட்டுமே என்றும் சுவிகாரம் விட்டு விட்டாள், அந்தத் தாயார்.

ஏழை மகன் லட்சாதிபதியானான். பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். வசதியான வாழ்க்கையில், பெற்ற 'தாயையே' மறந்து விட்டான்.

அவனால் மறக்க முடிந்தது; தாயினால் அது முடியவில்லை.

ஒரு நாள் நான் அந்த மனிதனைப் பார்க்கப் போனேன். காய்கிற வெயிலில், அந்த வீட்டின் வெளித் திண்ணையில், அந்த அம்மையார் உட்கார்ந்திருந்தாள்.

என்னைப் பார்த்ததும் "ஐயா,நீ யார்?" என்று கேட்டார்கள்.

"என்ன ஆச்சி என்ன வேண்டும்?" என்று நான் கேட்டேன்.

உடனே அந்த மூதாட்டி "தம்பி, உள்ளே இருப்பது என் பிள்ளை தான். சுவிகாரம் விட்டு விட்டேன். அவனைப் பாக்குறத்துக்காகக் காலையில் இருந்து திண்ணையிலேயே உட்கார்ந்திருக்கேன். ஒருத்தரும் விட மாட்டேங்கிறாங்க, நீயாவது எம் மகங்கிட்ட கொஞ்சம் சொல்லேன்" என்றார்கள்.

என் கண்கள் கலங்கி விட்டன.

அவர் கோபமாக "அவுங்களுக்கு எப்பவும் இதே வேலையாய்ப் போயச்சு. வராதே வராதேன்னா எதுக்காக வர்ராக?" என்று கூறிவிட்டு, கணக்குப் பிள்ளையை அழைத்து "இந்த ஆத்தா வந்திருக்காளாம், ஒரு இருநூறு ரூபாய் கொடுத்து, இனிமே இந்தப் பக்கம் வர வேண்டாம் என்று சொல்லு" என்றார்.

"அதை நீயே கூப்பிட்டுச் சொல்லேன்" என்றேன் நான்.

அவர் மறுத்துவிட்டார். மனைவிக்குப் பயந்து, கணக்குப் பிள்ளை அந்தப் பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்ததும் அந்த அம்மையார்,

"அப்பச்சி! தம்பி! ஐயா! ஒரு தரமாவது பார்த்துவிட்டு போயிடுறேன்! என்று சத்தம் போட்டார்கள்.

அந்தக் குரல் அந்தப் பாவியின் காதில் விழவில்லை.

விளைவு என்ன தெரியுமா?

தாயின் குரலைக் கேட்காத அந்தக் காதுகள், வேறு எந்தக் குரலையும் கேட்க முடியாதபடி, 'டமாரச்' செவிடாகி விட்டன.

மனைவி மயக்கத்தில் மாதாவை மறந்தவன் கதி என்ன என்பதைப் புராணங்களைப் படித்து நீ நம்பவில்லையானால், உன் பக்கத்து வீடுகளில் கேட்டுப்பார். இப்படியொரு சம்பவம் அங்கேயும் நடந்திருக்கும்.

தாய் - தகப்பனுக்குச் செய்யும் பாவம் உன் தலையைச் சுற்றி அடிக்கும்.

ஆயிரம் மனைவிமார்களை விலைக்கு வாங்கலாம்; அன்னையும் பிதாவும் மறுபடி வர முடியாது.

இந்துக்கள் சொன்ன தத்துவம் வேடிக்கைக் கதையல்ல.

'யாருக்கு நீ பாவம் செய்தாலும் அதற்குத் தண்டனை உண்டு' என்பது அழிக்க முடியாத உண்மை.

இத்தகைய நிகழ்ச்சிகளை நான் விவரித்துக் கொண்டே போகலாம்.

எவ்வளவோ பாவிகள் தங்கள் வாழ்நாளிலே தண்டிக்கப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன்.

'பாவத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவே தண்டனை!' என்பது, எவ்வளவு உண்மை!

இறைவன் தீர்ப்புகள் எப்படி இருக்கும் என்பதை இந்துக்கள் சொன்னது போல் வேறு யார் சொன்னார்கள்?

இறைவா, இந்து சமூகம் உன்னையும், உன் ராஜாங்கத்தையும் சரியாக அளந்து வைத்திருப்பதை எண்ணி எண்ணி நான் வியக்கிறேன்.

சொந்த நிகழ்ச்சிகளில், இந்த அனுபவத்தைக் காணாதவரை, ஞானமார்க்க உபதேசிகளை நான் கேலி செய்ததுண்டு.

ஒவ்வொரு படிக்கட்டிலும், ஒவ்வொரு உண்மையைக் காணக் காண, நமது ஞானிகள் 'அறிவுலகத்தின் சுடரொளிகள்' என்ற தான் நான் நம்புகிறேன்.

இசையின் சுவையைப் பாடல் அதிகப்படுத்துவது போல்

## கவிஞர் கண்ணதாசன்

ஆசையாக, ஒரு கூடையில் பணியாரமும் உழுந்து வடையும் கொண்டு வந்து துணியால் அதை மூடி வைத்திருக்கிறார்

# இந்து மதம்

இந்து மதத்தைப் பற்றி ராம கிருஷ்ணரும், விவேகானந் தரும், காஞ்சி ஆசாரிய சுவா மிகளும்,விரிவுரை நிகழ்த்தும் வாரியாரும் பிறரும் சொல்லாத விஷயங்கள் எதையும் நான் புதியதாக சொல்லப்போவ தில்லை.

ஆனால் அவர்கள் சொன்ன படியே தான் உன் வாழ்க்கை நடக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவது தான் என் கடமை.

"ஒவ்வொரு ஒலிக்கும் எதிரொலி இருக்கிறது" என்பது அவர்கள் வாதம்.

அப்படி விவாதித்தபோது கண்ணெதிரே நடந்த சாட்சியங் களை அவர்கள் காட்டவில்லை. தத்துவார்த்த விளக்கமே கூறி னார்கள்.

அந்தத் தத்துவார்த்தம் என். னைப் போன்றவர்களுக்கு.

அந்த தத்துவப் படி நடந்த சம்பவங்களை நான் எழுதுவது உன்னைப் போன்றவர்களுக்கு.

பாவம் - புண்ணியம் என் பதை எல்லாம், வெறும் தத்து வமாகவே கேட்டுக் கொண்டி ருந்த மனிதனுக்கு சில நிகழ்ச் சிகளைச் சுட்டிக் காட்டினால்

## மறுபடியும் பாவம் புண்ணியம்

விளங்கும் என்பதற்காகவே நான் எழுதுகிறேன்.

வாழ்க்கை ஒழுக்கத்தை, சமு தாய ஒழுக்கத்தை அதிகமாக வற்புறுத்துவது இந்து மதம் தான்.

அதன் பண்பாடுகள் உன் னதமானவை; அதன் சடங்கு கள் அர்த்தமுள்ளவை.

மங்கல வழக்கு, அமங்கல வுக்கு வருகிறது.

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னால் நான் படம் எடுக்கத் தொடங்கியபோது, எனது பாட் டுத் திறமையை மட்டுமே வைத்து, ஒரு படமெடுக்க விரும் பினேன்.

நன்கு பாடக் கூடிய ஒரு நடி

## பாகம் 01

கரை அதற்கு ஏற்பாடு செய் தேன்.

ஒரு காலத்தில் ஓகோ என்று விளங்கிய அந்த நடிகர் நான் ஒப்பந்தம் செய்த போது வறுமை யிலிருந்தார்.

அவருடைய மனைவியின் கழுத்தில் தங்க மாங்கல்யம் இல்லை.

அரக்கு மஞ்சளை மஞ்சள் நூலில் கோர்த்து அணிந்திருந் தார்.

தாலி ஓரிடத்தில் அடகு வைக்கப்பட்டிருப்பதாக நடிகர் கூறினார்.

உடனே நான், அதற்கு வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு அவரையும் கூட்டிக் கொண்டு, அடகு பிடித்தவர் வீட் டிற்கு போனேன்.

நடிகருடைய எல்லா நகைக ளுமே அவரிடம் தான் அடகு வைக்கப்பட்டிருந்தன.

தாலிக்கு வேண்டிய பணத்தை மட்டும் கொடுத்துத் தாலியைத் திருப்பிக் கேட்டேன்.

அவர் பணத்தை வேண்டிக் கொண்டு "ஏராளமான வட்டி பாக்கியிருக்கிறதே; இதை வட் லாற்றுக் காலத்துக் கண்ண கிக்கு நிகரான சத்தியவதி.

அந்தச் சத்தியவதியின் தாலியை வைத்திருந்தாரே அவரது குடும்பம் பட்ட பாடும், அதில் ஏற்பட்ட குழப்பமும், அவர் நோயில் இழுத்துக் கிடந்து மாண்டதும் விவரிக்க முடியாத பெருங்கதை.

அந்தத் 'தாலி' அவரது குடும்பத்தின் நிம்மதியையே அழித்துவிட்டது.

இந்துக்களின் மங்கல சூத்திரம் தன் சக்தியைக் காட்டி விட்டது.

பாவத்தின் விலை, அவரது வாழ்நாளிலேயே கிடைத்து விட்டது. நிற்க

'அன்னையும் பிதாவும் முதல் தெய்வம்' என்பது இந்துக்கள் சம்பிரதாயம்.

'தாயைப் பணிந்தவன் கோவி லுக்குப் போக வேண்டாம்' என்பார்கள்.

தாய் தந்தையை சுற்றி வந்த கணபதிக்குத்தான் சிவபெருமான் மாம்பழத்தை அளித்தார். 'உல கத்தை சுற்றி வந்த முருகனுக்கு அல்ல.

தாய் தந்தையருக்குத் தொண்டு செய்து கொண்டிருந்த ஒரு பக்தன், மாறு வேடத்தில் வந்த இறைவனைக் கவனிக்க வில்லை என்றும் இறைவன் ஆத்திரமுற்ற போது 'தன் முதற் கடமை இது தான்' என்ற அவன் உறுதியாகக் கூறினான் என்றும், இறைவனே மனம் மயங்கி, அவன் பாதத்தில் விழுந்தான். என்றும் நாம் படிக்கிறோம்.

அந்தத் தாய் தந்தையரை மன மார நேசிக்கும் எவனுக்கும் எதிர்காலம் உண்டு.

னைப் பார்க்கப் போனேன். காய் கிற வெயிலில், அந்த வீட்டின் வெளித் திண்ணையில், அந்த அம்மையார் உட்கார்ந்திருந் தாள்.

என்னைப் பார்த்ததும் "ஐயா,நீ யார்?" என்று கேட்டார்கள்.

"என்ன ஆச்சி என்ன வேண் டும்?" என்று நான் கேட்டேன்.

உடனே அந்த மூதாட்டி "தம்பி, உள்ளே இருப்பது என் பிள்ளை தான். சுவிகாரம் விட்டு விட்டேன். அவனைப் பாக்குறத் துக்காகக் காலையில் இருந்து திண்ணையிலேயே உட்கார்ந் திருக்கேன். ஒருத்தரும் விட மாட்டேங்கிறாங்க, நீயாவது எம் மகங்கிட்ட கொஞ்சம் சொல லேன்" என்றார்கள்.

என் கண்கள் கலங்கி விட்டன.

## கவிஞர் கண்ணதாசன்

ஆசையாக, ஒரு கூடையில் பணியாரமும் உழுந்து வடையும் கொண்டு வந்து துணியால் அதை மூடி வைத்திருக்கிறார் கள்,தன்மகனுக்குத் தன் கையா லேயே ஊட்டி விடுவதற்காக.

நான் வேகமாக உள்ளே போய், அந்தப் பையனைப் பார் த்து "உன்னைப் பெற்ற தாயார் வந்திருக்கிறார்கள். கொஞ்சம் உள்ளே கூப்பிட்டு உட்கார் வையப்பா" என்றேன்.

அங்கேயும் நடந்திருக்கும்.

தாய் - தகப்பனுக்குச் செய் யும் பாவம் உன் தலையைச் சுற்றி அடிக்கும்.

ஆயிரம் மனைவிமார்களை விலைக்கு வாங்கலாம்; அன் னையும் பிதாவும் மறுபடி வர முடியாது.

இந்துக்கள் சொன்ன தத் துவம் வேடிக்கைக் கதையல்ல. 'யாருக்கு நீ பாவம் செய் தாலும் அதற்குத் தண்டனை உண்டு' என்பது அழிக்க முடி யாத உண்மை.

இத்தகைய நிகழ்ச்சிகளை நான் விவரித்துக் கொண்டே போகலாம்.

எவ்வளவோ பாவிகள் தங் கள் வாழ்நாளிலே தண்டிக் கப்பட்டதை நான் பார்த்திருக் கிறேன்.

'பாவத்தின் அளவு எவ்வ ளவோ அவ்வளவே தண்டனை' என்பது, எவ்வளவு உண்மை!

இறைவன் தீர்ப்புக்கள் எப்படி இருக்கும் என்பதை இந்துக்கள் சொன்னது போல் வேறு யார் சொன்னார்கள்?

இறைவா, இந்து சமூகம் உன்னையும், உன் ராஜாங்கத் தையும் சரியாக அளந்து வைத் திருப்பதை எண்ணி எண்ணி நான் வியக்கிறேன்.

சொந்த நிகழ்ச்சிகளில், இந்த அனுபவத்தைக் காணாதவரை, ஞானமார்க்க உபதேசிகளை நான் கேலி செய்ததுண்டு.

ஒவ்வொரு படிக்கட்டிலும், ஒவ்வொரு உண்மையைக் காணக் காண, நமது ஞானிகள் 'அறிவுலகத்தின் சுடரொளிகள்' என்ற தான் நான் நம்புகிறேன்.

இசையின் சுவையைப் பாடல் அதிகப்படுத்துவது போல் தத்துவத்தின் உண்மைச் சம்ப வங்களே உறுதி செய்கின்றன.

'இந்து மகாசமுத்திரம்' என்ற பெயர், இந்து மதத்துக்கே பொருந்தும்.

'பாவமும் குற்றமும் செய்து விட்டுத் தெய்வத்தை வணங்கி னால் பலன் உண்டா?'

(தொடரும்)

---

# அஸ்துமா

**(3)மாத்திரைகள்**

★ **சுவாசக்குடோரி ரச**
அளவு:- 2-3 மாத்திரை
அனுபானம்:- வெந்நீர் அல்லதுதாளிசபத்திரி கசாயம்

★ **கஸ்தூரி மாத்திரை**
அளவு:- 2-3 மாத்திரை
அனுபானம்:- வெற்றிலை, துளசி கற்பூரவள்ளி சாற்றில்

★**பூரணச் சந்திரோதய மாத்திரை**
அளவு: 1-3 மாத்திரை
அனுபானம்:- வெற்றிலை, துளசி, கற்பூரவள்ளி சாற்றில் அல்லது வெந்நீர்

★ **சின்னச் சிவப்பு மாத்திரை**
அளவு:- 2-3 மாத்திரை
அனுபானம்:- கற்பூரவள்ளி, துளசி அல்லது தாளிசபத்திரி கசாயம்

★ **கிரந்தி கோரோசனை மாத் திரை**

★ **முக்கூட்டு மாத்திரை**
அளவு:- 1-2 மாத்திரை
மேற்கூறிய இரு மாத்திரைக ளும் குழந்தைகளுக்கு தாய்ப் பாலில் அல்லது கற்பூரவள்ளி, துளசிச் சாற்றுடன் கற்கண்டும் சேர்த்து அவர்களின் உடல் நிலையைப் பொறுத்து அளவு மாற்றிக் கொடுக்கவும்.

**(4) ஆரணங்கள்**

★ **தாளிசாதிச் சூரணம்**
அளவு:- 0.5g-1.0g (மூன்று விரல் பிரமாணம்)
அனுபானம்:- தேன் அல்லது வெந்நீர்

★ **சீநோபலாதி சூரணம்**
அளவு:- 0.5g-1.0g
அனுபானம்:- தேன் அல்லது வெந்நீர்

**(5) லேகியம்:-**

★ **வாசகலேகியம்**
அளவு:- 2தேக்கரண்டி இரு வேளை சாப்பாட்டிற்கு பின்
அனுபானம்:- வெந்நீர்

★ **கண்டங்கத்தரி லேகியம்**
அளவு:- 2தேக்கரண்டி இரு வேளை சாப்பாட்டிற்கு பின்
அனுபானம்:- வெந்நீர்

**(6) கல்கம்**

★ **புத்தராஜ கல்கம்**
அளவு:- 200mg-250mg இரு வேளை சாப்பாட்டிற்கு பின்
அனுபானம்:- இஞ்சிச்சாறு+ தேன்+புளித்தோடை அல்லது தேசிப்புளிச்சாறு

**(7) பாணி Syrup**
ஆடாதோடைப்பாணி
அளவு:- 1/2 மேசைக்கரண்டி-1 மேசைக்கரண்டி மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன் (குழந்தைக ளுக்கு அளவைக் குறைக்கலாம்)

## சித்தர் மருத்துவம்

**(8) ஆசவ அரிஷ்டம்**

★ **கனகாசவம்:-**
அளவு:- 5ml-15ml மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்

★ **திராட்ஷா அரிஷ்டம்**
அளவு:- 5ml-15ml மூன்று வேளை சாப்பாட்டிற்கு முன்

**(9) பஸ்பம்**

★ **தாளக பஸ்பம்**
அளவு:- 2-5கிரெய்ன் (அரிசியி டைப் பெறுமானம்)
அனுபானம்:- தேன்

★ **பவள பஸ்பம்**
அளவு:- 2-5கிரெய்ன் (அரிசியி டைப் பெறுமானம்)
அனுபானம்:- தேன்

**(10) எண்ணெய் O.L (தலைக்கு)**

★ பாட்டா தைலம்

★ பீனிச தைலம்

நோயாளியின் தன்மைக்கு ஏற்ப இவ் எண்ணெய்களைப் பயன்படுத்தலாம்.

(தொடரும்)

**Dr.(செல்வி)த.சபாரத்தினம்**
**சித்த மருத்துவப் பகுதி**
**யாழ் மாநகரசபை**

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

05

நாளாக ஆக மோகன் தாசுக்கு மேத்தாவின் போக்கிரித்தனம் விளங்கத் துவங்கியது. ஒரு நாள் அவன் அழைப்பை ஏற்றுக் கொண்டு விலைமாது ஒருத்தி வீட்டுக்குக் கூடப் போனான் அவன். ஆனால் அச்சமும் வெட்கமும் அவனை அந்த மாயக் காரியின் வலையில் விழாமல் காப்பாற்றி விட்டன. 'ஒன்று மறியாத உதவாக்கரை' என்று அவமானப்படுத்தி அவனைத் துரத்தி விட்டாள். அந்தப் பொது மகள். தவறு இழைக்காமல், தலை தெறிக்க வீட்டுக்கு ஓடி வந்துவிட்டான் மோகன்தாஸ்.

"நல்லவேளை 'உனக்குத் துரோகம் இழைக்க மாட்டேன்' என்று நான் கஸ்தூரிக்குக் கொடுத்த வாக்குத் தப்பியது. சத்தியம் பிழைத்தது" என்று ஆறுதல் அடைந்தான்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தீவிரமாகச் சிந்திக்கத் துவங்கினான் மோகன்தாஸ். தன் நடத்தையைப் பற்றித்தானே வெட்கப்பட்டுக் கொண்டான். தன் தாயின் முகத்தைப் பார்க்கவே கூசினான். தன்னை 'நல்ல பிள்ளை' என நினைத்துக் கொண்டிருப்பவளை வஞ்சிக்கிறோமே என்ற வேதனை அவன் நெஞ்சில் முள்ளாய்க் குத்தியது. திவான் பதவியிலிருந்து விலகி, உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் தன் தந்தையைப் பார்க்கும் போதெல்லாம், தான் ஒருநாள் பணம் திருடியது அவருக்குத் தெரிந்து விட்டதோ என்று பயந்து கொண்டே நடந்தான். தலை நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தவன், தலைகுனிந்து கூனிக் குறுகி, பயந்து, பதுங்கி, ஒளிந்து, நெளிந்து வீட்டில் நடமாட வேண்டியிருந்தது!

'எத்தனை நாள்தான் இந்த அவமானத்தைச் சுமந்து திரிவது? தந்தையிடம் உண்மைகளைச் சொல்லி மன்னிப்புக் கேட்டால் தான் மனச்சுமை தீரும்' என்று தீர்மானித்தான் மோகன்தாஸ்.

இரண்டு மூன்று நாட்களாகவே மோகன்தாஸ் குட்டி போட்ட பூனை மாதிரி வீட்டில் வளைய வந்து கொண்டிருப்பதைக் கஸ்தூரி கண்டாள். "ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு அவன் சரியாகப் பதில் கூறவில்லை. ஒரு நாள் இரவு ஒரு காகிதத்தை எடுத்து வைத்துக் கொண்டு அதில் எதையோ எழுதினான். படித்துப் பார்த்தான். கிழித்துப் போட்டான். பிறகு இன்னொரு காகிதத்தை எடுத்து இரண்டு வரிகள்

ஒன்றும் புரியவில்லை பெரியவருக்கு. ஒவ்வொன்றாகப் படித்துப்பார்த்தார். புலால் புசித்தது, புட்லிபாயிடம் பொய்யுரைத்தது; விலைமாதின் வீட்டுக்குச் சென்றது; காசைக் களவாடியது; கஸ்தூரியைக் கடிந்து கொண்டது - பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று. கடைசியில் இனி தவறிழைக்க மாட்டேன். இந்தப் பாவிக்கு தண்டனை கொடுங்கள், அதுதான் நீங்கள் எனக்கு அளிக்கும் மன்னிப்பு. மோகன்தாஸ் என்று முடிந்திருந்தது அந்தக் கடிதம்.

கடிதத்தைப் படித்த கரம் சந்த் வாயைத் திறக்கவில்லை. அவ



ருக்குத் தொண்டை அடைத்தது. பேச்சே எழவில்லை. தன் மகன் இப்படியெல்லாம் செய்து விட்டானே என்று அவர் உள்ளம் குமுறவில்லை. குற்றம் செய்து

விட்டோம் என்று உணர்ந்து, உண்மையை ஒப்புக் கொண்டு, தண்டனை வேண்டி நிற்கும் ஓர் உத்தம மகனைப் பெற்றோமே என்று பரசவமடைந்தார். அவர் உடலில் புல்லரித்தது. 'பொல பொல' வென்று கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன. காகிதத்தில் விழுந்தன. எழுத்துக்களை அழித்து மறைத்தன. அந்தப் புண்ணியவானின் கண்ணீர் கங்கையில் மோகன்தாஸ் செய்த பாவங்கள் கரைந்து விட்டன. மகனை மன்னித்து விட்டதற்கு

மிதம் பிறந்தது.

மோகன்தாசின் அன்றாட அலுவல்களில் பெரிய மாறுதல் காணப்பட்டது. அவன் இப்போதெல்லாம் மேத்தாவுடன் சேருவதில்லை. ஊர் சுற்றுவதில்லை. மாறாக பள்ளிக்குப் போகாத நேரத்தில் தந்தைக்குப் பெரும் ஆதரவாக இருந்து வந்தான். தந்தைக்கு அவ்வப்போது 'மருந்து அரைத்துக் கொடுப்பான். ஆகாரம் கொண்டு வந்து தருவான். இரவில் அவருக்குத் தூக்கம் வரும்வரையில் அவர் கால்களைப் பிடிப்பான். அந்தக் காட்சிகளைக் காணும் போதெல்லாம் கஸ்தூரி பெருமையால் பூரித்துப் போவாள்.

கஸ்தூரியிடம் ஏற்பட்ட மாறுதல்களையும் மோகன்தாஸ் கவனித்துக் கொண்டு வந்தான். அவள் பொன்னிற மேனியில் திக

ழ்ந்த புதுப்பொலிவும், வானத்தில் குடிகொண்ட வசீகரமும் அவன் வேட்கையை அதிகப்படுத்தின. அவள் எழிலை அள்ளிப் பருக வேண்டும் என்ற துடிப்பு மேலிட அவளருகில் நெருங்குவான். கஸ்தூரி, கெஞ்சும் விழியுடன் கொஞ்சும் மொழியுடன் சற்றே விலகி அமர்வாள். தாயின் கட்டளையை அவனுக்கு நினைவு படுத்துவாள். அவனுக்கு ஆத்திரம் வரும்; சிரமப்பட்டு அடக்கிக் கொள்வான்.

இரவில் தந்தைக்குக் கால்களைப் பிடித்துக் கொண்டு

நேரத்தை வீணாக்காதே' இது பூதத்தின் புரட்சிக் குரல். வெறி தலைக்கேறி விட்டது. அருகில் இருந்த தகப்பனாரிடம் தன் வேலையை ஒப்படைத்தான் எழுந்தான். பறந்து விட்டான் படுக்கை அறையை நோக்கி. பூதம் வென்றது. வெற்றிப் புன்னகைப் புரிந்தது!

ஐந்து நிமிடங்கள் கழிந்தன. யாரோ வந்து அறைக் கதவை இடிக்கும் ஒலி கேட்டது. கட்டிலிருந்து குதித்த மோகன்தாஸ் உடைகளை எடுத்து அணிந்து கொண்டான். கதவைத் திறந்தான். அங்கு நின்று கொண்டிருந்த பணியாள், முகத்தில் களையிழந்து காணப்பட்டான். "மோகன்! அப்பாவுக்கு........"

"அப்பாவுக்கு என்ன, சொல்லு?"

"ஓடி வாயேன்......அப்பா பேசமாட்டேன் என்கிறார். ஏதோ ஒரு மாதிரி விழிக்கிறார்."

தாவி ஓடினான் மோகன்தாஸ். ஆனால் எமன் முந்திக் கொண்டு விட்டான்! தந்தை கண்ணை மூடிவிட்டார். இரவு பகலாக அவர் அருகிலேயே இருந்தும் சாகும் தறுவாயில் அவருடன் இருக்கக் கொடுத்து வைக்கவில்லை மகனுக்கு.

'ஐயோ, நான் அருகில் இருந்திருந்தால் என்னிடம் இரண்டு வார்த்தைகளாவது பேசியிருப்பாரே. என் மடியில் படுத்தபடி உயிர்நீத்திருப்பாரே. மகாபாவி நான்." அவன் மனச்சாட்சி அவனை உறுத்தியது. அந்தப் பூதத்தைச் சபித்தான்! தன் தந்தையிடமிருந்து ஐந்து நிமிடம் தன்னைப் பிரித்து வைத்துக் கொடுமை இழைத்ததற்கு அதைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் அவனுள் எழுந்தது. 'சிற்றின்பம் மனிதனைச் சிறுமைப் படுத்துகிறது. மனிதன் உயர வேண்டுமானால் புலன்களை அடக்க வேண்டும். புலன்களை அடக்க அடக்கத்தான் ஆன்மா

பரந்து விரியும்.' மலரப் போகும் மகாத்மாவுக்கு இந் நிகழ்ச்சி கற்றுத் தந்த பாடம் அது.

தந்தையின் ஈமச் சடங்குகள் எல்லாம் ஒருவாறு நடந்து முடிந்தன. அஸ்தியையும் புனித நீரில் கரைத்தாகி விட்டது. வீட்டில் அத்தனை பேர் இருந்தும், ஒருவர் இல்லாத காரணத்தால் வீடு வெறிச்சோடிக் கிடந்தது. புட்லிபாய் அம்மையார்

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### சிரஞ்சீவிக் காதல்

பிரபல பிரெஞ்சு எழுத்தாளரான மாப்பசான் ஒரு பெண்ணைக் காதலித்தார். அதே பெண்ணை பாரிஸ் நகர டாக்டர் ஒருவரும் காதலித்தார். இருவரும் ஒரு நாள் நாடகக் கொட்டகையில் சந்திக்க நேர்ந்தது.

'இந்தப் பெண் உங்கள் உரையைக் கேட்டு நோயுறும் போது நான் குணப்படுத்துவேன்' என்றார் டாக்டர், எழுத்தாளரை மட்டம் தட்டும் எண்ணத்தில்.

'அவள் உங்கள் மருந்தை சாப்பிட்டு சாகும் போது என் எழுத்தினால் அவளை சிரஞ்சீவி ஆக்குவேன்' என்றார் மாப்பசான்.

### முட்டாள்களுக்கு ஒரு குட்டு

விவேகானந்தர் அதிகமாகப் பிரபலமடையாமல் இருந்த போது தென்னிந்தியாவில் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அதே பெட்டியில் இருந்த வெள்ளைக்காரப் போர் வீரர்கள் சந்நியாசிகளைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கொண்டிருந்தனர். விவேகானந்தர் மறுத்து எதுவும் சொல்லவில்லை.

சேலம் ஸ்டேஷனின் அவர் அதிகாரியுடன் ஆங்கிலத்தில் பேசுவதைக் கண்டு போர் வீரர்களுக்கு வியப்பாக இருந்தது.

ரயில் புறப்பட்டதும், 'உங்களுக்குத்தான் ஆங்கிலம் தெரிகிறதே. தாங்கள் கூறிய கருத்துக்கள் குறித்து ஏன் எதுவும் மறுத்துப் பேசவில்லை?' என்று கேட்டனர்.

'முட்டாள்களை சந்திப்பது இது முதல் தடவையல்ல' என்று அவர் கூறியதைக் கேட்டு வாயடைத்துப் போயினர்.

### நியாயமான கேள்வி

ஆபிரகாம் லிங்கன் ஒரு நாள்



# கஸ்தூரி திலகம்

தையைப் பற்றித்தானே வெட்கப் பட்டுக் கொண்டான். தன் தாயின் முகத்தைப் பார்க்கவே கூசினான். தன்னை 'நல்ல பிள்ளை' என நினைத்துக் கொண்டிருப்பவளை வஞ்சிக் கிறோமே என்ற வேதனை அவன் நெஞ்சில் முள்ளாய்க் குத்தி யது. திவான் பதவியிலிருந்து விலகி, உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் தன் தந்தையைப் பார்க்கும் போதெல்லாம்,. தான் ஒருநாள் பணம் திருடியது அவருக்குத் தெரிந்து விட்டதோ என்று பயந்து கொண்டே நடந்தான். தலை நிமிர்ந்து நடந்து கொண்டி ருந்தவன், தலைகுனிந்து கூனிக் குறுகி, பயந்து, பதுங்கி, ஒளிந்து, நெளிந்து வீட்டில் நடமாட வேண்டியிருந்தது!

'எத்தனை நாள்தான் இந்த அவமானத்தைச் சுமந்து திரி வது? தந்தையிடம் உண்மைக ளைச் சொல்லி மன்னிப்புக் கேட் டால் தான் மனச்சுமை தீரும்' என்று தீர்மானித்தான் மோகன் தாஸ்.

இரண்டு மூன்று நாட்களாகவே மோகன்தாஸ் குட்டி போட்ட பூனை மாதிரி வீட்டில் வளைய வந்து கொண்டிருப்பதைக் கஸ்தூரி கண்டாள். "ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு அவன் சரியாகப் பதில் கூறவில்லை. ஒரு நாள் இரவு ஒரு காகிதத்தை எடுத்து வைத்துக் கொண்டு அதில் எதையோ எழுதினான். படித்துப் பார்த்தான். கிழித்துப் போட் டான். பிறகு இன்னொரு காகி தத்தை எடுத்து இரண்டு வரிகள் எழுதினான். அதை அழித்தான். மறுபடியும் எழுதினான். படித்துப் பார்த்தான். சிந்தித்தான். கிழித் தான். கஸ்தூரி இதையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவன் செயல் அவளுக்கு ஒரு வேடிக்கையாகவே இருந்தது. அவன் மனத்தில் வீசிய புயல் அவளுக்கு எங்கே தெரியப் போகிறது?

ஒருநாள் காலை, தந்தை கரம்சந்த்காந்தி படுக்கையில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண் டிருந்தார். அவர் அருகில் ஒரு வரும் இல்லை. மோகன்தாஸ் கையில் ஒரு காகிதத்துடன் அவ ரிடம் சென்றான். அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கையிலிருந்த காகிதம் சல சலத்தது.

தந்தை தனயனைப் பார்த் தார். தனயன் தரையைப் பார்த் தான். 'என்ன மோகன்?' என்று கேட்டார். அந்த அன்புக் குரல், அம்பு போல் அவன் இதயத்தில் பாய்ந்தது. 'உங்கள் அன்புக்கு அருகதையற்ற பாவி நான்!' இப் படி அவன் உதடுகள் பேச வில்லை. உள்ளம்தான் அழு தது. அத்துடன் சேர்ந்து கண்க ளும் நீரைச் சொரிந்தன. கையில் இருந்த காகிதத்தைத் தந்தையிடம் கொடுத்தான். அவன் இதுவரை செய்த பாவங் கள் அடங்கிய பட்டியல்தான் அது. அவரிடம் நேரில் சொல் லும் மன வலிமை அவனிடம் இல்லை. அதனால் எழுதியே கொடுத்து விட்டான்.

ருக்குத் தொண்டை அடைத்தது. பேச்சே எழவில்லை. தன் மகன் இப்படி யெல்லாம் செய்து விட் டானே என்று அவர் உள்ளம் குமுறவில்லை. குற்றம் செய்து

கஸ்தூரியிடம் ஏற்பட்ட மாறு தல்களையும் மோகன்தாஸ் கவ னித்துக் கொண்டு வந்தான். அவள் பொன்னிற மேனியில் திக

இருந்திருந்தால் என்னிடம் இரண்டு வார்த்தைகளாவது பேசியிருப்பாரே. என் மடியில் படுத்தபடி உயிர்நீத்திருப்பாரே. மகாபாவி நான்." அவன் மனச் சாட்சி அவனை உறுத்தியது. அந்தப் பூதத்தைச் சபித்தான்! தன் தந்தையிடமிருந்து ஐந்து நிமிடம் தன்னைப் பிரித்து வைத்துக் கொடுமை இழைத் ததற்கு அதைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் அவனுள் எழுந்தது. 'சிற்றின் பம் மனிதனைச் சிறுமைப் படுத்துகிறது. மனிதன் உயர வேண்டுமானால் புலன்களை அடக்க வேண்டும். புலன்களை அடக்க அடக்கத்தான் ஆன்மா

விட்டோம் என்று உணர்ந்து, உண்மையை ஒப்புக் கொண்டு, தண்டனை வேண்டி நிற்கும் ஓர் உத்தம மகனைப் பெற்றோமே என்று பரசவமடைந்தார். அவர் உடலில் புல்லரித்தது. 'பொல பொல' வென்று கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்தன. காகிதத் தில் விழுந்தன. எழுத்துக்களை அழித்து மறைத்தன. அந்தப் புண்ணியவானின் கண்ணீர் கங் கையில் மோகன்தாஸ் செய்த பாவங்கள் கரைந்து விட்டன. மகனை மன்னித்து விட்டதற்கு அடையாளமாக அந்தக் கடிதத் தைச் சுக்கு நூறாக கிழித்துப் போட்டார் அவர்.

தந்தை தனக்காக கண்ணீர் உகுத்ததைக் கண்டதும் மோகன்தாசும் தன்னை அறி யாமலேயே குலுங்கிக் குலுங்கி அழுதான். தந்தையும் மகனும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கண்ணீராலேயே கதைகள் பல பேசி விட்ட அந்த உணர்ச்சி மிக்க உச்சக் கட்டத்தை மறை விலிருந்து பார்த்துக் கொண் டிருந்த கஸ்தூரியின் கன்னங்க ளும் நனைந்திருந்தன.

அவளுக்கு ஒரு நொடியில் எல்லாம் புரிந்து விட்டது. "ஆகா, நான் கொடுத்து வைத்தவள். இப் படிப் பட்ட உத்தமனைக் கணவ னாக அடைந்து நான் செய்த பெரும் பாக்கியம்" என்று நினைத்தவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். முதல் நாள் இரவு மோகன்தாஸ் தன் னிடம் அரிச்சந்திரன் நாடகத் தைப் பற்றிச் சொன்னது ஞாபகத் துக்கு வந்தது அவளுக்கு. சிறு வயதில் பார்த்த அந்த நாடகம் அவர் மனதை விட்டு அகல வில்லையாம். அரிச்சந்திரன் போல் தானும் சத்திய வாழ்க் கையே நடத்த விரும்புகிறாராம்! 'சந்தேகமேயில்லை என் மோகன்தாஸ் நினைத்ததைச் சாதிப்பார். சொன்னதைச் செய் வார்.. உயிர் போனாலும் உண் மையைத்தான் பேசுவார்' நினை க்க நினைக்க இனித்தது கஸ் தூரிக்கு. எண்ண எண்ணப் பெரு

ழ்ந்த புதுப்பொலிவும், வானத் தில் குடிகொண்ட வசீகரமும் அவன் வேட்கையை அதிகப்படுத் தின. அவள் எழிலை அள்ளிப் பருக வேண்டும் என்ற துடிப்பு மேலிட அவளருகில் நெருங்கு வான். கஸ்தூரி, கெஞ்சும் விழி யுடன் கொஞ்சும் மொழியுடன் சற்றே விலகி அமர்வாள். தாயின் கட்டளையை அவனுக்கு நினைவு படுத்துவாள்.அவனுக்கு ஆத்திரம் வரும்; சிரமப்பட்டு அடக்கிக் கொள் வான்.

"மேலும்படி" என்றான் யூசுப் கான். பயந்து பயந்து படிக்க ஆரம்பித்தான். "இந்த வகை இயக்கங்களில் பெரும்பாலான வற்றுக்கு தலைவன் அப்துல் ரகீம். இவனை தீவிரவாத இயக் கங்களுக்கு மன்னன் என்றே கூறலாம். இவன்தான் உலகின் பல பாகங்களிலும் இயங்கும் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆயுதங்களை வழங்கி வருவது டன், ஒரு நாட்டின் அரசாங்க ரகசியங்களை இன்னொரு நாட் டிற்கு விற்றும் இவன் பல வங் கிக் கொள்ளைகள், ஆயுத சரக்கு கப்பல்களை கடத்துதல், விமானங்களை கடத்துதல், போதை மருந்துக்களை நாடுக ளில் சப்ளை செய்தல் போன்ற அழிவு வேலைகளை செய்து வரு கிறான். இவன் தன் பிரத்தியேக இடமாக பாகிஸ்தானை கொண் டுள்ளான். இந்த "......." "உம் மேலும்படி என்று கர்ச்சித்தான்" அப்துல் ரகீம்.

"இந்த ஆணிவேர் அப்துல் ரகிமை......."

"அப்துல் ரகிமை ...உம் படி" என்று இடியாய் முழங்கினான். கரீம்கான் அ...ழி....ப் ...,ப...த...ன்.... மூ.....ல...ம் என்று மொழிபெயர்ப்பாளன் வசனத்தை முடிக்கவில்லை. தள பதி கரீம்கான், யூசுப்கான், அப் துல் ரகீம் ஆகியோரின் துப்பாக் கிகள் தோட்டாக்களை துப்பின.


உடல் முழுவதும் தோட்டா பொருட்கள் பெற்று சரிந்தான் மொழிபெயர்ப்பாளன். "டேய்



பெயர்ப்பாளனின் பிணத்தை தூக் கிச் சென்றார் கள். மனித இரத் தத்தை பார்த்தும் டைகரின் நாவில் நீரூறியது.

"அந்த ஷியாம் சுந்தர் என்ற எழுத்தாளனுக்கு தைரியம் அதிகம்தான் போலுள் ளது. உண்மைகளை புட்டு புட்டு எழுதியுள்ளான். அவனுக்கு இவ் வாறான உண்மைகளை யார் தான் கொடுத்திருப்பார்கள் என்று தெரியவில்லை. அவனுக்கு மட்டு மல்ல அவனுடைய நாட்டுக்கே நாம் யார் என்று காட்ட வேண்டும்" என்று ஆக்ரோச மாய் முழங்கினான் தளபதி கரீம் கான்.

"தளபதி நீ சொல்வது சரி தான். தூங்கும் வேங்கையை தட்டி எழுப்பி விட்டார்கள். அதன் பாய்ச்சலின் வேகம் எவ் வாறு இருக்கும் என்று அவர்



மாயவன்

களுக்கு காட்ட வேண்டும். அமைச்சரே தங்கள் கருத்து என்ன?" என்றான் அப்துல் ரகீம்.

"மன்னா தளபதி சொல்வது சரிதான். அவர்களுக்கு தக்க பாடம் கற்பிக்க வேண்டும். அது வும் அவர்கள் நினைத்துப் பார் க்க முடியாத இனிமேல் இவ்வா றான செயல்களில் ஈடுபடாவண் ணம் அவர்களுக்கு படிப்பிக்க வேண்டும்" என்று அமைதியாக அதே நேரம் குமுறும் எரிமலை யாக அமைச்சர் கூறினார்.

தளபதி கரீம்கான் எழுந்து மன்னா அதற்கு முதல் நாம் இந்த தீவிரவாதம் என்ற நூலை

அதற்கு தக்க நடவடிக்கையை கூறுங்கள்" என்றான்.

"நல்ல யோசனை தளபதி. எமது நாட்டில் புத்தகத்தை விற் பனை செய்பவர்களை அவர்க ளின் கடையுடன் சேர்த்து கொளுத்துங்கள். புத்தகங்களை யார் வீட்டிலோ அல்லது வாசிப் பவர்களையோ கண்டால் அதே இடத்தில் தலையை சீவிவிடுங் கள். இது என் கட்டளை. இதனை உடனே எல்லா இடமும் அறி வித்து விடுங்கள்" என்றான் அப்துல்ரகீம்.

கரீம்கான் நீ இலங்கைக்கு பாடம் கற்பிக்கும் நடவடிக்கை களை எடு. அமைச்சரே தாங்கள் என் கட்டளையை நாடெங்கும் அறிவித்து விடுங்கள். என்றான் அப்துல் ரகீம்.

"இத்துடன் இன்றைய கூட்டம் முடிவடைகிறது" என்று கூறி

டைகரை ஒருகையில் பிடித்துக் கொண்டு ஆறு பொடிகார்ட்ஸ் சூழ்ந்து வர பூட்ஸ் சப்தம் சீராக ஒலிக்க ஆலோசனை மண்டபத்தை விட்டு வெளியேறி னான்.

தளபதி கரீம்கான் தன் படை யில் இருந்து சிறந்த வீரர்களை தெரிந்தெடுத்து அவர்களை குழுக்களாக பிரித்து அவர்களுக் குரிய பணிகளை கூறிக்கொண்டி ருந்தான்.

"அமைச்சரே எமது முதல் நடவடிக்கையாக இலங்கையில் R.S.P மைதானத்தில் நடக்க விருக்கும் இலங்கை, இங்கி லந்து அணிகளுக்கு இடையி லான கிரிக்கெட் ரெஸ்ட் போட் டியை நடக்கவிடமால் தடுக்க லாம் என்று திட்டம்" தீட்டியுள் ளேன் தங்கள் கருத்து என்ன என்று வினாவினான்.

"தளபதி நல்ல யோசனை

"ஏழமையாக டெஸ்ற் போட்டி களில் இலங்கை அணித் தலை வர் விஜயதுங்காவும், பிரியந்தா வும், ஒப்பினிங்காக ஆடுவார் கள். அவர்களில் ஒருவரை மைதானத்தில் வைத்து சுட் பண்ணி விடுவோம்" என்றான் கரீம்கான்

"றொகான் பிரியந்தா இதுவரை திறமையாக ஆடி இலங்கை அணிகளை தோல்வி யில் இருந்து காப்பாற்றியுள் ளான். அவனை இம்முறை போட் டியில் முதல் பந்திலேயே அவுட் டாக்க வேண்டும்" என்றார் யூசுப் கான்.

அமைச்சரே அவுட்டாக்குவது என்றால்.......என்று தொடர்ந்த தளபதியை இடைமறித்து தன் திட்டத்தை விபரித்தார்.

நல்லது அமைச்சரே தங்கள் கருத்துப்படியே செய்கிறேன்.

போட்டிகளில் 2ல் வெற்றி பெற் றுள்ளீர்கள் எதிரணியும் 2ல் வெற்றி பெற்றுள்ளது. ஆகவே இந்த போட்டிதான் வெற்றிக் கிண்ணம் யாருக்கு என்பதை நிரூபிக்கும்" என்றார் தொலைக் காட்சி நிருபர் ஒருவர்.

ஆமாம் இந்தப் போட்டிதான் யாருக்கு வெற்றிக் கிண்ணம் கிடைக்கும் என்பதை நிரூபிக் கும் என்றான் இலங்கை அணித் தலைவன் விஜயதுங்கா.

"நீங்களும் றொகான் பிரியந் தாவும் தான் இலங்கை அணி யின் வெற்றியை நிரூப்பீர்கள் என்று பலரின் கருத்துக்காக உள்ளன. இதனைப்பற்றி தங் கள் அபிப்பிராயம்" என்று கேட் டார் பத்திரிகையாளர் ஒருவர்.

"இல்லை பிழையான கருத் துக்கள் சிலரிடையே நிலவி வரு கிறது. ஒரு அணியோ அல்லது

இந்த வேலையை முடிப்பதற்கு என் நம்பிக்கைக்குரிய வீரர்க ளான பீட்டரையும் ராமையும் அனுப்பப் போகிறேன் என்றான் தளபதி கரீம்கான்.

நெருப்புத்துண்டமாய் சூரி யன் கீழ்வானத்தில் இலங்கை யில் அன்று நடைபெற இருக்கும் விபரீதத்தை எதிர்பார்த்து எழுந் தான். இலங்கையில் R.S.P மைதானத்தில் அன்று இல ங்கை, இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான இறுதி கிரிக்கற் டெஸ்ற் போட்டி நடத்து வதற்கு இருந்தது.

இலங்கையின் தலைநகரமான கொழும்பில் அன்று விடியற் காலை வழமையான சுறுசுறுப் பில் காணப்பட்டது. கார்களும், பஸ்களும், சைக்கிள்களும் விரைந்து சென்று கொண்டி ருந்தன.

அந்த சுறுசுறுப்பு கிரிக்கெட் வீரர்களுக்கிடையிலும் காணப் பட்டது. நடைபெற்ற 4 டெஸ்ற் போட்டிகளில் 2ல் தொடர்ச்சி யாக வெற்றி பெற்ற இலங்கை அணி 2 போட்டிகளில் தோல்வி யுற்றது.5வது போட்டியில் வெற்றி தான் இறுதி வெற்றி யாருக்கு என்று முடிவு செய்யும் இரு அணிகளும் பயிற்சி மைதானத் தில் செய்து கொண்டிருந்தன.

ஒரு புறத்தில் இலங்கை அணித் தலைவர் மகிந்த விஜயது ங்காவை பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சி நிருபர்களும்

படையோ வெற்றி பெறுவது அதில் கலந்து கொள்ளும் ஒவ் வொரு வீரனது கையிலும் தான் உள்ளது. தனியாக அணித் தலைவரிலோ அல்லது உப தலைவனது கைகளிலோ இல்லை. எல்லோரும் கூட்டாக மேற்கொள்ளும் முயற்சிதான் அந்த அணியின் வெற்றியை நிர் ணயிக்கின்றது" என்றான் இலங்கை அணித் தலைவன்.

இந்த போட்டியிலும் தாங்க ளும் றொகான் பிரியந்தாவும் தான் தொடக்க ஆட்டக் காரர்க ளாக விளையாடுவீர்களா. "இந்த இறுதிப் போட்டியில் தங் கள் அணி வெற்றி பெறும் என்று உறுதியாக கூறுவீர்களா?"

வெற்றி பெறுவது நான் முன் னர் சொல்லியது போல் எங்கை யில் மட்டுமில்லை அணியி லுள்ள ஒவ்வொரு வீரனின் திற மையில் உள்ளது. ஆனால் நாம் இந்தப் போட்டியில் நிச் சயம் வெற்றி பெறுவோம். வெற் றிக் கிண்ணம் எமது அணிக்குத் தான் என்றுகூறி பேட்டியை முடித் துக் கொண்டு பயிற்சியில் ஈடுப டப் போனான்.

நிருபர்கள் இங்கிலாந்து அணியை பேட்டி காண்பதற்காக மைதானத்தின் மறுபுறத்தை நோக்கி சென்றார்கள்.

இரத்மலானை ஏயர் போட்டி யில் பயணிகள் விமானம் ஒன்று வெளிநாட்டில் இருந்து வந்து ரண்வேயில் ஓடிக் கொண்டிருந் தது. சிறிது நேரத்தில் வேகம் குறைந்து சட்டத்தை நிறுத்தி யது. விமானத்தின் கதவு திறக் கப்பட்டு ஏணி மூலம் பயணிகள் ஒவ்வொருவராக இறங்கினார் கள்.

அந்தப்பயணிகளில் எமது கதைக்கு தேவையான இருவர்க ளான சாம், பீட்டர் இருவரும் கறுப்புநிற கோர்ட் சூட்டில்


செயல்களையும் வாசித்தான். ஒரு கட்டத்தில் சிறிது தயங்கி னான்.

"மேலும்படி" என்றான் யூசுப் கான். பயந்து பயந்து படிக்க ஆரம்பித்தான். "இந்த வகை இயக்கங்களில் பெரும்பாலான வற்றுக்கு தலைவன் அப்துல் ரகீம். இவனை தீவிரவாத இயக் கங்களுக்கு மன்னன் என்றே கூறலாம். இவன்தான் உலகின் பல பாகங்களிலும் இயங்கும் தீவிரவாத அமைப்புகளுக் கு ஆயுதங்களை வழங்கி வருவது டன், ஒரு நாட்டின் அரசாங்க ரகசியங்களை இன்னொரு நாட் டிற்கு விற்றும் இவன் பல வங் கிக் கொள்ளைகள், ஆயுத சரக்கு கப்பல்களை கடத்துதல், விமானங்களை கடத்துதல், போதை மருந்துக்களை நாடுக ளில் சப்ளை செய்தல் போன்ற அழிவு வேலைகளை செய்து வரு கிறான். இவன் தன் பிரத்தியேக இடமாக பாகிஸ்தானை கொண் டுள்ளான். இந்த "......" "உம் மேலும்படி என்று கர்ச்சித்தான்" அப்துல் ரகீம்.

"இந்த ஆணிவேர் அப்துல் ரகீமை......"

"அப்துல் ரகிமை ...உம் படி" என்று இடியாய் முழங்கினான். காீம் கான் அ...ழி....ப் ...,ப...த...ன்.... மூ.....ல...ம் என்று மொழிபெயர்ப்பாளன் வசனத்தை முடிக்கவில்லை. தள பதி கரீம்கான், யூசுப்கான், அப் துல் ரகீம் ஆகியோரின் துப்பாக் கிகள் தோட்டாக்களை துப்பின.

உடல் முழுவதும் தோட்டா பொருட்கள் பெற்று சரிந்தான் மொழிபெயர்ப்பாளன். "டேய் இவனை இங்கிருந்து அகற்றுங் கள்" என்று கத்தினான் அப்துல் ரகீம். காவலா ளிகள் மொழி



# மாயவன்

களுக்கு காட்ட வேண்டும். அமைச்சரே தங்கள் கருத்து என்ன?" என்றான் அப்துல் ரகீம்.

"மன்னா தளபதி சொல்வது சரிதான். அவர்களுக்கு தக்க பாடம் கற்பிக்க வேண்டும். அது வும் அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத இனிமேல் இவ்வா றான செயல்களில் ஈடுபடாவண் ணம் அவர்களுக்கு புடிப்பிக்க வேண்டும்" என்று அமைதியாக அதே நேரம் குமுறும் எரிமலை யாக அமைச்சர் கூறினார்.

தளபதி கரீம்கான் எழுந்து மன்னா அதற்கு முதல் நாம் இந்த தீவிரவாதம் என்ற நூலை எமது நாட்டிலும் நாம் அறியக் கூடியதாக வேறு நாட்டிலும் பரவுவதை தடுக்க வேண்டும்.

கொண்டு ஆறு பொடிகார்ட்ஸ் சூழ்ந்து வர பூட்ஸ் சப்தம் சீராக ஒலிக்க ஆலோசனை மண்டபத்தை விட்டு வெளியேறி னான்.

தளபதி கரீம்கான் தன் படை யில் இருந்து சிறந்த வீரர்களை தெரிந்தெடுத்து அவர்களை குழுக்களாக பிரித்து அவர்களுக் குரிய பணிகளை கூறிக்கொண்டி ருந்தான்.

"அமைச்சரே எமது முதல் நடவடிக்கையாக இலங்கையில் R.S.P மைதானத்தில் நடக்க விருக்கும் இலங்கை, இங்கி லந்து அணிகளுக்கு இடையி லான கிரிக்கெட் ரெஸ்ட் போட் டியை நடக்கவிடாமல் தடுக்க லாம் என்று திட்டம்" தீட்டியுள் ளேன் தங்கள் கருத்து என்ன என்று வினாவினான்.

"தளபதி நல்ல யோசனை தான் எவ்வாறு திட்டம் தீட்டியுள் ளாய் என்று சுருக்கமாக சொல்" என்றார் யூசுப்கான்.

அனுப்பப் போகிறேன் என்றான் தளபதி கரீம்கான்.

# தொடர்கதை

## அங்கம் 06

நெருப்புத்துண்டமாய் சூரி யன் கீழ்வானத்தில் இலங்கை யில் அன்று நடைபெற இருக்கும் விபரீதத்தை எதிர்பார்த்து எழுந் தான். இலங்கையில் R.S.P மைதானத்தில் அன்று இல ங்கை, இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான இறுதி கிரிக்கற் டெஸ்ற் போட்டி நடத்து வதற்கு இருந்தது.

இலங்கையின் தலைநகரமான கொழும்பில் அன்று விடியற் காலை வழமையான சுறுசுறுப் பில் காணப்பட்டது. கார்களும், பஸ்களும், சைக்கிள்களும் விரைந்து சென்று கொண்டி ருந்தன.

அந்த சுறுசுறுப்பு கிரிக்கெட் வீரர்களுக்கிடையிலும் காணப் பட்டது. நடைபெற்ற 4 டெஸ்ற் போட்டிகளில் 2ல் தொடர்ச்சி யாக வெற்றி பெற்ற இலங்கை அணி 2 போட்டிகளில் தோல்வி யுற்றது.5வது போட்டியில் வெற்றி தான் இறுதி வெற்றி யாருக்கு என்று முடிவு செய்யும் இரு அணிகளும் பயிற்சி மைதானத் தில் செய்து கொண்டிருந்தன.

ஒரு புறத்தில் இலங்கை அணித் தலைவர் மகிந்த விஜயது ங்காவை பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சி நிருபர்களும் பேட்டி கண்டு கொண்டிருந்தனர்.

"இதுவரை நடைபெற்ற 4

உள்ளது. தனியாக அணித் தலைவரிலோ அல்லது உப தலைவனது கைகளிலோ இல்லை. எல்லோரும் கூட்டாக மேற்கொள்ளும் முயற்சிதான் அந்த அணியின் வெற்றியை நிர் ணயிக்கின்றது" என்றான் இலங்கை அணித் தலைவன்.

இந்த போட்டியிலும் தாங்க ளும் றொகான் பிரியந்தாவும் தான் தொடக்க ஆட்டக் காரர்க ளாக விளையாடுவீர்களா. "இந்த இறுதிப் போட்டியில் தங் கள் அணி வெற்றி பெறும் என்று உறுதியாக கூறுவீர்களா?"

வெற்றி பெறுவது நான் முன் னர் சொல்லியது போல் என்கை யில் மட்டுமில்லை அணியி லுள்ள ஒவ்வொரு வீரனின் திற மையில் உள்ளது. ஆனால் நாம் இந்தப் போட்டியில் நிச் சயம் வெற்றி பெறுவோம் .வெற் றிக் கிண்ணம் எமது அணிக்குத் தான் என்றுகூறி பேட்டியை முடித் துக் கொண்டு பயிற்சியில் ஈடுப டப் போனான்.

நிருபர்கள் இங்கிலாந்து அணியை பேட்டி காண்பதற்காக மைதானத்தின் மறுபுறத்தை நோக்கி சென்றார்கள்.

இரத்மலானை ஏயர் போட்டி யில் பயணிகள் விமானம் ஒன்று வெளிநாட்டில் இருந்து வந்து ரன்வேயில் ஓடிக் கொண்டிருந் தது. சிறிது நேரத்தில் வேகம் குறைந்து சட்டத்தை நிறுத்தி யது. விமானத்தின் கதவு திறக் கப்பட்டு ஏணி மூலம் பயணிகள் ஒவ்வொருவராக இறங்கினார் கள்.

அந்தப்பயணிகளில் எமது கதைக்கு தேவையான இருவாக ளான சாம், பீட்டர் இருவரும் கறுப்புநிற கோர்ட் சூட்டில் ஏணிப் படிகளின் வழியே இறங்கினார்கள்.

(15ம் பக்கம் பார்கக்)



# கம்பியூட்டர்க் கல்வி




## CPU (சி.பி.யு)

CPU (Central Processing Unit) என்பதை ஒரு கம்பியூட்டரின் மூளை எனக் கருதலாம். கட்ட ளைகளை ஏற்பதும். கட்டளை களை பிறப்பிப்பதும், கம்பியூட்டர் சிஸ்ரத்தின் எல்லா பாகங் களையும் ஒன்றிணைப்பதும், அவற்றை வழிநடாத்துவதும் CPU இன் முக்கியமான வேலை களாகும்.

ஒரு கம்பியூட்டர் சிஸ்ரத்தின் திறன், வலு, வேகம் போன்றன இந்த CPU இலேயே பெரிதும் தங்கியிருக்கின்றன. ஒரு CPU வானது எப்போதுமே அதனுடைய திறன் அல்லது வலுவைக் குறிக் கும் மொடலின் பெயராலும், அதனுடைய வேகத்தைக் குறிக் கும் வேக அலகாலும் பெயரிட்டு அழைக்கப்படுவது வழக்கம். அது மட்டுமின்றி நாம் ஒரு கம்பியூட்டர் சிஸ்ரத்தினைக் கூட CPU வின் பெயராலேயே அழைப் பதுமுண்டு. உதாரணமாக நாம் ஒரு கம்பியூட்டர் சிஸ்ரத்தினைப் பார்த்து "இது பென்ரியம் 100 (Pentium 100)" என்று கூறுகி றோம். இங்கே பென்ரியம் என் பது அந்த CPU மொடலின் பெய ரையும், 100 என்பது CPU வின் வேகத்தையும் குறிக்கின்றன.

CPU கள் பல கம்பனிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றிலே இன்ரெல் (Intel),



மோட்டரோலா (Motorola), ஏ.எம்.டி (AMD), சைறிக்ஸ் (Cyrix) போன்ற-வை PU களுக் கான CPU உற்பத்தியில் முன் னனி வகிக்கும் நிறுவனங்களா கும்.இவற்றில் Intel கம்பனிதான் PC களுக்கான CPU சந்தையை ஆக்கிரமித்திருக்கும் நிறுவனமா கும். Intel கம்பனியின் CPU மொடல்கள்286, 386, 486, Penti um, pentium Pro என்று தொடர்ச் சியாக முன்னேறி Pentium III இன்று வரை வளர்ந்துள்ளன. ஒவ்வொரு புதிய மொடலும் முன் னையதை விட வலுக் கூடியதா கவே இருக்கும். CPU வின் விலையானது அதனுடைய மொடலிலும், வேகத்திலுமே தங் கியிருக்கின்றது.

ஒரு CPU வின் வேகம் என் பது, அது ஒரு செக்கனில் எத் தனை வேலைகளை செய்யக் கூடியது என்பதைக் குறிக்கும். இதை Hertz (Hz -ஹேர்ட்ஸ்) எனும் அலகைக் கொண்டு அள விடுவர்.உதாரணமாக "Pentium II 300 CPU என்றால், அதனுடைய வேகம் 300 MHz - 300,000,000 Hz (1M = 1000,000) ஆகும். அதா வது அந்த CPU ஒரு செக்கனில் 300,000,000 வேலைகளைச் செய்யும் திறன் வாய்ந்தது.

தொடர்ந்து அடுத்த இதழில் நாம் கம்பியூட்டர் தகவல் கொள் ளளவின் அலகு பற்றியும், கம்பி யூட்டர் எப்படி எந்த உருவில் தகவல்களை சேமிக்கின்றது என் பது பற்றியும் விரிவாக ஆராய் வோம். (தொடரும்)


நன்றி:நுட்பம்

# கவிதைக் கலசம்




## எழுதுங்கள்...!

எழுதுங்கள்! எழுதுங்கள்!
காதலுக்காக மட்டும் எழுதாதீர்கள்.
காதல் தோல்விக்கும்.
காதலை வாழ்த்தவும்.
இவைகளுக்காக மட்டும் எழுதாதீர்கள்.
பலரின் பேனா இங்கு காதல்
எழுதமட்டுமே மை!யிடப்பட்டிருப்பதைக்
காண்கிறேன். கண்ணீர் சிந்துகின்றேன்.
கற்பனைத் திரையை கிழித்து
கண்முன் நடப்பதை காவியமாக்குங்கள்.
அரச அலுவலக அநியாயங்களை எழுதுங்கள்
காம வெறியில் கரையும் எம் சமூகத்துக்காக
எழுதுங்கள்
இன்னும் சாதிச் சகதியில் புதைந்து கிடக்கும்
சமூகங்களை எழுத்தால் கிளருங்கள்.
கையேந்திக் கேட்கிறேன் கவிஞர்களே!
பெண்ணைக் காதலிப்பவர்களுக்காக மட்டும்
எழுதாதீர்கள்
மண்ணைக் காதலிப்பவர்களுக்கும்
மக்களை நேசிப்பவர்களுக்கும்
எழுதுங்கள்!




தென் சீலன்

## சங்கு நாதமே ஓங்கி ஒலித்திடுவாய்!

வலம்புரி என்றே வலம் வந்து
தினம் பல செய்திகள் தந்தாயே.
மூன்றாம் வயதில் காலடி வைக்கையில்
ஓப் செற் பதிப்பில் ஒளி விட்டாயே
உன் வளர்ச்சி உயர்ச்சியின் படிக்கல்.
வெற்றி எட்டுத் திக்கும் விளங்கிடவே.
வெற்றிச் சங்காய் நாதமொலித்து நீ
வாரமலரென்றே மலர்ந்தாயே.
வகைவகைச் செய்திகள் தொகுத்தாயே.
சிறுகதை இலக்கியம் நீதந்தாய்
சிறுவர் அரங்கை நீ படைத்தாய்
மகளிர் உலகம் மகிழ்ந்திடவே
சிரித்திரன் தொடர்கதை தொடர்ந்திட்டாய்.
வியாசர் பதில்கள் படைத்துவந்தாய்!
மருத்துவத்தை நீ மறக்கவில்லை.
பல்சுவை அம்சங்கள் தாங்கி வந்தாய்
இளம் எழுத்தாளர் வளர வைத்தாய்
பகலவன் போலவே ஒளி வீசி
பாரெலாம் உன் புகழ் பரவிநிற்க
வருக! வருக! சங்கு நாதமே
வளர்க! வளர்க! நாத ஒலி.
ஓங்கி ஒலித்திடுக உன் புகழ்.
வாழ்க! வாழ்க!

த.பரராஜசிங்கம்
நீர்வேலி

## உள்ளம் ஒரு வெள்ளைத்தாள்!



எல்லா இரவுகளும்
விடிவது
கதிரவனால்
என் இரவுகள்
விடியும் உன்
கண்களினால்!
நீ பார்த்தால் தான்
எனக்குப் பகல்!
காதல் தீபத்தை
ஏற்றுவதற்கு
கைகள் எதற்கு?
கண்கள் போதாதா?
உன் பெயரைச் சொன்னேன்
என்னைக்
கவிஞன் என்றார்கள்
உன் ஊரைச் சொன்னேன்
என்னை
காதலன் என்றார்கள்
நம்
உறவைச் சொன்னேன்!
என்னை
நாட்டு வைத்தியரிடம்
காட்டச் சொன்னார்கள்!
வெள்ளைத் தாளாய்
இருந்த என்
இதயத்தில்
எதை எதையோ
நீதான்
எழுதினாய்.............
நான் ஒரு நாள்
எழுதியதையெல்லாம்
நீயே அழித்து விட்டாய்
அழித்தது சரி எழுதியது
நீ
என்பதால்
அழித்தது சரி
இதயத்தைக் கிழித்தது சரியா?


சி.சிவரதி

## நண்பனுக்கு



நட்பின் நாயகனே.......!
நட்பிற்கு வரைவிலக்கணம் கூறி
நாள் முழுவதும் பழகிய உனக்கு
நடுவில் நட்பை நறுக்கியது யாரு?
நட்பில் நட்டம் ஏனடா........?
நட்பு என்றும்நடைமுறைச்சொத்தல்ல...
அது நிலையான சொத்து என்பது
மட்டும் உனக்கு ஏனோபுரியவில்லை.
போக்குவரத்தில் விபத்து
ஏற்படுவதற்கும்
என் ஆயுளிற்கும் தான் காப்புறுதி
செய்ய முடிந்தது
முடியுமானால் எம் நட்பிற்கும்
காப்புறுதி செய்திருப்பேன்
உன்னுடன் பேச முடியாது போனது
போல் நட்பிற்கும் காப்புறுதி செய்ய

## மாற்றங்கள்.......!




அவள் பூவாய்த்தானிருந்தாள்
நீங்கள் கசக்கி முகரும் வரை!
அவள் மென்மையாய் தானிருந்தாள்
நீங்கள் முரடர்களாகும் வரை!
அவள் மானாகத்தான் இருந்தாள்
நீங்கள் வேடர்களாகும் வரை!
அவள் சிட்டாகத் தானிருந்தாள்
நீங்கள் சிறகொடிக்கும் வரை!
அவள் தீபமாய்த் தானிருந்தாள்
நீங்கள் ஊதியணைக்கும் வரை!
அவள் பதுமையாய்த் தானிருந்தாள்
நீங்கள் மிருகங்களாகும் வரை!
அவள் அவளாகத் தானிருந்தாள்
உங்கள் சுயரூபம் தெரியும் வரை!
அவள் அவளாகத் தானிருக்கிறாள்
அன்று போல் அபலையாய் அல்ல!
அவள் அவளாகத் தானிருந்தாள்
அடக்கு முறைகளுக்கு அடிமையாய் அல்ல!

சு.ஷோபனா
வேலணை.

எம்மை

இணையும் இதயங்களை இணைக்கும் இணையம்!



சமூகங்களை எழுதினால் கிளருங்கள்.
கையேந்திக் கேட்கிறேன் கவிஞர்களே!
பெண்ணைக் காதலிப்பவர்களுக்காக மட்டும்
எழுதாதீர்கள்
மண்ணைக் காதலிப்பவர்களுக்கும்
மக்களை நேசிப்பவர்களுக்கும்
எழுதுங்கள்!



தென் சீலன்

மருத்துவத்தை நீ மறக்கவில்லை,
பல்சுவை அம்சங்கள் தாங்கி வந்தாய்
இளம் எழுத்தாளர் வளர வைத்தாய்
பகலவன் போலவே ஒளி வீசி
பாரெலாம் உன் புகழ் பரவிநிற்க
வருக! வருக! சங்கு நாதமே
வளர்க! வளர்க! நாத ஒலி.
ஓங்கி ஒலித்திடுக உன் புகழ்.
வாழ்க! வாழ்க!

த.பரராஜசிங்கம்
நீர்வேலி

## உள்ளம் ஒரு வெள்ளைத்தாள்!




எல்லா இரவுகளும்
விடிவது
கதிரவனால்
என் இரவுகள்
விடியும் உன்
கண்களினால்!
நீ பார்த்தால் தான்
எனக்குப் பகல்!
காதல் தீபத்தை
ஏற்றுவதற்கு
கைகள் எதற்கு?
கண்கள் போதாதா?
உன் பெயரைச் சொன்னேன்
என்னைக்
கவிஞன் என்றார்கள்
உன் ஊரைச் சொன்னேன்
என்னை
காதலன் என்றார்கள்
நம்
உறவைச் சொன்னேன்!
என்னை
நாட்டு வைத்தியரிடம்
காட்டச் சொன்னார்கள்!

வெள்ளைத் தாளாய்
இருந்த என்
இதயத்தில்
எதை எதையோ
நீதான்
எழுதினாய்............
நான் ஒரு நாள்
எழுதியதையெல்லாம்
நீயே அழித்து விட்டாய்
அழித்தது சரி எழுதியது
நீ
என்பதால்
அழித்தது சரி
இதயத்தைக் கிழித்தது சரியா?

சி.சிவரதி
கல்வயல்.


## நண்பனுக்கு



நட்பின் நாயகனே.......!
நட்பிற்கு வரைவிலக்கணம் கூறி
நாள் முழுவதும் பழகிய உனக்கு
நடுவில் நட்பை நறுக்கியது யாரு?
நட்பில் நட்டம் ஏனடா........?
நட்பு என்றும்நடைமுறைச்சொத்தல்ல...
அது நிலையான சொத்து என்பது
மட்டும் உனக்கு ஏனோபுரியவில்லை.
போக்குவரத்தில் விபத்து
ஏற்படுவதற்கும்
என் ஆயுளிற்கும் தான் காப்புறுதி
செய்ய முடிந்தது
முடியுமானால் எம் நட்பிற்கும்
காப்புறுதி செய்திருப்பேன்
உன்னுடன் பேச முடியாது போனது
போல் நட்பிற்கும் காப்புறுதி செய்ய
முடியாது போனதடா.....

ந.தீபன்,
அராலி.

## மாற்றங்கள்.......!



அவள் பூவாய்த்தானிருந்தாள்
நீங்கள் கசக்கி முகரும் வரை!
அவள் மென்மையாய் தானிருந்தாள்
நீங்கள் முரடர்களாகும் வரை!
அவள் மானாகத்தான் இருந்தாள்
நீங்கள் வேடர்களாகும் வரை!
அவள் சிட்டாகத் தானிருந்தாள்
நீங்கள் சிறகொடிக்கும் வரை!
அவள் தீபமாய்த் தானிருந்தாள்
நீங்கள் ஊதியணைக்கும் வரை!
அவள் பதுமையாய்த் தானிருந்தாள்
நீங்கள் மிருகங்களாகும் வரை!
அவள் அவளாகத் தானிருந்தாள்
உங்கள் சுயரூபம் தெரியும் வரை!
அவள் அவளாகத் தானிருக்கிறாள்
அன்று போல் அபலையாய் அல்ல!
அவள் அவளாகத் தானிருந்தாள்
அடக்கு முறைகளுக்கு அடிமையாய் அல்ல!

சு.ஷோபனா
வேலணை.

## எம்மை வரவேற்கும்.........!

சமூகச் சாக்கடைகளின்
சங்கதி கேளீரோ......!
உண்மைகள் உறங்கிட
உணர்வுகள் தூங்கிடுமோ....?

மனமென்னும் ஏட்டினிலே
மகிழ்வெங்கே எழுதுவது!
வேதனையின் சுவடுதான்
சித்திரமாய்ச் சிரிக்கின்றதோ!

சுயநலம் கொண்டு
பிறர்மனம் வருத்தும்
பித்த நிலை மாறாதோ....!?
சித்தம் தான் தெளியாதோ....??

வீட்டிற்கு வீடு
எல்லைச் சண்டை
இன்னுமிருக்க,
நாட்டின் போர்கள்
எப்படி மாறிடும்....!
ஆனாலும்.........
இளவேனில் தேடி
இதயமின்னும் அலைகிறதே..!

ஒன்றே குலமாய்
ஒருவனே தேவனாய்...
அன்பில் உயிர்வளர்த்து
அறிவில் உலகளப்போம்.....!
அப்போது
மனிதத்தின் கதவுகள்
எம்மை வரவேற்கும்.....!

எஸ்.நந்தினி,
இணுவில்.

## இணையும் இதயங்களை இணைக்கும் இணையம்!

முத்தான வார்த்தைகளை
முத்தமிழில் இருந்து
முகர்ந்தெடுத்து
வித்தைகள் புரியும்
விசைப்பலகை துணையோடு
வித வித எழுத்துருவாக்கி
விரைந்தே ஓர் பெண்ணுக்கு
மின்னஞ்சல் செய்திட............
கட்டிளங்காரிகை அவளும்
பிரியமானவரே
பிரியமுடன் ஓர் போட்டோவை
அட்டாச் பண்ணிடுங்க
பகர்ந்தாள் விரைந்து............



வாரி எடுத்தேன்
என் வடி விழந்த முகத்தை
"போட்டோசொப்" துணையுடன்
வண்ணமாய ஜாலங்கள் காட்டி
நிறமாற்றி உருமாற்றி
அட்டாச் பண்ணி
ஓ.கே கொடுத்திட
மதிமயங்கி நின்றாள்
அவளும்..........................................
இணையும் இதயங்களை
இணைத்த பெருமையுடன்
நிலைத்து நின்றது
நானிலமதில் இன்னும்
சாதனைகள் படைக்கப் போகும் இணையம்

காரை.விது.தீபன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## நண்பி



நான் மகிழ்வாக இருக்கும் போது
உற்சாகப்படுத்துபவள் அவள்
நான் கவலைக்குள் மூழ்கும் போது
ஆதரவாக இருப்பவள் அவள்
நான் வெற்றி ஈட்டும் போது
பாராட்டுபவள் அவள்
நான் தோல்வியடையும் போது
ஊக்கப்படுத்துபவள் அவள்
என்றும் இதயத்தில் வாழும்
நண்பி அவள்.

ஆதி,
நாவலர் வீதி

## காதல்

இதயம் இரண்டின்
சந்திப்பில் பிறந்த ஒரு
வழிப்பாதை!

## சாதி

சாதிக்கத் தெரியாத மனிதன்
ஆதிக்கம் செய்வதற்காய்
தனக்குத்தானே கையில்
எடுக்கும் ஆயுதம்

## சீதனம்

ஊனமுள்ள ஆண்கள்
தவமிருந்து
பெற்றுக் கொள்ளும்
பொக்கிஷம்.

எஸ்.கவிதரன்
சண்டிலிப்பாய்.

## ஏழ்மை!

மனிதமுள்ள மனிதர்களும்
மறைந்து போகக் கண்டேன்
உயிர் கொடுக்கும் உடன் பிறப்பும்
உறங்கிப் போகக் கண்டேன்
பின் தொடர்ந்த சொந்தங்கள்
தூரம் போகக் கண்டேன்
தோள் கொடுக்கும் தோழர்கள்
தூற்றி விடக் கண்டேன்.
எதிர்பார்த்த என்னிதயம்
எங்கே என்று ஆச்சு
காத்திருந்த கரு விழிகளில்
கண்ணீர் வற்றிப் போச்சு
சிந்தித்தேன்....சிந்தித்தேன்....
உண்மை தெளிவானது
நானிப்போ ஒரு ஏழை.


எ.பிறிந்தன்
யாழ்ப்பாணம்.

## மாறுவதில்லை

விதைப்பதெல்லாம் முளைப்பதில்லை
இம்மண்ணில்
நினைப்பதெல்லாம் நடப்பதில்லை
இவ் உலகில்
மலர்வதெல்லாம் மணப்பதில்லை
பூஞ்சோலையில்
மனதில் நிலைத்த அன்பு
என்றும் மாறுவதில்லை

அன்ரனி
பண்டத்தரிப்பு

## இப்போது புரிகிறதா!



மலரே ஒரு கணம் திரும்பிப்பார் என்னை
நீ என்னைப் பார்த்து புன்னகைப்பது
எனக்கு மட்டும் தான் புரிகிறது.
நான் ஒவ்வொரு கணமும் பேசும்
மௌனப் பாசைகள் உனக்கு மட்டும்தான் புரிகிறது
ஏன் என்றால் என் பாசைக்கு –நீ மட்டும் தான்
தலையாட்டுகிறாய்
என்னை நீ அருகேவா" என்று – அழைக்கிறாய்
நான் அருகே வந்தால் நாணம் – கொள்கிறாய்
இப்போது புரிகிறதா ஏன் உன்னை நேசிக்கிறேன் என்று.

நா.சுரேஷ்,
நவிண்டில்.



# சிறுவர் அரங்கம்

## சிந்தனைத்துளிகள்

1. பெற்றோரை மதியுங்கள் பிறர் உங்களை மதிப்பார்கள்.

2. அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை எனவே எல்லோரிடமும் அன்பு செய்யுங்கள்.

3. நேரத்தைச் சேமியுங்கள் அது உங்கள் எதிர் காலத்துக்கு உதவும்.

4. இளமையில் கற்றுக் கொள்ள வேண்டியவை கல்வி, ஒழுக்கம், பணிவு, பொறுமை.

5. இல்லாமல் செய்ய வேண்டியவை பொறாமை, ஆசை, சுயநலம் என்பன ஆகும்.

வின்சன்ட் - தபு
சென் /ஜோன்ஸ் கல்லூரி

## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்; அதை நழுவ விடாதீர்கள்.
வாழ்க்கை ஒரு பயணம்; அதை சென்று முடியுங்கள்.
வாழ்க்கை ஒரு விடுகதை; அதை விடுவியுங்கள்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு; அதில் ஈடுபடுங்கள்.
வாழ்க்கை ஒரு போராட்டம்; அதை வென்று காட்டுங்கள்.
வாழ்க்கை ஒரு வெகுமதி; அதை ஏற்றுக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போட்டி; அதில் வெற்றி பெறுங்கள்.
வாழ்க்கை ஒரு கலை; அதை அழகுபடுத்துங்கள்.
வாழ்க்கை ஒரு வேதனை; அதை தாங்கிக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு சவால்; அதை எதிர்நோக்குங்கள்.
வாழ்க்கை ஒரு சோகம்; அதற்கு மனம் தளராதீர்கள்.
வாழ்க்கை ஒரு பிரச்சினை; அதற்குத் தீர்வு காணுங்கள்.

லோ. அபிராமி

## பொது அறிவு

1. யானையின் தும்பிக்கை 40,000 நார்களால் ஆனது. ஓர் எலும்பு கூட கிடையாது. மிக மெல்லிய ஒலியைக் கூட கேட்கும் ஆற்றலும், சற்றுத் தொலைவிலுள்ள சுண்டெலியின் பாதச் சுவடுகளைக் கூடப் பார்க்கும் நுண்ணிய பார்வை சக்தியும் கொண்டது யானை.
2. கிரீன்லாந்தின் டுண்ட்ராவில் உள்ள "வில்லோ" மரங்களே உலகிலேயே குட்டையான மரங்கள். எத்தனை வயதானாலும் இவை இரண்டு அங்குல உயரத்துக்கு மேல் வளர்வதே இல்லை.
3. புழு பூச்சிகளை உண்ணும் சிறு முலையூட்டி இனத்தைச் சேர்ந்த துன்னெலி, ஓர் இரவில் பூமியில் நூறு அடி நீளத்துக்கு குழி தோண்டும் ஆற்றலுடையது.
4. தங்கள் குடியிருப்புக்களை உருவாக்கிக் கொள்வதில் கறையான்கள் மிகத் திறமை வாய்ந்தவை.

T. கலையரசி

## சிந்தனைத்துளிகள்

படிப்பை நீ நேசித்தால் நீ படித்தவனாகி விடுவாய்
சோக்ரடீஸ்

பெரிய மனிதனுக்கு உன் பணத்தை கடன் கொடாதே
டென்மார்க்பழமொழி

எஸ் . வாகீசன்
மல்லாகம்

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?



## தெரிந்து கொள்வோம்.

25 வது ஆண்டை வெள்ளி விழாவாகவும் 50 வது ஆண்டைப் பொன் விழாவாகவும் கொண்டாடுகிறோம். அல்லவா? அதே போல் ஒவ்வொரு ஆண்டுக்கும் தனிப்பெயர்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| முதல் ஆண்டு | -காகிதம். |
| இரண்டாம் ஆண்டு | -பருத்தி. |
| மூன்றாம் ஆண்டு | -தோல். |
| நான்காம் ஆண்டு | -புத்தகம். |
| ஐந்தாம் ஆண்டு | -இரும்பு. |
| ஆறாம் ஆண்டு | -மரம். |
| ஏழாம் ஆண்டு | -வெண்கலம். |
| எட்டாம் ஆண்டு | -மண்பானை. |
| பத்தாம் ஆண்டு | -தகரம். |
| பதினோராம் ஆண்டு | -எஃகு. |

## பொறுமையின் பெருமை



வெளிநாட்டில் சமயத்தைப் பரப்புவதற்காகச் செல்ல இருந்த

5. இல்லாமல் செய்ய வேண்டியவை பொறாமை, ஆசை, சுயநலம் என்பன ஆகும்.

வின்சன்ட் - தபு
சென் /ஜோன்ஸ் கல்லூரி

சாலும் இவை இரண்டு அங்குல உயரத்துக்கு மேல் வளர்வதே இல்லை.

3.புழு பூச்சிகளை உண்ணும் சிறு முலையூட்டி இனத்தைச் சேர்ந்த துன்னெலி, ஓர் இரவில் பூமியில் நூறு அடி நீளத்துக்கு குழி தோண்டும் ஆற்றலுடையது.

4.தங்கள் குடியிருப்புக்களை உருவாக்கிக் கொள்வதில் கறையான்கள் மிகத் திறமை வாய்ந்தவை.

T.கலையரசி



## வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்; அதை நழுவ விடாதீர்கள்.
வாழ்க்கை ஒரு பயணம்; அதை சென்று முடியுங்கள்.
வாழ்க்கை ஒரு விடுகதை; அதை விடுவியுங்கள்.
வாழ்க்கை ஒரு விளையாட்டு; அதில் ஈடுபடுங்கள்.
வாழ்க்கை ஒரு போராட்டம்; அதை வென்று காட்டுங்கள்.
வாழ்க்கை ஒரு வெகுமதி; அதை ஏற்றுக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போட்டி; அதில் வெற்றி பெறுங்கள்.
வாழ்க்கை ஒரு கலை; அதை அழகுபடுத்துங்கள்.
வாழ்க்கை ஒரு வேதனை; அதை தாங்கிக் கொள்ளுங்கள்.
வாழ்க்கை ஒரு சவால்; அதை எதிர்நோக்குங்கள்.
வாழ்க்கை ஒரு சோகம்; அதற்கு மனம் தளராதீர்கள்.
வாழ்க்கை ஒரு பிரச்சினை; அதற்குத் தீர்வு காணுங்கள்.

லோ. அபிராமி

## சிந்தனைத்துளிகள்

படிப்பை நீ நேசித்தால் நீ படித்தவனாகி விடுவாய்
சேக்ஸ்பியர்

பெரிய மனிதனுக்கு உன் பணத்தை கடன் கொடாதே
டென்மார்க்பழமொழி

எஸ் .வாகீசன்
மல்லாகம்

## தெரிந்து கொள்வோம்.

25 வது ஆண்டை வெள்ளி விழாவாகவும் 50 வது ஆண்டைப் பொன் விழாவாகவும் கொண்டாடுகிறோம். அல்லவா? அதே போல் ஒவ்வொரு ஆண்டுக்கும் தனிப்பெயர்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| முதல் ஆண்டு | -காகிதம். |
| இரண்டாம் ஆண்டு | -பருத்தி. |
| மூன்றாம் ஆண்டு | -தோல். |
| நான்காம் ஆண்டு | -புத்தகம். |
| ஐந்தாம் ஆண்டு | -இரும்பு. |
| ஆறாம் ஆண்டு | -மரம். |
| ஏழாம் ஆண்டு | -வெண்கலம். |
| எட்டாம் ஆண்டு | -மண்பானை. |
| பத்தாம் ஆண்டு | -தகரம். |
| பதினொராம் ஆண்டு | -ஸ்டீல். |
| பன்னிரண்டாம் ஆண்டு | -பட்டு. |
| பதின்மூன்றாம் ஆண்டு | -சரிகை. |
| பதின்நான்காம் ஆண்டு | -தந்தம். |
| பதினைந்தாம் ஆண்டு | -பளிங்கு. |
| இருபதாம் ஆண்டு | -சீனா. |
| இருபத்தைந்தாம் ஆண்டு | -வெள்ளி. |
| முப்பதாம் ஆண்டு | -முத்து. |
| முப்பத்தைந்தாம் ஆண்டு | -பவளம் |
| நாற்பத்தைந்தாம் ஆண்டு | -நீலக்கல். |
| ஐம்பதாம் ஆண்டு | -பொன். |
| அறுபதாம் ஆண்டு | -வைரம். |
| எழுபத்தைந்தாம் ஆண்டு | -பிளாட்டினம். |

S .லக்ஷிகா

## பொறுமையின் பெருமை



வெளிநாட்டில் சமயத்தைப் பரப்புவதற்காகச் செல்ல இருந்த சீடன் தன் குருவை வணங்கினான்.

குரு அவனைப் பார்த்து "நீ எந்தச் சூழலிலும் பொறுமையாக இருப்பாயா?" என்று கேட்டார்.

அதற்குச். சீடன், 'கண்டிப்பாக இருப்பேன் குருவே!" என்றான்.

'உறுதியாக உன்னால் பொறுமையாக இருக்க முடியுமா?" என்று மீண்டும் கேட்டார் குரு.

"இருப்பேன் குருவே!" என்றான் சீடன்.

"நன்றாக சிந்தித்துச் சொல். உன்னால் எந்த நிலையிலும் பொறுமையாக இருக்க முடியுமா?" என்று மீண்டும் கேட்டார்.

சீடன் பொறுமை இழந்து விட்டான். "என்ன குருவே! நான்தான் திரும்பத்திரும்பப் பொறுமையாக இருக்க முடியும் என்று சொல்லுகிறேன். நீங்கள் மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்கின்றீர்கள்?" என்று அலுத்துக் கொண்டான்.

குரு சிரித்துக் கொண்டே, "நான் ஒரே கேள்வியை நான்கைந்து முறை கேட்ட உடனே நீ பொறுமை இழந்து விட்டாயே. இப்போது தெரிகிறதா பொறுமையாக இருப்பது அவ்வளவு எளிய செயல் அன்று" என்றார்.

தன் தவறுக்கு வருந்திய சீடன் குருவின் கால்களில் விழுந்து வணங்கினான்.

சிறுவர்களே கதையை படித்தீர்களா? நீங்களும் உங்கள் வாழ்வில் பொறுமையாக இருக்க பழகிக் கொள்ளுங்கள் பொறுமை என்றும் உங்களிற்கு பெருமை தேடித்தரும்.

தொகுப்பு:- சுஜா

## இவற்றிற்கு நேரம் ஒதுக்குங்கள்.



சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது இதயத்தின் இசை
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது சக்தியின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள்
அது இளமையின் இரகசியம்
பழக நேரம் ஒதுக்குங்கள்
அது அறிவின் ஊற்று
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்
அது மகிழ்ச்சியின் வழி.
உழைக்க நேரம் ஒதுக்குங்கள்
அது வெற்றியின் விலை.

செ. கோபால கிருஸ்ணன்
கொக்குவில் இந்துக் கல்லூரி

# சிறி மாரி நகை மாடத்தின்
## இவரைத் தெரியுமா -பரிசுப் போட்டி இல:-05

படத்தில் இருப்பவர்
யார் தெரியுமா?

(வாசகர்களுக்கான குறிப்பு -)

இவர் உலகில் உள்ள ஓர் பெரும் தீவிரவாத அமைப்பை வழி நடத்திச் செல்பவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர் வரும் 07ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய தாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

இவரைத்தெரியுமா?
போட்டி இல:-05,
சிறிமாரி நகைமாடம்,
49, (187) . கே.கே.எஸ் வீதி,
(சத்திரச்சந்தி அருகாமை) யாழ்ப்பாணம்.



**குறிப்பு:-**
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: – 05**


படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................

அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 04இற்கான
சரியான விடை





**இளைய தளபதி விஜய்**

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 04 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

**முதற்பரிசு: –** அ.பிரதீபா
258/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம்பரிசு: –** பா.வத்சலா
41/2, யமுனாரிலேன்,
நல்லூர்.

**மூன்றாம்பரிசு: –** கு.சுஜீவன்
K.K.S றோட்
அம்மன் கோவில் வீதி,
வல்வெட்டித்துறை.

**சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**
*ம.அன்ரலா, தும்பளை, யோ.நித்தியா, நல்லூர், ச.நந்துஜா, வண்ணார் பண்ணை, க.கபில்ஜா, பருத்தித்துறை, க.விஜிதா, வதிரி, க.கஜேந்தினி, யாழ்ப்பாணம், யோ.மதன்பீரசன்னா, நல்லூர், க.ரதீக்கா, கரவெட்டி, இ.விபுலன், ஆனைக்கோட்டை, கு.ராஜினி, திருநெல்வேலி.*

## மரண விளை....

ஒரு டாக்ஸியை கூப்பிட்டு அதிலேறி நகரத்தை நோட்டமிட்டபடி நகரத்தின் ஒதுக்குப்புறமான பகுதியை அடைந்து, அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தமைப்பின் படி குறிப்பிட்ட இடத்தை அடைந்து டாக்ஸியை அனுப்பிவிட்டு நடக்க ஆரம்பித்தார்கள்.

குறிப்பிட்ட பங்களாவை அடைந்ததும் கோலில் பெல்லை அழுத்தினார்கள். கதவு திறக்கப்பட்டு உள்ளே நுழைந்தார்கள். பங்களாவின் ஒரு கோடியை அடைந்து சுவரில் உள்ள புரூஸ்லியின் படத்தை அகற்றி அதன்பின் தெரிந்த சுவிச்சை அழுத்தினார்கள். நிலத்தின் ஒருபகுதி விரிந்து உள்ளே படிகள் ஓடின. படிகள் வழியே இறங்கி உள்ளே உள்ள ஒரு சுவிச்சை அழுத்தினார்கள். விரிந்த நிலப்பகுதி மீண்டும் மூடியது. தொடர்ந்து நடந்தார்கள். "வெல்கம் வெல்கம் மிஸ்டர்ராம் அன்ற் பீற்றர்" என்ற குரல் கேட்டு திரும்பினார்கள்.

மங்கலான லைற் வெளிச்சத்தில் கறுப்பு நிற புல்சூட்டில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். "ஆர் யூ 099 ஆம் ஐ கரெக்ட்" என்றான் பீட்டர்.

"எஸ் யூ ஆர் கரெக்ட்". கம் வித் மீ என்று உள்ளே அழைத்துப் போனான். 099 உள்ளே இருந்த வட்டமேசையில் அமர்ந்தார்கள்.

நாம் முதலில் தலைமை அலுவலகத்திற்கு செய்தி அனுப்புவோம் என்று பீட்டர் தன் ப்றீப்கேசை திறந்தான். உள்ளே சாமர்த்தியமாக மறைத்து டிடெக்டர்களின் கண்களில் மண்ணைதூவும் விதமாக இருந்த ஒலிபரப்பும் சாதனங்களை எடுத்து பொருத்தி தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக கட்டளைகளை பெற்றான். அத்துடன் தொடர்பை துண்டித்து விட்டு 099இடம் இருந்து செல்போனை பெற்று நம்பர்களை எழுதினான்.

(தொடரும்)







க.முகுந்தன்
வயது: 19
சுழிபுரம் மேற்கு
சுழிபுரம்
கவிதை எழுதுதல், பாடல் கேட்டல்



ப.சுதர்சன்
வயது: 19
இத்தாவில் பளை.
சினிமா, வானொலி
பத்திரிகை.



த.பிரதீபன்
வயது : 21
பொன்னாலை வீதி,
கட்டுடை மானிப்பாய்
பேனாநட்பு
வழமையானவை.




யோ.நிமலராஜன்
327/7 கதீற்றல் லேன்
யாழ்ப்பாணம்
கவிதை எழுதுவது
கிரிக்கெட், ரீ.வீ
பார்ப்பது



மு.சிவதாசன்
வயது: 40
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
பத்திரிகை வானொலி

# குறுக்கெழுத்துப் போட்டி
## இல 06




அனுப்ப வேண்டிய முகவரி:-

**ஸ்ரீ வாணி நகை மாடம்,**
**குறுக்கெழுத்துப் போட்டி இல 06**
**இல. 173, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

.......... ✂ இங்கே வெட்டுக..............................

**இடமிருந்து வலம்.**
(1) வஞ்சனை (4) தஞ்சமளிக்கின்ற (6) கடைசி நட்சத்திரம் (7) வாழைஇனம் (8) (வலம்மாறி) தலைமுடி (9) தொடர்ந்து செல்லுதல் (10) ஒன்று சேர்த்தல் (11) இயற்கைத் தோட்டி (13) வெற்றிலை (14) ஆந்தை (17) (வலம்மாறி) மாறுபாடான (18) தன் இடத்தை விட்டு விலகி (19) (வலம்மாறி) தெரு (20) இது பிடித்தல் உடல் நலக்கேடு.

**மேலிருந்து கீழ்.**
(1) ரேகை பார்த்து பலன் சொல்லுதல் (2) தவம் புரிபவர் (3) வாழ் (4) தரும அல்ல (5) கைகூடல் (7) ஒரு இராசி (9) மாலை (10) மலிவு விலை (12) அம்மன் (14) சேர (15) ஒரு தானியம் (16) (கீழிருந்து மேல்) ஒரு மரம்

**குறுக்கெழுத்துப் போட்டி இல 05இற்கான விடைகள்.**

**இடமிருந்து வலம்**
1) அசாத்தியம் 5) சக 6) தசம 8) காடி 9) நாளிகேரம் 11) தமது 13) சூடகம் 16) பாடகம் 18) புலவன் 19) தரும 20) அன்னை 21) திடம்

**மேலிருந்து கீழ்**
1) அசகாயசூரன் 2) சாகடி 3) திருநாமம் 4) தூமம் 7) சரண் 10)கேதம் 11) தகவிலன் 12) துளி 14) ஔடதம் 15) சம்மதி 17) கருட 18) புனை 20) அவ

பல வாசகர்கள் இக் குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விபரம்:-

**முதற் பரிசு:-** கே.தர்ஷனன்
7/3 ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம்.


**இரண்டாம் பரிசு:-** த.சுந்தரமூர்த்தி
பூமகள் வாசம்
புலோலி தெற்கு, புலோலி.

**மூன்றாம் பரிசு:-** ப.தெய்வேந்திரன்
இல 7, பேக்கரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்


**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம்**
*கே.அரசேஸ்வரன், கலைமகள் வீதி, சி.சிவரஞ்சனி, அச்சுவேலி ந.சஞ்சயன், யாழ்ப்பாணம், சபா.பாரதி, அல்வாய், கண.ஜீவகாருண்யம், காரைநகர், சி.மதியழகன், அல்வாய், வி.செல்வநாயகம், திருநெல்வேலி, ப.தனஞ்செயன், யாழ்ப்பாணம், ச.சகிலா, ஆனைக்கோட்டை, ப.கனகசிங்கம் யாழ்ப்பாணம்.*

**குறிப்பு:-**
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குறுக்கெழுத்துப் போட்டி இல 06" அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி:- 07.04.2002.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |



## ஜோதிகாவுக்கு செக் வைக்க மோனலைத் தயார்ப் படுத்துகிறார்கள்!




லேட்டஸ்ட் கலக்கல் ஜோதிகா, செப்பல் விளம்பரம், எண்ணெய் விளம்பரம் என்று எந்த டி.வி.யை ஆன் பண்ணினாலும் ரகளை பண்ணுகிறார். செப்பல் விளம்பரத்துக்காக அவர் வாங்கிய சம்பளம் ஐம்பது லட்சம். மூன்று நாள் ஷூட்டிங்க்கு இது அதிகம் என்பது தெரிய அடுத்தடுத்து பெரியமீட்டர் போடுகிற வேளையில் இறங்கியிருக்கிறார் ஜோ!

இதில் டென்ஷனான மார்க்கெட்டிங் ஆட்கள் மோனலை வைத்து செக் வைத்திருக்கிறார்கள். யெஸ். . . ஜோ நடித்துக் கொண்டிருந்த செப்பல் விளம்பரத்தில் கலக்கி விட்டு காசை அள்ளிக்கொண்டு வந்துவிட்டார் மோனல்! ஒரு பக்கம் சினிமா இன்னொரு பக்கம் மாடலிங் என்று ரகளை பண்ணி வேண்டும் என்று களமிறங்கிவிட்டார் மோனல்!

செப்பல் விளம்பரத்துக்கும் கவர்ச்சிக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை! ஆனால் மிரட்டியிருக்கிறார் மோனல்!

## சிம்ரன் கர்ப்பமானதிற்குக் காரணம்- அர்ஜுனா?

ஏழுமலையின் மனைவி லட்சுமி பெயருக்கு ஏற்றபடி கொள்ளை அழகு. அவளது ஒரே தங்கை சந்தியா. மகா குறும்புக்காரி. 'அத்தான் உனக்கு தாலி கட்டினாலும் அவரோடு நான்தான் குடும்பம் நடத்துவேன்' என்று செல்லமாக அக்காவிடம் சொன்னவள்.



ஒரு நாள் ஏழுமலை வெளியே கிளம்பும்போது சந்தியா வந்து 'அத்தான் ஒரு இனிப்பான் செய்தி. நான் வாந்தி எடுக்கிறேன். அதற்கு நீங்கள்தான் பொறுப்பு' என்றாள். ஏழுமலை 'என்ன விஷயம்' என்று கேட்க 'ஒன்றுமே தெரியதவர் போல் ஏன் நடிக்கிறீர்கள். என் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நீங்கள் தான் தகப்பன்' என்கிறாள்.


ஏழுமலை விஷயம் தெரியாமல் விழிக்க, அப்போது லட்சுமி வந்து 'நான் முழுகாமல் இருக்கிறேன். நமக்கு குழந்தை பிறக்கப்போகிறது' என்கிறாள். இதைக் கேட்டு சந்தோஷப்படும் ஏழுமலை சந்தியாவைப் பார்க்கிறான்.

ஏழுமலையின் தந்தை விஜயகுமார் 'ஏண்டா, என்னடா இதெல்லாம் ஒரே குழப்பமா இருக்கு' என்று கேட்க, அப்பா எனக்கு எதுவுமே தெரியாது என்கிறான். லட்சுமிக்கு கோபம் வருகிறது.

இப்படி ஒரு கலகலப்பான காட்சி வெங்கட்ரமணா புரொடக்ஷன்ஸ் சார்பில் எம்.வி. முரளிகிருஷ்ணா தயாரிக்கும் 'ஏழுமலை' படத்திற்காக பொள்ளாச்சியில் உள்ள ஒரு பங்களாவில் படமாக்கப்பட்டது.

ஏழுமலையாக அர்ஜுனும், லட்சுமியாக சிம்ரனும், சந்தியாவாக மும்தஜும் நடிக்க கே.எஸ். செல்வராஜ் ஒளிப்பதிவில் திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்தார் அர்ஜுன்.

## ஆறுவித வித்தியாசமான தோற்றத்தில் அருண்குமார் நடிக்கும் "டச்"



சூப்பர் சக்சஸ் பிலிம்ஸ் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் "டச்".இந்த படத்தில் அருண்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். தன்னை முற்றிலுமாக மாற்றி அமைத்து ஆறுவித வித்தியாசமான தோற்றங்களில் நடிக்கிறார். இந்த வித்தியாசமான தோற்றத்திற்காக அருண்குமாரும், இயக்குநரும் ஆஸ்திரேலியா சென்றுள்ளனர். இதற்காக அங்கிருந்து மேக்கப்மேன் ஒருவரும் வரவழைக்கப்படுகிறார். ஒவ்வொரு விதவிதமான தோற்றத்தை கம்ப்யூட்டரில் வடிவமைத்து வருகிறார்கள். இவருக்கு ஜோடியாக நடிக்கும் நடிகை தேர்வு நடைபெற்று வருகிறது. இவர்களுடன் அறிமுகமாகும் பிரகாஷ், மணிவண்ணன், வடிவேலு, நீண்ட இடைவெளிக்குப் பின் திலகன் நடிக்கிறார்.

இதன் பூஜை இம்மாதம் நடைபெறுகிறது. "மே" முதல்வாரம் முதல் மேட்டுப்பாளையம், ஊட்டி, கோயம்புத்தூர் பகுதிகளில் படபிடிப்பு நடைபெறும்.

மனுஷன் மகான் ஆகிவிட்டான் என்பது சாதாரண ஒன்று. ஆனால் மனுஷன் மனுஷனாக வாழ்ந்தான் என்பதே வல்லமையான விஷயம்.. இதுவே இப்படம் என்று சுருக்க விளக்கமளித்தார் இதன் இயக்குனர் ராஜ்கிருஷ்ணா. கதை, திரைக்கதை, அமைத்து இயக்குனராகும் இவா, ராமராஜன், கே. ரங்கராஜ், சத்யா மூவிஸ் போன்ற இடங்களில் உதவி இயக்குனராக பணிபுரிந்தவர்.

## சரத்குமாருக்கு சாக்ஷி சவால்



வயலுககு சென்று கொண்டிருந்த தெய்வராசை மாமன் மகள் ர்ாசாத்தி வழி மறித் தாள். 'ஏன் வழி மறிக்கிற' என்று தெய்வராசு கேட்டதும் 'உங்க வயல்லே வேலை செய்யறவங்களையெல்லாம் திட்டுறீங்களாமே, வயல்ல இறங்கி வேலை பார்த்தால்தானே கஷ்டம் தெரியும்' என்று கேட்டாள். 'நான் வயல்லை இறங்கி மம்பட்டியை பிடித்து கொத்து கொத்துன்னு கொத்திப்புடுவேன்' என்று அவன் பதில் அளித்தான் 'உங்க வயலை மறந்துட்டு பத்து ஊர் தள்ளிப் போய் நீங்கள் வேலை செஞ்சு 10 ரூபா சம்பாதிச்சிட்டு வந்தீர்கள் என்றால் நீங்க என்ன கேட்டாலும் நான் தாரேன்' என்றாள். அவளது சவாலை ஏற்றுக் கொண்ட் தெய்வராசு சொன்னபடி செய்தான்.

இப்படியொரு ருசிகரமான காட்சி கே. பாலு தயாரிப்பும் 'மானஸ்தன்' என்ற படத்திற்காக படமாக்கப்பட்டது. தெய்வராசாக சரத்குமார், ராசாத்தியாக சாக்ஷி நடிக்க. கதை, திரைக்கதை, வசனம் எழுதி 'மறுமலர்ச்சி' பாரதி டைரக்டு செய்தார். பா. விஜய் எழுதிய பாடலுக்கு எஸ்.ஏ. ராஜ்குமார் இசை அமைத்தார். டி.கே.எஸ். பாபு, சிவசங்கா, லலிதாமணி ஆகியோர் நடனம் அமைக்கின்றனர். பம்மல் ரவி ஸ்டண்ட் பயிற்சி அளிக்கிறார்.


## ஆண்டவன் கொடுப்பதைத் தடுக்க முடியாது – அஜித்

நாம் ஏன் விமானம் ஓட்டக் கற்றுக் கொள்ளக் கூடாது? என்ற எண்ணம் வந்தது. இதை எனது மனைவி ஷாலினி, என் பெற்றோர், அண்ணன், அண்ணியிடம் சொன்னபோது என்னை உற்சாகப்படுத்தினார்கள். அவர்கள் கொடுத்த உற்சாகத்துக்கப்புறம் மெட்ராஸ் பிளையிங் கிளப்பில் சேர்ந்தேன். அதற்காக தகுதி தேர்வு நடந்தது. அதில் நான் தேர்வாகி விட்டேன்.



நான் ஓட்டுவது 'செஸ்னா–152' ரக குட்டி விமானம் இரண்டு இருக்கைகள் உடையது. நான் இன்னமும் பைலட் ஆகவில்லை. அதை அடைய இன்னும் பல தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும். தற்போது விமானத்தை தரையில் இருந்து கிளப்பி வானத்தில் ஒட்ட எனக்கு தெரியும். என் கூடவே இருந்து ராஜேஷ் பணிக்கர் எப்படி ஓட்டணும்னு சொல்வார்.

விமானியின் உதவி இல்லாமல் மொத்தம் 60 மணி நேரம் விமானத்தை ஓட்டி காண்பித்தால் பைலட் லைசென்சு கிடைக்கும். நான் இதுவரை 2 1/2 மணி நேரம் பயிற்சியாளர் உதவியுடன் விமானத்தை ஓட்டி காண்பித்துள்ளேன். பயிற்சி எடுக்கும் நேரம் 2 மணி நேரம் என்றாலும் வானத்தில் பறக்கும் நேரம் மட்டுமே கணக்கில் எடுக்கப்படும்.



ஓரளவு விமானம் ஓட்டத் தெரிந்ததும் பிறகு தனியாக விமானத்தை கொடுத்து, சென்னையில் இருந்து திருப்பதி வரையிலோ அல்லது சேலம் வரையிலோ கோவை வரையிலோ தனியாக 30 மணி நேரம் ஓட்ட வேண்டும். அதுக்கப்புறம் இரவு நேரத்தில் ஓட்டிப்பழக பயிற்சி கொடுப்பார்கள். பரீட்சையும் உண்டு.

மனிதனாக இருந்தால் சாதனையோடு வாழ்ந்து காட்டணும். என் மனைவியும், என் குடும்பமும் என ரசிகர்களும் எனக்கு ஆதரவாக இருந்து உற்சாகம் கொடுக்கிறார்கள். அப்புறம் என்ன ஸார் எனக்கு குறைச்சல்?!" என்கிறார்.

"ஆண்டவன் சொல்றான், அஜித் செய்கிறான். ஒண்ணு தெரிஞ்சுக்கங்க. ஆண்டவன் கொடுக்க நினைப்பதை யாராலும் தடுக்க முடியாது. அதே மாதிரி ஆண்டவன் தடுப்பதை யாராலும் கொடுக்க முடியாது. எல்லாம் ஆண்டவன் செயல்."

